விலை சதம் 25

— சுதந்திரன் —

# சுதந்திரன்
SUTANTIRAN

திருவள்ளுவர் ஆண்டு 1999 ஐப்பசி திங்கள் 15-ம் நாள் (1—11—67) புதன் றஜப் 27 | புத்தகம் 22 இதழ் 13
194 ஏ, பண்டாரநாயக்க வீதி, கொழும்பு-12. தொலை பேசி எண்-3411 த. பெ. 1183

## திருமலைதுறைமுகம்தேசியமயத்தின்விளைவு
# தொழிலாளர் வயிற்றில்
# அடி: ரூபா 112-58 சம்பள வெட்டு

### எழுச்சியும் வீழ்ச்சியும்

1961ல் நாள் சம்பளம் ரூ. 6-27
1965ல் ரூ. 7-00
1967 பெப்ருவரி ரூ. 8-67
ரூ. 9·94
1967 ஆகஸ்டு ரூ. 10-60
1967 அக்டோபரில் மீண்டும் ரூ. 6-27

### ● சிங்களத் தேர்ச்சி வேறு
### ● இடமாற்ற ஏற்பாடு
### ● வேலைத் திறன் குறையும்
### ● வேலை நிறுத்தம் ஏற்படும்

திருமலைத் துறைமுகம் திடீரென இரவோடு இரவாகத் தேசியமய மாக்கப்பட்டதைக் கேட்டு தமிழ்பேசும் மக்கள் ஆத்திரமடைந்துள்ள னரென்றும் தேசிய மயத்தின் விளைவாக திருமலைத் துறைமுகம் விரைவில் சீர்கெட்டுப் போவதுடன் தொழிலா ளர்களிடையே பெரும் கொந்தளிப்பு ஏற்படு மென்றும் தமிழரசுவட் டாரங்கள் சுட்டிக்காட் டின.

தேசியமயத்தின் விளைவாக திருமலைத் துறைமுகத்தொழி லாளரின் நாளாந்தச்சம்பளத் தில் ரூ. 4-33 குறைக்கப்பட் டுள்ளது. அவர்கள் தேசிமயத் துக்கு முன்பு தினச்சம்பளம் ரூ 10-60 பெற்றனர். தேசிய மயத்துக்குப் பின்னர் அவர் களின் சம்பளத்தை வெட்டி ரூ. 6.27 ஆகக் குறைத்துவிட் டனர். இதனால் அவர்கள்பெரி தும் கொதிப்படைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

இத்துறைமுகத் தொழிலா ளர்களுக்கு 1961ல் நாள் சம் பளம் ரூ. 6.27 வழங்கப்பட் டது. தமிழரசுக்கட்சியின் துறைமுகத் தொழிலாளர் கழ கம் கிளர்ச்சிசெய்ததின் விளை வாக கழக உறுப்பினர்களின் சம்பளம் 1965 செப்டம்பரில் மாதம் ரூ. 182/- ஆக (நாள் சம்பளம் ரூ. 7/-) உயர்த்தப் பட்டது.

ஐக்கிய துறைமுகத் தொழி லாளர் சங்கத்தின் உறுப்பினர் களின் சம்பளம் 1965 நவம்ப ரில் ரூ. 123.50 ஆக (தினச்சம் பளம் 6.77) இருந்தது. எல்லா துறைமுகத் தொழிலாளர் களுக்கும் நாள் சம்பளம் பகல் வேலைக்கு ரூ. 8.67 ஆகவும் இரவு வேலைக்கு ரூ. 9.94 ஆக வும் உயர்ந்தது.

பின்னர் தொழிற்தகராறு நீதிமன்றத்தில் நடத்தப்பட்ட தீவிர போராட்டத்தின் விளை வாக 1967 ஆகஸ்டு தொட்டு எல்லாத் துறைமுகத் தொழி லாளர்களுக்கும் நாள்சம்பளம் ரு 10-60 வழங்கப்பட்டு வந் தது.

தேசியமயம் வந்து அவர்க ளின் வயிற்றில் அடித்து விட் டது. இப்பொழுது அவர்க ளின் நாட்சம்பளம் ரூ. 6-27 ஆககுறைந்து விட்டது. (அதா வது சம்பளத்தில் மாதம் ரூ. 112-58 குறைந்து விட்

(9-ம் பக்கம் பார்க்க)




"புலி வாலைப் பிடித்திருக்கிறார்"

### மஜீதின் இரட்டை வேடம்

திருமலைத் துறைமுகத் தேசியமயப் பிரச்சினையில் மூதூர் 2வதுஎம்.பி.ஜனாப் மஜீத இரட்டை வேடம் போட்டு வருவதாக தெரி கிறது.

ஒரு தினசரிப் பத்திரி கையில் தேசியமயத்தை ஆதரித்தும், தமிழரசார் தேசியமயத்தை எதிர்ப் பதை கண்டித்தும் ஜனாப் மஜீத் அறிக்கை வெளி யிட்டிருந்தது தெரிந்ததே.

ஆனால், மறுநாள் ஜனாப் மஜீத் உள்நாட்டு அமைச்சருக்கு டெலி போன் செய்து, தான் தேசியமயத்தை ஆதரிப் பது போல காட்டிக் கொண்டது தமது கட் சியினரைத் திருப்திபடுத் தவேயென்றும், தேசிய மயத்தால் திருமலையில் வாழும் தமிழருக்கு மட்டு மின்றி முஸ்லிம்களுக்கும் ஆபத்து ஏற்படுமென் றும், தேசியமயத்தை தீவி ரமாக எதிர்க்கும்படியும் கூறினரென்று தெரிகிறது.

## இருள்சூழ்ந்த எதிர்காலம்

தேசிய அரசாங்கத்தின் சில நடவடிக்கை கள் எதிர்க்கட்சியினருக்குச் சாதக மாக அமைந்துவிடுகின்றன. காரணம் எதிர்க் கட்சிக் கொள்கைகளைத் தேசிய அரசாங்கம் தன்னை அறியாமலே அமுல்நடத்தி வருவது தான். எதிர்க் கட்சியினர் பல்வேறு துறைக ளில் அரசாங்கத்தின்மீது சுமத்தப்படும் 'நிர்ப்பந்தங்களுக்குப்' பணிந்துகொடுப்பதால் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன.

திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப் பட்டதும் இத்தகைய நடவடிக்கைகளில் ஒன்ருகும்.

தங்களின் கொள்கைகளைத் தேசியஅரசின் வாயிலாகக் கூடியவரை அமுல்நடத்திவிட வேண்டு மென்ற எதிர்க் கட்சியின ரின் அரசியல் தந்திரம் இதனால் வெற்றி பெறு கிறது. இந்தவெற்றிதான் இடைத்தேர்தல்களில் எதிர்க் கட்சியினருக்கு வெற்றியைத் தேடித் தரு கிறது.

திருமலைத் துறைமுகத் தேசிய மயம் எதிர்க்கட்சி யினரின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று. இதனை நிறைவேற்றுவதற் காக அவர்கள் தொழிற் சங்கங்களைக் கருவியாகப் பயன்படுத்தினர். இடது சாரித் தொழிற்சங்கங்கள் மிரட்டல்கள், வேலை நிறுத் தங்கள் மூலம் அரசாங்கத் தைக் கட்டாயப்படுத் தின.

அதே சமயத்தில் எதிர்க் கட்சியினர் மற்றொரு தந் திரத்தையும் கையாண்ட னர். "அரசாங்கம் தமிழர சாரிடம் சரணாகதி அடைந்து, திருமலைத் துறைமுகத் தேசியமயத் தைக் கைவிட்டுள்ளது. தமிழரசாரே இன்று ஆட்சி புரிகின்றனர்" என் றெல்லாம் சிங்கள மக்க ளிடையே தீவிர பிரசாரம் நடத்தினர், இறுதியில் அவர்களின் தந்திரம் பலித் தது.

திருமலைத் துறைமுகத் தைத் தேசியமயமாக்கிய தால் தேசிய அரசாங்கம் எந்த நன்மையும் பெறப் போவதில்லை. இத்துறை முகமும் இனிமேல் நஷ் டத்திற்தான் நடை பெறும் என்பதற்கு தேசி யமயமாக்கப்பட்டகாலித் துறைமுகமே சான்று.

தேசியமயத்தால் தொழி லாளர் சம்பளத்தில் மாதம் ரூ. 112-50 குறைக்கப்பட்டு விட்டது. அவர்களைப்பட்டினி போடும் கொடிய திட்டம் இது.

தேசியமயமாக்கிய ஒரே வாரத்தில் துறைமுகச் சிப்பந்திகள்மீது சிங்கள நிபந்தனை விதித்திருப்ப தாக அறிகின்ருேம். தமிழ் பகுதியிலிருக்கும், தமிழ் தொழிலாளர் பணியாற் றும் தமிழ் துறைமுகத் துக்குச் சிங்களத் தேர்ச்சி தேவைப்படுவதேன்?

தற்போது அங்கு வேலை செய்யும் தமிழ் தொழி லாளர்களை வேறு துறை முகங்களுக்கு இடமாற் றம் செய்வதற்கும் ஏற் பாடு நடைபெறுகிறதாம். அவர்களுக்குப் பதில் சிங் களத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவார்களென் பதில் ஐயமில்லை.

திருமலை மாவட்டம் ஏற்கனவே சிங்களக் குடி யேற்றத்துக்குப் பலியாகி யுள்ள பகுதி! அத்துடன் துறைமுகமும் சிங்களமய மானல், தமிழ்பேசும் மக் களின் எதிர்காலம் இரு ளடைந்துவிடும்.

## இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகைச்சுவைச் சித்திரம்

## மனச் சாட்சி

''ரோபகாரி.........

இருபதாம் நூற்றூண்டின் தொடக்கத்தில் ஆரம்பிக்கப் பட்ட ஒரே ஒரு தமிழ் தினசரி தான் பரோபகாரி.

பல்லாயிரக் கணக்கான வாசகர்களால் பாராட்டப் பெற்று வளிவந்து கொண்டிருக்கும் பரோபகாரியைப் பார்க்காதவர்கள் கிடையாது. படிக்காதவர்களும் இல்லை.

பரோபகாரி பறக்காத திக்குகள் இல்லை. பார்க்காத நாடுகளில்லை. போகாத ஊர்கள் கிடையாது. பரோபகாரிக்கு இன்றும் கூட வாசகர்களின் அளவுகடந்த வரவேற்பு குறைவில்லாமல் இருந்து வருகிறது.

பரோபகாரியில் கலை விமரிசனம் எழுதுவது என் பொறுப்பு. இந்தப் புகழ் பெற்ற உத்தியோகம் என்னை வந்தடைந்து இன்றோடு சுமார் இருபது ஆண்டுகள் ஆகி விட்டன என்றால்... பரோபகாரியைப் புகழும் வாசகர்கள் என்னையும் சேர்த்துத்தான் புகழ்கிறார்கள் என்பதை நான் சொல்லாமலே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள்.

பரோபகாரியில் கலை விமரிசகராகப் பதவி ஏற்றது தொடக்கம் இன்று வரை தெருக்கூத்து நடிகர் முதல்' நாடகம், நாட்டியம், சங்கீதம் சினிமா, ஓவியம், சிற்பம், கைப்பணி, ஆகியவைகளையும், அவைகளைக் கட்டிக் காத்து வளர்க்கும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரையும் பற்றிய பூராவிபரங்களையும் சேகரித்து என் காரியாலய அறைக்கு அடுத்த ஒரு அறையில் ஸ்டாக் வைத்துக்கொண்டிருப்பதில் எனக்கு நிகர் நானல்லால் வேறில்லை.

பரோபகாரியில் கலைவிமரிசனம் செய்து வரும் எனக்கு அதாவது மிஸ்டர் 'தெருவோடி அவர்களுக்கு பூர்வ ஜன்ம பாக்கியமாக நாள் தவறாமல் (வாழ்த்தோலைகள் எழுதும் காலத்திலிருந்து போஸ்ட் கார்ட் காலம் உட்பட) வாழ்த்துரைகள் இன்றும் வந்து கொண்டிருப்பதை உங்களுக்குச் சொல்வதில் எனக்கென்ன ஒன்றும் குறைந்துவிடப்போவதில்லை. என்றாலும், என்னைத் தற் புகழ்ச்சிக்காரன் என்று நீங்கள் நினைக்கக்கூடாதே என்பதற்குத்தான் இத்தனை தூரம் பிகுபண்ணிக் கொள்கிறேன்.

என்னைப்பற்றி நான் அளப்பது உங்களுக்குப் பிடிக்காத போது உங்களுக்குப் பிடித்ததைத தானே சொல்ல வேண்டும்... அப்படியானால் இதோ பிரபல நடிகரும், எழுத்தாளரும், வசனகர்த்தாவுமான உயர் திருவாளர் (மிஸ்டர்) சகாதேவன் பீ ஏ... ஹானர்ஸ் அவர்களைப் பற்றி ஒரு வார்த்தை... அல்ல, அல்ல... பல வார்த்தைகள்... சொல்லட்டுமா!

அதாவது மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் அவர்கள் வரலாறு வளர்ந்த கதை: இதைப்படித்து விட்டுப் 'பரோபகாரி'யை பழிக்கமாட்டீர்கள், பத்திரிகாலயத்திலிருந்தும், என் பூர்வஜன்ம பாக்கியமான உத்தியோகத்திலிருந்தும் விடுதலை செய்யமாட்டீர்கள் என்று உறுதி வாங்கிக் கொள்கிறேன்.

அந்தக் காலத்தில் எத்தனையோ நாடகக் கம்பெனிகள், நாட்டிய சபாக்கள் இருந்தன வாயினும் மிகவும் பிரசித்தி பெற்று விளங்கிய ஒரு நாடகக் கம்பெனி கொழும்பு மாநகரத்தில் சிந்தாமணிப் பேட்டையில் இருந்தது.

என்ன சிந்தாமணிப் பேட்டை என்ற இடம் இருந்ததாக நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? கேள்விப்பட்டிருக்கமாட்டீர்கள் என்பது எனக்கு மட்டும் நிச்சயமாகத் தெரியும்... ஆனால் இன்றைக்கு சயந்திபுரம் அல்லது சிந்துப்பிட்டி என்றால் அப்படியான கேள்விக்கே இடமேற்படாதல்லவா!

அந்தச் சிந்தாமணிப் பேட்டையில்தான் நவரசங்களும் ததும்பி வழிந்து கொண்டிருந்தது ஒரு காலத்தில். என்றால் மிகையாகாது... வீட்டிற்கு வீடு, கலையரசி இன்ப நடம் புரிந்த காலமய்யா அது...

அறிஞர்களும், கலைஞர்களும் நிறைந்து வந்த சிந்தாமணிப் பேட்டையில்கண்ணைக் கவரும் அதியற்புதமான அந்தக் கட்டிடம்... அடடடா... அது இருந்த இடமே இன்று குச்சில் குடிசைகளின் பிறப்பிடமாகி விட்டது என்று எழுதும்போது என் கண்களில் இரண்டு சொட்டுக்களல்ல, எண்ணற்ற சொட்டுக்கள் பெருகி கண்ணீர் அருபெருக் கெடுக்கிறத...என்ன செய்வோம்... காலவேகத்தில் எல்லாம்... மாறலாம்... எதுவும்... மாறலாம்... ஆனால் ... மனச்சாட்சி?

''ஸ்ரீ... சங்கரதேவ கல்யாண ரசிக பூபதி கலா ரஞ்சனி நாடக சபா'' வின் பெயர் மட்டும் அந்தக் காலத்து வாசகர்களின் மனத்தை விட்டு மாறாது என்பதற்கு அந்தப் பெயரின் நீண்டு வளர்ந்த பெருமையே சான்று...

அப்படிப் பேர் வாங்கிய ஸ்ரீ. ச. க. ர: பூ. க. ர. நா சபாவினால் ஒரு சமயம் சத்தியவான் சாவித்திரி நாடகம் சிறப்பாக நடந்து வருகையில் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்து விட்டதாகவும், சத்தியவான் தற்கொலை செய்து கொண்டதாகவும் சபாவின் சொந்தக்காரரும், பிரதம நடிகருமான ராஜபார்ட் (எமதர்மராஜன்) மகாதேவன் காணமற் போய்விட்டதாகவும், 'பரோபகாரி'யின் பழைய ஏடுகள் சுடச்சுட வெளியிட்டிருந்தன.

ராஜபார்ட் மகாதேவன் காணமற் போனதால் மேற்படி ஸ்ரீ.ச. க. ர. பூ. க. ர. நா. சபா மூடுவிழா நடத்தப் படாமலே மூடப்பட்டு விட்டதாக பரோபகாரியின் இன்னொருஏடு ஒலித்துக்கொண்டிருந்தது என்னப்பா மிஸ்டர் 'தெருவோடி' அவர்களே...எங்களிடமா சரடு விடுகிறீர்கள் என்று கேட்காதீர்கள்... நான் சொல்ல வந்த கதைக்கு முகவுரை வேண்டாமோ இல்லையோ! அதற்காகவே இத்தனையும் அளந்தேன்... ஆனால் அந்தப் பிரபல நாடக சபா மூடப்பட்டதும், நாடக விசிறிகள் இருக்கிறார்களே அவர்கள் ராஜபார்ட் மகாதேவனைப் பற்றி பரோபகாரிக்கு எழுதிக் கொண்டுதானிருந்தார்கள்...

எனக்கு உத்தியோகம் வந்த நாளிலிருந்து விசிறிகளின் முக்கியமான இந்தக் கேள்விக்கு பதில் கூற வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்...

எல்லாம் நம் எண்ணம் போல நடப்பது இல்லை என்கிறார்களல்லவா! அது இந்த கலை விமரிசகர் மிஸ்டர் தெருவோடியிடம் தன்வாலையாட்ட முடியவில்லை. 'பரோபகாரி' யின் பழைய குறிப்புகளும், என் சகதர்மிணியின், எங்கள் வீட்டு கொல்லைப்புற செய்தி ஸ்தாபனம்) உளவுச் செய்திகளும் என் கவலையைக் கப்பலேற்றி ஓட்டி விட்டன...அது மட்டுமா... காணமற் போன ராஜ பார்ட் மகாதேவனை மீண்டும் நாடக மேடையில் ஏற்றி வைத்த என்னை உங்கள் புகழ் மாலை (முள்ளில்லாதது) அலங்கரிக்குமென்று கழுத்தை நீட்டிக் கொண்டு அன்று நடந்த வரவேற்புக் கூட்டத்தில் காத்திருந்த என்னை ஒதுக்கி வைத்து விட்டு ராஜ பார்ட் மகாதேவனையும், மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸையும் மட்டும் பொன்னாடைச் சூட்டிப்புகழ்ந்தீர்களே...அது கிடக்கட்டும்... உங்கள் மனச்சாட்சி அது...

ஏதோ! நீங்கள் கேட்டு வந்த ராஜபார்ட் மகாதேவன் வந்து விட்டால் போதுமா என்ன! அவரையும், அவர் [illegible] சகாதேவன் பீ.ஏ.ஹானர்ஸையும் கண்டு பிடித்த கதையையாவது படித்து விட்டு ஒரு 'தாங்க்ஸ்' ஆவது சொல்லுவீர்களானால்...! மனசாட்சி எப்படியோ?...

இப்போது ஒரிஜினல் கதைக்கு வருகிறேன். அவசரப் படாமல் நிதானமாகப்படித்து விட்டு உங்கள் மனசாட்சி சரி தானா என்று சொல்லுங்கள்.

மலைநாட்டில் பிறந்த பத்து லட்சம் மக்களும பழைய அரசாங்கங்களின் மன சாட்சியால் பிறப்புரிமை இல்லாமலிருந்தது உங்களுக்கு ஞாபகமிருக்கலாமல்லவா... அது பழைய கதைதான். என்றாலும், பிறப்புரிமை இல்லாமலிருந்த மக்களின் மனசாட்சியை மேலும் சோதிக்கக்கூடாதென்றோ என்னவோ, கடவுளின் மனசாட்சி மெழுகைப்போல உருகிப் போய் விட்டது. அதனால் அரசாங்கத்தின் மனசாட்சியும் திடீரென்று மாறி விட்டது ஒரு நாள்......

பத்து லட்சம் மக்களும் தாமிழந்திருந்த பிறப்புரிமை, வாக்குரிமை, குடியுரிமை அத்தனையும் ஒருமிக்க, ஒரே நாளில் ஏகபோகமாகப்பெற்று விட்டார்கள். கத்தியின்றி, இரத்தமின்றி, யுத்தமின்றி மனச்சாட்சியினால் காலத்தையேமாற்றிகடவுளின்மனச்சாட்சியை மாற்றி இழந்த உரிமைகள் அத்தனையும் பெற்றுக கொடுத்த தலைவர்களிடு உறுதியான மனச்சாட்சியிருக்கிறதே அது காலத்தால் மாறுதது... இந்தத் தலைவர்களின் அடிச்சுவடுகளை மதித்து நடக்காமலிருந்தால் நமது ராஜ பார்ட் மகாதேவனைக் கண்டு பிடித்திருக்க முடியுமா அல்லது மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹனர்ஸை ரசிக பெரு மக்களுக்கு அறிமுகப்படுத்தியிருக்கத்தான் முடியுமா?

இந்தப் பிறப்புரிமைச் சுதந்திரம் கிடைக்கவே கிடைத்தது. மலைநாடு முழுவதும் திருவிழாக் கோலம் நடந்த வண்ணமாகவே இருந்தது.

மலைநாட்டு மக்களின் சுதந்திர விழாவைப் பற்றிய செய்திகளை 'ப்ரோபகாரி' இடைவிடாமல் வெளியிட்டு மக்களின் உள்ளத்தில் தனக்கே உரித்தான இடத்தைப் பிடித்துக்கொண்டது. அந்த இடத்தில் மிஸ்டர் 'தெருவோடி' (அதுதான் என் பெயர்) தனக்கும்ஒரு இடத்தைஉரிமையாக்கிக் கொண்டாரென்று சொல்லலாமல்லவா?...

சுதந்திர விழாக்களைத் தொடர்ந்துதேர்தல் விழாவும் வந்து கொண்டிருந்தது. உரிமைக்காகவே உழைத்து உழைத்து வெற்றி கொண்ட தலைவர்கள் ஏற்கெனவே பல்வேறு கலைச் சங்கங்களைத் தோட்டத்திற்குத் தோட்டம் ஆரம்பித்து மலைநாட்டையே கலைக் கோயிலாக ... கலைக் கோட்டையாக உருவாக்கி இருந்ததால் ஆயிரக் கணக்கான பட்டதாரிகளும், அறிஞர்களும், சமுகத் தலைவர்களும் கல்வியறிவில் ஒப்பாருமிக்காருமின்றி உருவாக்கப்பட்டிருந்தார்கள். பார்த்த இடங்களிலெல்லாம் ...கலாசாலைகள் பள்ளிக்கூடங்கள் உலகத்திலேயே எவராலும் சாதிக்க முடியாத அத்தனைப் பெரிய சாதனையை தலைவர்கள் எனப் பட்டவர்கள் செய்து வெற்றி கண்டிருந்தார்கள்.

இப்படியான சூழ்நிலையில் தேர்தல் வந்து விட்டால் கேட்கவா வேண்டும் எங்கு பார்த்தாலும் தேர்தல் பிரச்சாரங்கள, தேர்தல் நாடகங்கள், கூட்டங்கள, தேர்தல் கச்சேரிகள் இப்படி எத்தனைஎத்தனையோ!

இந்தத் தேர்தல் பிரச்சாரத்திறகுத்தான் ''ஸ்ரீ தர்மதேவ ரசிக ரஞ்சனி நாடக சபா'' வை ஒரு வேட்பாளர் தமது கட்சியின் சார்பில் கொண்டிருந்தார். ஸ்ரீ தர்மதேவ ரசிக ரஞ்சனி நாடக சபாவினால் எத்தனையோ பிரச்சார நாடகங்கள் வெற்றிகரமாக நடந்தேறின. சபாவின் மானேஜராக சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் வெற்றி முரசம் கொட்டினார்.

நாடகங்கள் நடந்ததுதான் தாமதம்... ராஜபார்ட் மகாதேவனின் ரசிகர்கள் ''பரோபகாரி''யில் அவரைப் பற்றிக் கேட்கத் தொடங்கிவிட்டார்கள். அவர் எங்கே எங்கள் அபிமான யமன் நடிகர் என்று கேளாதவர்கள் இல்லை.

மேற்படி நாடக சபாவின் பெயரிலிருந்தும் பழைய 'பரோபகாரி' பத்திரிகைகளிலிருந்தும் ஏதாவது புலன் அகப்படுமோவென்று ஆராய்ந்தேன்.

என் சி. ஐ. டி. வேலை மிகப் பிரமாதமாக இல்லாவிட்டாலும் மனச்சாட்சியின் மகிமையையுடையவரான ராஜபார்ட் மகாதேவனின் விசிறிகள் இன்று இருந்தால் என் மனச்சாட்சியைப் பிரமாதம் பிரமாதம் என்று போற்றுவார்கள்— புகழுவார்கள்.

ஸ்ரீ தர்மதேவ ரசிக ரஞ்சனி நாடக சபாவின் மானேஜரும், பிரபல நடிகருமான மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் அவர்களுக்கு சுமார் 20 வயதிருக்கும். தேர்தல் பிரசாரத்தில் அவருக்கு ஈடாக நாடகம் நடத்துவதிலோ நடிப்புத் துறையில் நடிகர் திலகத்தையோ, மக்கள் திலகத்தையோ ஒப்பிட்டு நடிப்பதிலோ மிஸ்டர் சகாதேவன் பி. ஏ. ஹானர்சுக்கு மிஞ்சியவர் யாருமில்லை என்றே கூறலாம்.

சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸுடன் நடிக்கும் சக நடிகர் வில்லன் பார்ட் தர்மதேவனும் நடிப்பில் சளைத்தவரல்ல. அவரது நடிப்பு பாரம்பரிய நடிகராகவே எடுத்துக் காட்டியது. தர்மதேவனும், சகாதேவனும் மேடையில் வந்துவிட்டாலே போதும்... ரசிகப் பெருமக்களின் ''கைதட்டல்'' வரவேற்பு அடங்க முப்பது நிமிடங்களாவது அறிஞர் குழாத்துக்கு அவசியம்.

மேற்படி மானேஜரும் நடிகருமான மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் பட்டதாரி, பட்டதாரி என்ற காரணத்தால் தமது பருவப் புத்திரிகளை சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸுக்கு மண முடித்து வைக்க வேண்டுமென்றும், சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸின் ''மாமா'' என்று மார் தட்டிச் சொல்லிக்கொள்ளும் வாய்ப்பைப் பெற வேண்டும்

(14-ம் பக்கம் பார்க்க)

"தெருவோடி"

இதோ ஒரு
தலைசிறந்த வாய்ப்பு!

சு ★ நியர்யமான கட்டணத்தில்...
த ★ குறித்த நேரத்தில்...
ந் ★ கவர்ச்சியான அமைப்பில்...
தி ★ திறமையான வேலைப் பாட்டுடன்...
ர ★ சகல அச்சுவேலைகளும் உடனுக்குடன் செய்து
ன் கொடுப்போம்.

அச்சகம்

சுதந்திரன் அச்சகத்துக்கு நீங்களும் ஒரு சந்தர்ப்பத்தை ஏன் கொடுக்கக் கூடாது?

20 ஆண்டுகளாக
பணியாற்றி வரும் அச்சகம்.

194ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




டி. கே. சல்மன்,
ஜாஎல.

கே: குள்ளமாக இருப்பவர்களுக்கு அறிவு குறைவு என்பது உண்மையா?

ப: இல்லை. உடல் குள்ளமாகிவிட்டதால் மூளை குள்ளமாகிவிடாது.

ஃ

''வளர்பிறை திராவிடன்'',
பலாங்கொடை.

கே: தீபாவளி நன்னாளில் வாசகர்களுக்கு உங்கள் வாழ்த்தென்ன?

ப: மென்மேலும் கேள்விக் கணைகளைத் தொடுப்பதற்காக நீண்ட ஆயுள் பெறுக என்பதே எனது வாழ்த்து.

ஃ

ஐ. சேதுராஜா,
உயிலங்குளம்.

கே: அன்புக்கும் காதலுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப: காதலுக்குள்ள வேகம் அன்புக்குக் கிடையாது. ஆனால் அன்புக்கு நீண்ட ஆயுள்—காதலுக்கோ குறுகிய ஆயுள். காதலுக்கும் அன்புக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சில சமயங்களில் காதலே அன்பாக மாறிவிடுவதுமுண்டு.

ஃ

கே. நவரத்தினம்,
நெடுங்கேணி.

கே: என் மனம் எட்டாப் பழத்தை எண்ணிக்கொண்டிருக்கின்றதே, என்ன செய்யலாம்?

ப: கொட்டாவி விடப் பழகிக்கொள்ளலாம்.

ஃ

க. மலர்ராஜன்,
திருகோணமலை.

கே: நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன், அவளது சம்மதத்தை அறிவது எப்படி?

ப: அவளது சம்மதத்தை வேறு யாரிடமும் கேட்டு அறிய முடியாது. அவளிடமே கேட்க வேண்டும்.

கே: தற்போது நடைபெற்றுக்கொண்டு வருகின்ற இடைத் தேர்தல்களில் எல்லாம் சுதந்திரக் கட்சி வெற்றிபெற்று வருவதன் காரணம் என்ன?

ப: ஒவ்வொரு இடைத் தேர்தலிலும் அவ்வப்போது சூடு பிடித்துள்ள பிரச்சினைகளை உள்ளடக்கிய பிரசார தந்திரத்தை அவர்கள் கையாள்வதால்

ஃ

செல்வி அ. சுபத்திரா,
கம்பளை.

கே: குயுக்தியாரே, நான் ஒரு கேள்வியைக் கேட்டால் விடை அளிக்குமுகமாக மற்றொரு கேள்வியை நீங்கள் கேட்கிறீர்களே, ஏன்?

ப: ஒரு கேள்விக்கு மற்றொரு கேள்வி மூலம் மறுமொழி கொடுப்பதும் விடையளிக்கும் ஒரு முறையாகும்.

ஃ

அ. வி. யேசுதாசன்,
யாழ்ப்பாணம்.

கே: விஞ்ஞானத்தால் மக்கள் மக்களாக வாழ்கிறார்களா? அன்றேல், மாக்களாய் வாழ்கிறார்களா?

ப: மக்களாக—அதுவும் தெளிவு பெற்ற மக்களாக—வாழ்கிறார்கள். மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விஞ்ஞானம் அவர்களுக்கு உதவுகிறது.

ஃ

யாழினி,
மன்னிங்பட்டினம்.

கே: தமிழ் மொழி உபயோகச் சட்டம் இருந்தும் தமிழில் காசுக்கட்டளை, தந்தி போன்ற அலுவல்கள் தமிழில் செய்ய முடியாமல் இருப்பதேனோ? கந்தோர் அதிகாரிகள் ஏற்க மறுப்பதேன்?

ப: சட்ட விதிகளை அமுல் நடத்துவதற்குப் போதிய தமிழ் அதிகாரிகள் நியமிக்கப்படாததே இதற்கு முக்கிய காரணமாகும்.

சுந்தர்,
ஆரையம்பதி.

கே: எனது காதலிக்கு ''தீபாவளி'' வாழ்த்து அனுப்பலாம் என்று யோசிக்கிறேன. வீட்டுக்கு அனுப்பினால் அம்பலமாகுமா, இல்லையேல் பாடசாலைக்கு அனுப்பினால் அம்பலமாகுமா என்று மனம் தடுமாறுகிறது. இதற்கு வழி?

ப: நேரில் சந்தித்து கையில் கொடுப்பதே சிறந்த வழி.

ஃ

சொலொமன்,
ஆனைப்பந்தி.

கே: ஆணும் பெண்ணும் கண்களாலும் சைகைகளாலும், கதைத்தும் கடிதங்கள் எழுதியும் நீடித்த காலமாக காதலித்து வருகின்றனர். அவள் போக்கை மிகுந்த பொறுமையுடன் கவனித்த பின்பு அவள் மேல அவன் திடமான நம்பிக்கை கொண்டான். பின் அன்புக்கடிதம் வரைந்தான். அதற்கு அவள் தனது பதிலில் சாதி, சமயம் இடையூறாக இருக்க இது எப்படி நிறைவேறும் என்று எழுதுவாளாகில், தொடர்ந்து அவளுக்கு கடிதம் வரையலாமா?

ப: ஊஹூம்......!

ஃ

எஸ். என். கே. பாலசுந்தரம்,
பதுளை.

கே: சமண மதத்திற்கும் பௌத்த மதத்திற்கும் உள்ள வேற்றுமை என்ன?

ப: பலத்த வேற்றுமை உண்டு. சமணம் கடவுள் இடையாதென்பதில் தீவிரப் போக்கைக் கையாள்கிறது. பௌத்தமோ இவ்விடயத்தில் ஒரு நடு வழிக் கொள்கையை அனுஷ்டிக்கிறது. பௌத்தம் நாஸ்திகக்கொள்கையைத்தன்னகத்தே கொண்டுள்ளதெனினும் அதனைப் பிரசாரம் செய்வதில்லை. சமணம் தீவிர நாஸ்திக சமயமாகும்.

ஃ

அழகன் ஆரயம்பதி,
ஆரையம்பதி-3.

கே: இன்பம் அதிகம் இருப்பது ஆண்களின் காதலிலா? பெண்களின் காதலிலா?

ப: காதல் என்பது உள்ளத்திலிருந்து எழும் ஒரு தீவிர அன்பு உணர்ச்சி. அந்த உணர்ச்சியால் இன்பம் ஏற்படுவது உள்ளத்துக்கேயன்றி உடலுக்கன்று. காதல் உடலின்பத்துக்கு வழிகாட்டுமேயன்றி அதிலிருப்பது உள்ள—இன்பம் மட்டுமே. எனவே அது இருபாலரின் உள்ளங்களுக்கும் சம இன்பமளிக்கக் கூடியதே.

ஃ

சொல்லின் செல்வன்,
கொட்டடி.

கே: முயற்சி இல்லா விட்டால் எவராவது முன்னுக்குவர முடியுமா?

ப: முன்னுக்கென்ன? பின்னுக்கு கூட போக முடியாது முயற்சியின்றி.

கே: சாதித்துவே சத்தை முறியடிக்க தமிழ்காங்கிரஸ் எப்பொழுதாவது முட்பட்டிருக்கின்றதா?

ப: இல்லை. நல்ல காரியங்களை முறியடிப்பதிற்தான் அதன் அக்கறை!

ஃ

அ. சிவப்பிரகாசம்,
ஏழாலை மேற்கு.

கே: என்னுடைய நண்பர் ஒருவர் தினமும சிங்கள வகுப்புக்குச் செல்கிறார். கேட்டால் உத்தியோகத்திற்கல்ல, அறிவுக்கு என்கிறார்?

ப: தமிழில் இல்லாத அறிவுச் செல்வம் அப்படி என்ன கொட்டிக் கிடக்கிறது சிங்களத்தில்?

ஃ

ஏ. எஸ். எம். றஜபுத்தீன்,
எட்டியாந்தோட்ட.

கே: பாசம், பற்றுதல், அன்பு என்பவற்றை விளக்க உதாரணங்கள் காட்டும்போது தாய் என்ற சொல்லே உதவியாகக் கொள்ளப்படுகிறது. தந்தை அவ்வாறு இடம்பெறுவதில்லை. ஏன்? (உதாரணமாக தாய் நாடு...என்பன)

ப: தமிழிற்தான் தாயன்புக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். இதர சில மொழிகளில் தாய் தந்தையர் இருவரின் பாசமும் சமமாகவே கருதப்படுகிறது. தமிழில் 'தாய் நாடு' என்றால் ஆங்கிலத்தில் 'தந்தையர் நாடு' என்று கூறுகின்றனர். பாரதியாரும் அப்படியே பாடியுள்ளார்.

ஃ

அருணோதயம்,
சித்தங்கேணி.

கே: சிந்தனையென்ன? யோசனையென்றால் என்ன? கற்பனையென்றால் என்ன?

ப: சிந்தனைக்கு எல்லை கிடையாது. ஒரு சிந்தனை உதித்துவிட்டால் அதனை அத்திவாரமாகக் கொண்டு மற்றொரு சிந்தனைக்குத் தாவலாம். அவ்வாறு சிந்தனை வளர்ந்து கொண்டே போகும். யோசனை ஒரு எல்லையை கொண்டது. ஒரு திட்டத்தின் தன்மை அதில் அடங்கியிருக்கும். கற்பனை என்பது சில உண்மையற்ற கருத்துக்களை உள்ளத்தால் சிருஷ்டித்தல். இதற்கு ஆழமற்ற இலகு சிந்தனை இருந்தால போதுமானது.

ஃ

என். இராமலிங்கம்,
பருத்தித்துறை.

கே: அண்மையில் 21வது மாநாட்டை நடத்திய பெ. கட்சியினர் அடுத்த வருடம் எத்தனையாவது மாநாட்டை நடத்துவார்கள்.

ப: 42-வது மாநாட்டை!

ஃ

ஞானதிதன்,
ஊர்காவற்றுறை.

கே: நான் ஒரு நடிகனாக விரும்புகின்றேன இதற்கு யாது செய்தல் வேண்டும்?

ப: நடித்துப் பழக வேண்டும்! நீந்தாமல் நீச்சல் வீரனாக முடியாது, அம்மாதிரி நடிக்காமல் நடிகனாக முடியாது.

ஃ

ரி. ஆர். நாதன்,
கொழும்பு-15.

கே: திருமலைத் துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டதின் விளைவு என்ன?

ப: சட்டியிலிருந்து நெருப்பில் விழுந்ததுதான் விளைவு.

திருவாளர்
குயுக்தியார்
மே/பா சுதந்திரன்
194, ஏ பண்டாரநாயக்கா வீதி,
கொழும்பு-12



செல்வாக்கு, பிரச்சினை

மொழிப் பிரச்சினை தீர்ந்ததும், தி. மு. க. செல்வாக்கு இழந்துவிடும்.

—காமராசர்.

—அப்படியானால், இந்தியா சுதந்திரம் அடைந்ததுடன் இந்திய தேசிய காங்கிரஸ்செல்வாக்கு இழந்திருக்கவேண்டுமே என்று கேட்கிறார் ஒரு தி. மு. க. பிரமுகர்.

உருவாக்குவதும் உலைவைப்பதும்

ஒற்றுமையை உருவாக்கியது தேசிய அரசாங்கம்.

—பிரதமர்.

—அந்த ஒற்றுமைக்கு உலை வைப்பதும் தேசிய அரசாங்க அமைச்சர்கள்தான் என்பதும் பிரதமருக்கு தெரியவேண்டுமே!

மனநோய் ஆராய்ச்சி

மனநோய் பற்றி அரசாங்க மனநோய் சேவை தற்போது ஆராய்ந்து வருகிறது.

—செய்தி.

—அமைச்சர்களைப் பிடித்துள்ள மனநோயும் ஆராயப்படுமா?

அவரது கேள்வி

அரசாங்க ஊழியர்கள் வேலைக்கு காலை 9.10க்கு பின் வந்தால் தண்டிக்கப்படுவர்.

—செய்தி

—வந்து ஒப்பமிட்டுக்கொண்டிருந்தால் தண்டனை ஏதுமில்லையே என்று கேட்கிறார் ஒரு அரசாங்க ஊழியர்.

ராசிக்கின் அரசியல்

முஸ்லிம்களுக்கு கட்சி தேவையில்லை.

—சேர். ராசிக்.

—சேர். ராசிக்போல பச்சோந்தி அரசியல்வாதிகளாக முஸ்லிம்கள் இருக்கவேண்டுமா என்று கேட்கிறார் ஒரு முஸ்லிம் பிரமுகர்.

பாக்கியசாலிகள்

கண்டி மாநகரசபை வட்டாரங்கள் அதிகரிக்கப்படும்.

—செய்தி.

—அதை எதிர்ப்பதற்கு ஒரு பொன்னம்பலம் இல்லாததால், கண்டி மக்கள் அதிர்ஷ்டசாலிகள் என்கிறார் ஒரு யாழ்ப்பாணவாசி!


பாட்டாளி முதல் பணக்காரன் வரை
எல்லோரும் புகைப்பது
கமலா பீடி
ஒரு முறை வாங்கி உபயோகித்தால அதன் உண்மை விளங்கும்
கமலா ஸ்டோர்ஸ்,
தந்தி: தாமரை
நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு-11.
தொலைபேசி:
3597—6522.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற நிகழ்ச்சிகளின் தமிழ் மொழி-பெயர்ப்பு ஹன்சாடில் பதிய வேண்டும்

## இரத்தினம் தீர்மானம்

சபை நிகழ்ச்சிப் பதிவேட்டில் (அஞ்சாட்டில்) பேச்சுக்கள் முதலியனவற்றின் மொழிபெயர்ப்பு, —பிரதிநிதிகள் சபையில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் நடைபெறும் பேச்சுக்கள் வினுவிடைகள் முதலியன யாவற்றையும் தமிழிலும் தமிழிலும் ஆங்கிலத்திலும்நடைபெற்றபேச்சுக்கள் வினுவிடைகள் முதலியன யாவற்றையும் சிங்களத்திலும் சபை நிகழ்ச்சிப் பதிவேட்டில் (அஞ்சாட்டில்) வெளியிட உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தைப் பாராளுமன்றத்திற் பிரேரிப்பதற்காக கிளிநொச்சிப் பிரதிநிதி திரு. கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

கீழ்காணும் பிரேரணைகளுக்கும் திரு. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

(1) முழுநிறைவுள்ள கமத்தொழில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை 1967 ஆம் ஆண்டு முடிவதற்குள் கிளிநொச்சியில் நிறுவுவதற்கு, உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(2) ஏனைய சமய அரசாங்க ஊழியர்களுக்கு வழிபாட்டிற்காக ஒய்வு கொடுக்கப்பட்டிருப்பது போல இந்து சமய அரசாங்க ஊழியர்களுக்கும் வெள்ளிக்கிழமை தோறும் இரண்டு மணித்தியால ஓய்வு அடுத்தமாதம் தொடக்கம் கொடுகக்கப்படவேண்டும்.

(3) கிளிநொச்சிப் பட்டணத்திற்குக் குழாய் நீர் வழங்கல்— வடிகால் அமைத்தல் திட்டத்திற்குமேல் முன்னீடு கொடுத்து அத்திட்ட வேலையை 1967 ஆம் ஆண்டு முடியுமுன் தொடங்க உடனே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

(4) யாழ்ப்பாண மாநகர் முழுவதற்கும் குழாய் நீர் வழங்குவதற்கும் வடிகால்களை அமைப்பதற்கும் இவ்வாண்டு முடிவதற்குள் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

## இராசதுரை பிரேரணை

மட்டக்களப்புப் பிரதிநிதி திரு செ. இராசதுரை கீழ்க்காணும் பிரேரணைகளை பாராளுமன்றத்தில் பிரேரிப்பதற்காக முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்!

1.10 67 ஆம்தேதி தொடக்கம் 100 ரூபாவுக்கும் அதற்குக் குறையவும் அடிப்படைச்சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர் அனைவருக்கும் மாதாந்தம் 30 ரூபா விதமும், 100 ரூபாவுக்கு மேலும் 300 ரூபாவுக்குக் குறைவாகவும் அடிப்படைச் சம்பளம் பெறுவோருக்கு 10 ரூபா விதமும் படியொன்றை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ள அரசாங்கம் இளைப்பாற்றுச் சம்பளம் பெறுவோருக்கு அப் படியில் அரைவாசியை மட்டுமே- அதாவது இரு பிரிவினருக்கும் முறையே 10 ரூபாவும் 5 ரூபாவுமாக—வழங்க முடிவு செய்திருப்பதையிட்டு நாடெங்கிலுமுள்ள இளைப்பாற்றியச் சம்பளக்காரர், குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ளோர், பெரும் அதிருப்தி அடைந்துள்ளதை முன்னிட்டும், வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளதன் விளைவான கஷ்டம் இரு சாரருக்கும் ஒரளவினதாக அல்லது அல்லது வருடாந்தச் சம்பள உயர்ச்சியோ வீட்டு வாடகைப் படியோ இன்றிக் குறைந்த தொகையைப் பெற்று வரும் இளைப்பாற்றுச்சம்பளகாரரின் விடயத்தில் இன்னும் கூடியதாக இருக்கையில் இவ்விடயத்தில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதையிட்டு அவர்கள் பெரிதும் கவலையடைந்துள்ளமையினாலும் இளைப்பாற்றுச் சம்பளகாரருக்கும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அளவு படி வழங்கப்பட வேண்டும்.

## நவீன இலக்கியத்தை எனக்கு உணர்த்தியவர்

இரசிகமணி கனக செந்திநாதனுக்கு 50 வயது என்பது ஆச்சரியமாயிருக்கிறது. அதனை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அவர் மிக இளைஞர். அவரது இலக்கிய இரசனை அவருக்கு என்றும் இளமையை நல்குவதாக.

பாரதியாருக்குப் பிறகு இலக்கிய உலகம் என்ன நிறம் என்றும் எனக்குத் தெரியாது. இலக்கிய கர்த்தாவிலே திருப்தியும் மதிப்பும் உண்டான பிறகு தான் அவரது சிருட்டியை எட்டிப்பார்ப்பதுண்டு.

நவீன இலக்கிய உலகுபற்றி எனக்கு ஏதுந் தெரிந்திருந்தால், அது செந்திநாதன் வாயிலாகவே வந்ததாயிருக்கும்.

செந்திநாதன் தமது முயற்சியினலே, இக்கால இலக்கியங்களையும் இலக்கிய கர்த்தாக்களையும் பலதுறைப்பட பல முகமாக ஆராய்ந்திருக்கிருர். அவருக்கு இரசிகமணி என்ற பட்டத்தைக் கிழக்கிலங்கை வழங்கியிருக்கின்றது. அவரது புகழ் கடல் கடந்து தாய்நாட்டிற்கும் எட்டியிருக்கிறது. எழுத்தாளருலகு அவரை மதிக்கின்றது. பத்திரிகை உலகு பேணுகின்றது.

அரசாங்கம் புத்தகம் எழுதத் தெரிந்த எழுவரில் நால்வர் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையிற் பயிற்றப்பட்டவர்கள். அது பெரும் குளிர்ச்சியைத் தருகின்றது. செந்திநாதனை யாழ். இலக்கிய வட்டங் கொண்டாடுவது குளிர்ச்சியின் மேற் குளிர்ச்சியாயிருக்கிறது.

50 வயதுக்குப் பிற்பட்ட காலத்தை ஒவ்வொருவரும் உத்தராயண காலம் என்றழைத்துக் கொள்ள வேண்டுமென்பது எனது கருத்து. உத்தராயண காலம் புண்ணிய காலம்.

திரு. செந்திநாதன் இனிவரும் புண்ணிய காலத்தில் தமது இலக்கிய இரசனையை 'மெய்ப் பொருள் காண்பதறிவு' என்றவாறு, மெய்ப்பொருளைத் தீண்டும் முகமாகத் திருப்பஞ் செய்து மனச்சாந்தி எய்தி நீண்ட காலம் வாழ்க வாழ்க என்று எம்பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

— பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

## கனகசெந்திநாதன்-ஈழத்து இலக்கியவளர்ச்சியின் மைல்கல்

தமிழ் இலக்கிய பூங்காவின் இதந்தரு மலர்களை இளமை முதல் நுகர்ந்து, சிறு கதை நாவல், நாடகம், போன்ற பல் வேறு துறைகளில் தரமான சிருஷ்டிகளை தந்து, விமரிசனத் துறையில் வியந்தகு முன்னேற்றம் அடைந்து, எழுத்துலகில் தனக்கென ஒரு நிரந்தர இடத்தை ஸ்திரமாக்கிக் கொண்ட கனக செந்திநாதன் அவர்களை 'ஒரு நடமாடும் வாசிகசாலை' என்கிறார் ஓர் அறிஞர். 'பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தவர்' என்று இறுப்பூ தெய்துகிறார் இன்னெருவர் இலக்கியப் பிரமுகர்.

பண்டிதமணி முதல் இளம் எழுத்தாளர் வரை அனைவரையும் நேசித்து, தமிழுலகுக்கு தன் விகரமற்ற படைப்புக்களுடன் இலங்க வேண்டும் என்ற இதயமுடையவர் எனைருர் ஒரு வளரும் எழுத்தாளர். யாழ்ப்பாணத்தின் குறுகிய குருடர்களின் போக்கில் இவரைப் பார்க்காது நடு நிலையில் நின்று நோக்கின் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் இவர் ஓர் மைல் கல் என்றல் மிகையாகாது.

### சமூக சேவை

இலக்கியப் படைப்புக்கள் மூலம் மட்டும் தமிழ் சேவை புரியாது சங்கங்கள் சபைகள் மூலம் கிராமங்களிலும் இலக்கியத் தொண்டை சமூக சேவையை புரிய முடியுமென்று அசையாத நம்பிக்கை கொண்டவர் இவர்.

அதனால் வள்ளல் ஈழகேசரி பொன்னையாவால் குரும்பசிட்டியில் நிறுவப்பட்ட சன்மார்க்க சபையின் முக்கிய அங்கத்தவராய் உப தலைவராய் திகழ்கிறார்.

பொன்னையா அவர்கள் தலைவராய் இருந்த காலத்திலும் அவருக்குப் பின்னும் இச் சபையின் வேலைகளில் இணைந்து பிணைந்து பல சாதனைகளைச் செய்யும். தெருக்கள் அகலவித்தல், புதிய வீதிகளை திறத்தல்.



ஏ. ரி. பொன்னுத்துரை
பி. ஏ.

சுடலை சந்தை போன்ற இடங்களை திருத்துதல் வைத்திய சாலை, மத்திய கல்லூரி அமைத்தல் போன்ற தொண்டுகளில்-சபை ஈடுபட்ட வேலைகளில்- எல்லாம பாட்டாளி மகன் போல இவர் ஒத்துழைத்தார்.

### பண்பு

எந்த வேலையையும் செய்ய தயங்கியது கிடையாது. தனது இன்பமூட்டும் சம்பாஷனைக் கலையால், நகைச்சுவைத் துணுக்கால் வேலை செய்யும் மற்றவர்களையும் அலுக்காமல் ஊக்கி தொண்டு புரிய உதவியவர்.

மயிலிட்டிக் கிராம சபை அங்கத்தவராய்ச் சில காலம் இவர் பணி ஆற்றினார் என்றால் அதற்கு கூட காரணம் இவரது அயராத கிராம சேவையும் ஏழைகளையும் மற்றையோரையும் ஒரே நோக்கில் பார்க்கும் தாரதம்மியமற்ற பண்புமே ஆகும்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களின் 'சைவ சிந்தனைகள்' என்ற நூலை சன்மார்க்க சபை வெளியிட வேண்டுமென்பதில் ஊக்கம் காட்டி உற்சாகமாய் வேலை செய்து வெற்றி கண்டவர் இவர். 'மந்தாப்பு' 'சித்திரக் கலை', 'சிறுவர் சித்திரம்' ஆகிய நூல்களை சன்மார்க்க சபையில் மிகச்சிறந்த முறையில் வெளியிட்ட பெருமையும் இவருக்குத்தான் உண்டு.

### சமய பக்தி

கல்விப் பகுதியினரால் அங்கீகாரம் பெற்று பல கல்விக் கூடங்களிலும் உபயோகிக்கப்பட்டுவரும் 'சைவ சமய போதினி' என்ற சன்மார்க்க சபையின் புத்தக வரிசைகள் உயர்ந்த முறையில் வெளிவர பல வழிகளிலும் உதவியவர்களில் இவரும் குறிப்பிடப்பட வேண்டியவர் புராண பாடம், [illegible] வருடா வருடம் [illegible] குரு தெய்வ ஸ்தலங்களில் செய்து அதன்மூலம் சமயபக்தியையும், கலா இலக்கிய ரசனையையும் கிராம மக்களிடையே வளர்த்தவர்.

### இலக்கிய துறைக்கு திசை திருப்பினார்

'தானுண்டு தன் வீடுண்டு' என்று வாழாது மக்கள் மத்தியில் உழைத்து பேச்சால், எழுத்தால், கிராம சேவையால் அரும்பணியாற்றிய கனக. செந்திநாதன் பிறந்த ஊருக்கு பெருமை தேடித்தந்த பெருமகன்.''

## "தமிழை வளர்ப்பவர்கள் தமிழ் எழுத்தாளர்களே"

—உடுவில் எம். பி.

'அரசியல் வாதிகளாகிய நாங்கள் தமிழ் மொழியை வளர்க்கிறோமென்று பெருமையடித்துக்கொள்ள முடியாது. தமிழை வளர்த்தவர்களும், வளர்ப்பவர்களும் தமிழ்ப்புலவர்களும்தமிழ் எழுத்தாளர்களுமே. ஆனல் அரசியல் வாதிகளாகிய நாங்கள் அரசியல்ரீதியில் தமிழ் மொழி அழிக்கப்பட்டு விடாமல்பாது காக்கும் காவல் நாய்களாக விளங்குவதுடன் தமிழைவளர்க்கும் இலக்கியகர்த்தாக் களுக்கும் உதவி புரிய வேண்டிய கடமையுண்டு'' இவ்வாறு குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெற்ற இரசிகமணி கனக. செந்திநாதனின் பொன்விழாவில் பேசிய உடுவில் பா. உ. திரு. வி. தருமலிங்கம் குறிப்பிட்டார்.

திரு. தர்மலிங்கம் 'இரசிகமணி மாலை' என்னும் நூலை வெளியிட்டு வைதது உரை நிகழ்த்தினர். விழாவுக்கு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை தலைமை தாங்கினர். திரு. தர்மலிங்கம் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

'இலக்கியத்தை படைப்பதிலும் பார்க்க அது பற்றி விமர்சிப்பதே முக்கியமானது. சேக்ஸ்பியர் இருந்த நேரத்தில், சேக்ஸ்பியரைப் பற்றி இங்கிலாந்து மக்கள் சரிவர உணர்ந்து கொள்ளவில்லை. ஆனல், பிருட்லி என்ற உயர்ந்த விமர்சகரின் மூலம் சேக்ஸ்பியரில் சிறந்த இலக்கியத்திறன் உலகுக்கு தெரிந்தது.

இதே போல, நமது ஈழத்திலும் பல கவிஞர்களும், புலவர்களும் கதாசிரியர்களும், இருந்தனர். இருக்கின்றனர். அவர்களைப் பற்றி விமர்சனம் செய்வதற்கு ஈழத்தில் ஒரு கனக செந்திநாதன் தோன்றிய பின்னரே அவர்களின் திறமையையும் புலமையையும் தமிழுலகம் அறிய முடிந்தது. அவர் நீடூழிகாலம் வாழ்ந்து தமிழ்ப்பணியாற்ற வாழ்த்துகிறேன்'

விழாவில், கனக செந்திநாதன் எழுதிய சிறுகதைத் தொகுதியான 'வெண் சங்கு' என்ற நூலும், 'பிரபந்தத் திரட்டு என்னும் கட்டுரைத் தொகுதியும் வெளியிட்டு வைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர்த் தொகுதி மக்களுக்கு சுதந்திரக் கட்சி அரசாங்கம் என்ன நன்மை செய்தது?

## பாராளுமன்றத்தில் "அமிர்" கேள்வி
## மஜீதுக்கு சுடச் சுடப் பதில்

"மூதூர் 2-வது பாராளுமன்ற உறுப்பினர் ஜனுப் மஜீது சுதந்திரக்கட்சியில் உதவி மந்திரியாக இருந்தும்கூட சுதந்திரக்கட்சி அரசாங்கத்தின் காலத்தில் மூதூர் தொகுதிக்கு எந்தவித நன்மையும் செய்யப்படவில்லை. தேசிய அரசாங்கத்தின் மூலம் மூதூர்தொகுதி மக்களின் குறைகளை களைய தமிழரசுக் கட்சியாகிய நாமும் உள்ளூராட்சி அமைச்சரும் நடவடிக்கையெடுத்து வருகிறோம். மூதூரில் வாழும் முஸ்லிம்களும், தமிழர்களும எமது கட்சி மீது அபார நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். எமது கட்சியின் சார்பில் போட்டியிட்ட காரணத்தால்தான் மூதூர் முதல் அங்கத்தவராக ஜனுப் முகம்மதலி வெற்றி பெற முடிந்தது" இவ்வாறு இம்மாதம் 22-ம் திகதி பாராளுமன்றத்தில் உரையாற்றிய வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.



கிண்ணியாவுக்கு ஒரு பாலம் அமைக்கப்பட வேண்டும் என்ற ஜனுப் முகம்மதலியின் தனி நபர் பிரேரணையை ஆதரித்துப் பேசுகையிலே மேற்கண்டவாறு திரு. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மூதூர் 2-வது உறுப்பினர் ஜனுப் மஜீத் தேசிய அரசாங்கத்தின் மீதும், தமிழரசுக் கட்சி மீதும் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு சுடச்சுட பதிலளிக்கும் வகையில் திரு. அமிர்தலிங்கம் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:—

"இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து இரண்டரை ஆண்டுகள் தாளுகின்றன. மூதூர் இரண்டாவது அங்கத்தவருடைய கெட்ட முன்மாதிரியைப் பின்பற்றி பெயர்களைச் சொல்லி இச்சபையின் ஒழுங்கை மீறி நடக்க நான் விரும்பவில்லை. அதனாலேதான் மூதூர் இரண்டாவது அங்கத்தவர் என்று அவரை உரிய முறையில் நான் அழைக்கிறேன்.

"அவர் முன்னைய அரசாங்கத்தில் போக்குவரத்து மந்திரிக்கு அரை மந்திரியாக இருந்தவர். அரை மந்திரி என்பதை அவர் விரும்பாவிட்டால் ஒரு காலத்தில் உதவி மந்திரியாக இருந்தார் என்று கூறுகின்றேன். தாம் உதவிமந்திரியாக இருந்த அமைச்சில் இந்தக்காரியத்தைச் செய்ய முடியாமல் (கிண்ணியா பாலம் அமைத்தல்) இப்பொழுது இந்த அரசாங்கம் செய்யவில்லை என்று அவர் பேசியது உண்மையிலேயே வெட்கத்துக்குரிய ஒரு விஷயம்.

### மூதூரின் சிறப்பு

"மூதூர் தொகுதி செழிப்பு வாய்ந்த ஒரு தொகுதி. இந்த நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் ஒரு தொகுதி. விருத்திசெய்யப்பட்டால் இன்னும் எவ்வளவோ மேலாக விளங்க வேண்டிய ஒரு தொகுதி. மூதூர் இரண்டாவது அங்கத்தவர் குறிப்பிட்டதுபோல மூன்று இன மக்களும் சேர்ந்து வாழும் ஒரு தொகுதி. அப்படியிருந்தாலும் இந்தப் பிரேரணையைக் கொண்டுவந்த எனது அருமை நண்பர் மூதூர் முதல் அங்கத்தவர் பலகாலம் பிரதிநிதியாக இச்சபையிலே வீற்றிருந்தும், பல அரசாங்கங்களில் சேர்ந்திருந்தும் — மாறி மாறி எந்த அரசாங்கம் வந்தாலும் அந்தந்த அரசாங்கங்களில் நண்பர்கள் இருந்தும் ..........

ஜனுப் ஏ. எல். ஏ. மஜீது:—

"எந்த அரசாங்கம் வந்தாலும் நான் இருக்கப்போவதில்லை. மற்றவர் இருக்கலாம். நான் அப்படியல்ல!

திரு. அமிர்தலிங்கம்:—

"யாராவது ஒருவர் இருக்கத்தான் செய்வார். இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் ஒன்பது ஆண்டுகளாக இன்று எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் ஆட்சி புரிந்தார்கள். அவர்கள் இந்தத் தொகுதிக்கு, இந்தத் தொகுதி மக்களுக்கு என்வளவோ பாடுபடுவதாகக் காட்டிக்கொண்டார்கள்.

### சுதந்திர கட்சி என்ன செய்தது?

"எனக்கு இன்று போல் நினைவு இருக்கிறது — 1962-ம் ஆண்டு மூதூர்த் தொகுதியிலே இடைத் தேர்தல் நடைபெற்ற பொழுது, எமது கட்சி அபேட்சகராக மூதூர் முதல் அங்கத்தவர் நிறுத்தப்பட்டபொழுது, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் அபேட்சகராக ஜனுப் ஹமீம் அவர்களை நிறுத்தி அப்பொழுது பிரதமராக இருந்த, இன்றைய எதிர்க்கட்சித்தலைவி அவர்கள் உட்படப் பலரும் வந்து அந்தத் தொகுதியிலே தீவிரமாகப் பிரசாரம் செய்தார்கள்.

"அந்தத் தொகுதி மக்களுக்கு எதையெல்லாமோ செய்யப்போவதாக வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். ஆனால் அந்தத் தேர்தல் முடிந்தவுடனே அவர்கள் பாதையிலிருந்து கரையேறிக் கொழும்பு வந்து சேர்ந்தது தான் மிச்சம்.

"மூதூர்த் தொகுதி மக்கள் அடைந்த நன்மை எதுவுமேயில்லை. இதனை நாங்கள் நன்கு அறிவோம். இப்பொழுது இந்த அரசாங்கத்திலே நாங்களும் ஒரு அங்கமாக இருக்கத் தொடங்கிய பின்னர், மூதூர்த் தொகுதியின் குறைகளை நிவிர்த்தி செய்வதற்கு, தமிழ் பேசும் மக்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்கள் என்ற முறையிலே, நாங்கள் எங்களால் இயன்றளவு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வருகிறோம்.

### கட்டைபறிச்சான் பாலம்

"இந்த அரசாங்கத்தின் உள்ளூராட்சி அமைச்சர் மூதூர்த் தொகுதி கட்டைபறிச்சான் துறைக்கு ஒரு பாலம் அமைப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சின் மூலமாக ஏற்பாடுகள் செய்து, அதற்கான ஒழுங்குகள் ஏற்கனவே செய்யப்பட்டிருக்கின்றனவென்பதை ஒருவேளை அத்தொகுதியின் இரண்டாவது பிரதிநிதி அறியாவிட்டாலும், முதலாவது பிரதிநிதிக்காவது அது தெரிந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்போது அறிந்துகொள்ளட்டும்.

"அதற்கான ஒழுங்குகளை உள்ளூராட்சி அமைச்சர் செய்துகொண்டிருக்கிறார் ஆனபடியால், மூதூர்த் தொகுதியிலுள்ள தமிழ், முஸ்லிம் மக்கள் — அவர்கள் எம்மீதும் எமது கட்சிமீதும் நம்பிக்கை வைத்து வாக்களித்திருக்கிறார்கள். கடந்த காலத்திலே — 1962-ம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலிலே இன்றைய மூதூர் முதலாவது பிரதிநிதியை ஏழாயிரத்துக்குமதிகப்படியான வாக்குகளால் எமது கட்சியின் சார்பில் போட்டியிட்ட காரணத்துக்காகத் தெரிவு செய்தார்கள்.

'நாங்கள் அரசாங்கத்திலே ஒரு அங்கமாக இருக்கிறோம். மூதூர் இரண்டாவது அங்கத்தவர் அரசாங்கத்திலேயிருந்த பொழுது, பாலத்தைப் பெறுகின்ற நோக்கத்தோடு இங்கே பிரேரணையைக் கொண்டு வரவில்லை. ஒருவேளை மூதூர் முதல் அங்கத்தவர் அந்த நோக்கத்தோடு பிரேரணையைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனல், மூதூர் இரண்டாவது பிரதிநிதி இதை ஒரு அரசியல் மேடையாகப் பாவித்துத் தமது கட்சிக்கு பிரசாரம் செய்வதற்காக இங்கே முற்பட்ட காரணத்தினல், நான் அவருக்குப் பதில் அளிக்க முற்பட்டேன்.

'கிண்ணியாவிற்குஒரு பூரணமான பாலம் அமைக்கவேண்

(14-ம் பக்கம் பார்க்க)

## நீதி, நேர்மை தவருத திரு. நீதிராசா



"வாழ்க்கையில் இன்னல் வந்துற்றபோதும், நேர்மை,நிதானம், நீதி தவருது வாழ்க்கை என்னும் தோணியை வளமாகச் செலுத்துபவர் வாழ்க்கையில், என்ருே ஒரு நாள் உயர்வு ஏற்படடே தீரும்" என்பது ஒரு ஆராய்ச்சியாளரின் கருத்து. மூதவையுறுப்பினர் திரு. த. நீதிராசா அவர்கள் வாழ்க்கையில் ஏற்பட்டிருக்கும் உயர்ச்சி இதை நிருபிக்கும் வகையில அமைந்திருக்கிறது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொக்குவிலைப்பிறப்பிடமாகக் கொண்ட இவர் தமது கல்வியைக் கொக்குவில் இந்துக் கல்லூரியில் பயின்ருர். அவர் [illegible] கல்வித் துறையை [illegible] சக்குத் திருப்பி பெயருக்கேற்ற நீதிபதியாக விளங்கும் வகையில் கல்வித் துறையில் உயர்வு பெற்றிருக்கலாம். அவரிடத்தில் காணப்பட்ட புத்திக் கூர்மையும், மதிநுட்பமும் அவர் எத்துறையிலும் முன்னேற்றம் பெறுவார் என்பதை எடுத்துக் காட்டிற்று.

### பீடித் தொழிலுக்கு புத்துயிர்

தமது வாழ்க்கையில் ஒரு புது வழியைக் கையாண்டு தம் வாழ்க்கையை வளமாக்கி, தமது இனத்திற்கும், பிறந்த பொன்னுட்டிற்கும் நற்பணியாற்ற வேண்டுமென்றும் போல், 'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்ற தமிழரின் வாத்தகப் பெருமையை நிலைநாட்ட வர்த்தகத் துறையை தமதுவாழ்க்கையை வளமாக்கும் உயர்துறையாகக் கொண்டார்.

மங்கி மடிந்து பொலிவிழந்திருந்த பீடித் தொழிலுக்கு புத்துயிர் கொடுத்தார். தமது புத்திக் கூர்மையையும், அறிவாற்றலையும் பீடித தொழில் வளர்ச்சியில் செலவு செய்தார். விரிந்த மனப்பான்மையோடும் நல்நோக்கத்துடனும் எப்பணியை மேற்கொள்ளினும் விருத்தியெய்தும் தானே. யானை பீடிக் கம்பனியின் அதிபதியாக பீடித் துறையில் ஒரு முடிசூடா மன்னரானர்.

பீடித் தொழிலால் தம்மை மட்டும் வளர்க்கவில்லை. பல்

(11-ம் பக்கம் பார்க்க)

## எழுத்தாளர் சிரித்தனர்

மேடையில்ஒரு பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு முன்னா பேசப் போகும் விஷயத்தை தெளிவுடன் அறிந்து கொண்டு பேசுவதே அறிவுடையோர் செயல். ஆனல் அரசியல் வாதிகள் சிலர் எல்லா மறிந்தவர்கள் போல் மேடைக்குவந்து விஷயம் புரியாமல் உளறிவைத்து சிலசமயங்களில் தம்மைத் தாமே முட்டாள்களாக்கி கொள்ளுகிருர்கள்.

இப்படிப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் குரும்பசிட்டியில் நடைபெற்றிருக்கிறது. விழாவில் உடுப்பிட்டி பா. உ. திரு. மு. சிவசிதம்பரம், கனக செந்திநாதன் எழுதிய சிறுகதைகளின் தொகுப்பான 'வெண் சங்கு' என்னும் நூலை வெளியிட்டு வைத்து பேசினுர்.

1966 ம் ஆண்டு சாகித்திய மண்டலப் பரிசுகள் தமிழ் மொழியில் கவிதை தவிர்ந்த ஏனைய பிரிவுகளுக்கு அளிக்கப்படாததைக் கண்டித்துப் பேசும் போது 'கனக செந்திநாதனின் 'வெண சங்கு' என்னும் இச் சிறுகதைத் தொகுதி கூட சாகித்திய மண்டலத்தினரின் கண்களில் படவில்லையா?' என்று திரு.சிவசிதம்பரம் கேட்ட போது, கூட்டத்தில் பிரசன்னமாயிருந்த பழம் பெரும் எழுத்தாளர்கள் கொல்லென்றுசிரித்தனர். ஏன் தெரியுமா!

ஒவ்வொரு ஆண்டும் அந்தந்த ஆண்டு வெளியிடப்பட்ட நூல்களுக்கே பரிசு வழங்குவது சாகித்திய மண்டலத்தின் கொள்கை. 1966 ம் ஆண்டு 'வெண் சங்கு' நூல் வெளியிடப்படவில்லை. அந்த நூல் அப்போதுதான் (1967 ம் ஆண்டு, அக்டோபர் 24ந் திகதி) வெளியிடப் படுகிறது. வெளியிட்டு வைத்தவரே, அந்த நூலுக்கு 1966 ம் ஆண்டு ஏன பரிசு தரப்படவில்லையென்று கேட்டால், கேட்பவர்கள் சிரிக்காமல் என்ன செய்வர்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவட்ட சபை மசோதா பாராளுமன்றத்தின் இந்தக் கூட்டத் தொடரில் சமர்ப்பிக்க உத்தேசித் திருப்பதால் அது பற்றிய விபரங்களைப் பொது மக்கள் தெரிந்துகொள்வதற்காக வானொலி மூலம் அது பற்றி பிரசாரம் செய்யும்படி பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா வானொலி கூட்டுத் தாபனததிற்குக் கட்டளையிட்டிருப்பதாக அறியப்படுகிறது. மாவட்டசபை பற்றி பொது மக்களுக்கு விடயங்களை எடுத்துக் கூறுவதற்கான சூழ்நிலை நிலவும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தப் பிரசார வேலைகளை வானொலிக் கூட்டுத் தாபனம் செய்ய வேண்டும் என்று பிரதம மந்திரி கூறியுள்ளார்.

—எத்த

"எத்த" ஏடு 28-10-67ந் திகதி வெளியிட்டுள்ள மேற்கண்ட செய்திக்கு "மாவட்ட சபை மசோதாவுக்கு சினிபூகம் முயற்சி" என்று மகுடம் சூட்டப்பட்டுள்ளது.

"வானொலிக் கூட்டுத்தாபனமும், தகவல் திணைக்களமும் அரசாங்க நடவடிக்கைகள் பற்றி பிரசாரம் செய்யும் போது அரசாங்கத்துக்கு பிரயோசனம் கிடைக்கக் கூடியதாகப் பிரசாரம் அமைய வேண்டுமென்று பொறுப்புள்ள அதிகாரிகளிடம் பிரதமர் கூறியிருக்கிறாரென்று நம்பகமாக அறியப்படுகிறது" என்று எத்த மேலும் குறிப்பிட்டுள்ளது.

# 'மாவட்ட சபை மசோதாவுக்கு ஆதரவு திரட்ட வானொலி'

## மக்கள் குரல்

### யார் கள்ளத் தோணி?

சில தினங்களுக்கு முன் ஒரு பள்ளிக்கூட உயர்தர வகுப்பில் கல்விகற்கும் மாணவன் ஒருவன் பதுளை பஸ்வண்டியிலே பிரயாணம் செய்கையில் அநியாயமாக ஒரு காடைக் கொண்டக்டரால் அபாயகரமாக நையப்புடைக்கப்பட்டான் என்ற பத்திரிகைச் செய்தி தமிழ்க்குழந்தைகளாகிய நம் இதயங்களை உருக வைத்து, கண்ணீருகுக்க வைத்தது; வேதனை பெருகவைத்தது.

அப்பையன் பலமாகத் தாக்கப்பட்டதோடு அமையாது அவனைக் 'கள்ளத்தோணி போடா' என்றுகூட அந்த அறிவிலி, கூறியிருக்கிறான்.

பாவம்! அவனுக்கு உண்மை வரலாறு தெரியவில்லைப் போலும்! அன்றேல் தெரிந்தும் தெரியாதவன் போலாகினானோ? உண்மையாகவே அவனைத்தான் கள்ளத்தோணியென்று கூறி வரலாறு எள்ளி நகையாடுகிறது.

மேற்கூறிய கொண்டக்டரை அரசாங்கம் தக்கபடி தண்டிப்பது வேறுவிடயம். ஆனால் அவன் சொன்ன வார்த்தைகளில் ஏதேனும் அர்த்தம் உண்டாவென்று கவனிப்பது எம்முடைய கடமையல்லவா! அவன் இனத்திற்குக் கல் தோன்றி மண் தோன்றா காலத்திற்கு முன்தோன்றிய தமிழின தொன்மையைப் புரியவைப்பது தமது முன்னைக்கு நாம் செய்யும் சஞ்சீவத்தன்மையுள்ள ஒரு தொண்டல்லவா! அத்துடன் அது நமது கடமையுமாகும்.

செந்தமிழ்பேசும் நம்மில் சிலரை இப்போது கள்ளத் தோணியென்று குலைக்கிறார்கள். இன்னும் சில காலத்தில் நாம் எல்லோருமே கள்ளத் தோணியென்ற இழிச்சொல்லுக்கு ஆளாகிவிடுவோம். அப்போது ஒருகாலத்தில் சிறப்புடன் செங்கோலோச்சி உலகையாண்ட இனமாகியயாம் என்னாவோம்?

ஆரியர் என்ற நாடோடிக் கூட்டம் இந்தியாவில் நுழையும்போது முதன்மொழியாகிய தமிழ்ப்பேசிய திராவிடர் இந்தியாவெங்கும் பரந்திருந்தது போலவே, தந்தை சிங்கபாகுவால் இலாலா நாட்டில் இருந்து தான்செய்த கூற நாக்கூசும் நாகரீகமற்ற தீச்செயல் காரணமாக நாடுகடத்தப்பட்டுக் கள்ளத்தோணியாக தற்செயலாக விசயன் என்பவன் இலங்கைக் கரை தட்டுமுன்பே தம்பூர் என்ற நாகா (நாகு வளர்த்து வாழ்க்கை நடாத்திய குடியினா நாகரெனப்பட்டனர் நாகுவென்றால் 'டசு' என்ற பொருளாகும். நாகபாம்பை வழிபட்டமையால் நாகரெனப்பட்டனர் என்பது வடவர்புனைந்த எண்ணிறந்த சட்டுச்சனைதகளில் ஒன்று). ஈழமணிநாட்டில் வாழ்ந்துவந்தனர். இதுவே சரித்திரம் கூறும் உண்மைக் கதை.

பெரும்பான்மை மக்களில் பலருக்கு இது நன்றாகத் தெரியும். தெரிந்தும் மறைக்கிறார்கள் அல்லது திரிக்கிறார்கள்; தம்மிடத்தே குறைகள் அல்லது மாசுகள் இருந்தால் மற்றவற்கு மறைப்பது மனிதவியற்கைதானே! அதைத்தான் அவர்களும் செய்கிறார்கள்.

கிழோர்கள் நம்மையெல்லாம் கள்ளத்தோணியென்று அழைக்கும்போது தமிழ்த்தாய் அதைச் சகிக்காது கண்ணீர் விடவே முயல்வாள். ஆகவே தமிழ்மக்கள் தம் உண்மை வரலாற்றை அவர்களுக்கு இடித்துச்கூற, தமிழணங்கின் கண்ணீரைத் துடைக்க விளித்தெழவேண்டும். அதுவே நாம் தமிழணங்குக்குச் செய்யும் மகோன்னத தொண்டாக அமையமுடியும்.

செ. தருமராசா
கிழைப்புலோலி,
பருத்தித்துறை.




## பட்சநாள்

'போயா' என்ற சிங்களச் சொல்லுக்கு நிகராக தமிழில் ஒரு சொல் இல்லாக்குறை நீங்கவேண்டி என்னறிவுக்கு எட்டியமட்டில் ஒரு சொல்லை ஆராய்ந்து சுதந்திரனுக்கு தெரிவிக்கிறேன். இதனைவெளியிடுவதன் மூலம் 'தர்க்கவாதம்' ஏற்பட்டு புதியசொல் ஒன்று உருவாவதும் மகிழ்ச்சியே.

சந்திரனின் ஏறு நிரை காலமும், இறங்குநிரை காலமும் பட்சம் என்ற சொல்லால் (பூர்வ, அமர பட்சம்) நினைவுக்கு வருகின்றது. பூரணையாகிய ஒளிக்காலத்துக்கும்இருளாகிய அமாவாசை காலத்துக்கும் நேர் இடைப்பட்ட காலம் அஷ்டமி எனப்படும். இதுவே பிறையின் மத்திய கூறு 'பட்டம்' எனின் தவறாகமாட்டாது. எனவே பூரணை அஷ்டமி, அமாவாசை ஆகிய காலத்தை பிறைபட்சம் என்ற சொல்லால் உணர்த்தலாம்.

பிறையாகிய சந்திரன் (சக்திக்குப்) அன்பாகிய (பட்சம்: அன்பு; இவட: ஒரு பொருட் சொறசள்) சூரியனுக்கும் காலச்சக்கரத்தால் நிகழும் மாற்றமே பிறைபட்சம் என வழங்கில் பிழையாகுமா? எனவே தமிழரும் போயா என்ற அயற் சொல்லை கலவாமல் தூய்மையுடன் தமிழ் திகழ தமிழ் பெருங்குடி மக்கள் இச் சொல்லை கையாளுவர் என நம்புகிறேன்.

எஸ். என். கே. பாலசுந்தரம்,
பதுளை.

❋ அளவெட்டிதெற்குமுற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தின் 15 வது ஆண்டு நிறைவுவிழா சிறப்பாக கொண்டாடப்பட்டது

❋ மன்னார் பட்டினத்தில் சாப்புச் சட்டத்தை சரி வர அமுல்நடத்துவது [illegible] கலவலகத்தில் நடைபெற்ற வியாபாரிகள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

## தமிழ் பகுதிகளிலே..

❋ கிண்ணியாவில் நிலைகொண்டுள்ள அவ்லியா மாஞ்சோலையப்பா ஷியாரத்தில் அண்மையில் விமரிசையாக கொடியேற்று வைபவமும் பெரிய கந்தூரியும் நடந்தேறியது.

❋ காரைநகரில் ஒரு அரசாங்க விறகுசாலை அமைக்கும்படி காரைநகர் பொது நல சேவா சங்கம், யாழ் அரசாங்க அதிபரை கோரியுள்ளது.

❋ வேலணைகிழக்கு பெருங்குளம் முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு 50,000 ரூபா செலவில புதிய தேர் ஒன்று செய்யப்படவிருக்கிறது.

❋ மட்டக்களப்பு தேனமுத இலக்கிய மன்றத்தினரின் 15வது ஆண்டு விழா இம்மாத மத்தியில் மட்டக்களப்பில் கொண்டாடப்படும்.

❋ கிளி நொச்சியிலுள்ள சுராச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கம், நிதியமைச்சரால் அற நிலையமாக அங்கிகரிக்கப்பட்டுள்ளது.

❋ கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம் அதன் ஓராண்டு பூர்த்தி விழாவை தவத்திரு, சுவாமி நாத அடிகள் தலைமையில் சிறப்புடன் கொண்டாடியது.

❋ வேலணை மத்திய மகா வித்தியாலயத்திற்கு மின்சாரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

❋ மட்டுநகரைச் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் குழந்தைகளிடம் தொற்று நோய் பரவுவதை தடைசெய்ய சுகாதார பகுதி நடவடிக்கையெடுத்துவருகிறது.

❋ மட்டக்களப்பு-திருமலை வீதியிலுள்ள தொண்டியாற்றின் மீது 40 ஆயிரம் ரூபா செலவில் பிரமாண்டமான பாலம் அமைக்கப்பட்டுவருகிறது.

❋ திருமலை மாவட்டத்தில் இருவிதை நெல் பண்டசாலைகளை அமைக்க விவசாய அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகிறது.

❋ பருத்தித்துறை கமத்தொழில விஸ்தரிப்பு நிலையத்தை உடுப்பிட்டிக்கு மாற்றும்படி உடுப்பிட்டி விவசாய சங்கம் கோரியுள்ளது.

❋ மூதூர்ப் பகுதி விவசாயிகளுக்கு சுமார் நான்கு லட்சம் ரூபா விவசாயக் கடனுக வழங்கப்பட்டுள்ளது.

❋ மட்டக்களப்புக்கு மத்தியில் நிறுவப்பட்டிருந்த காந்தி சிலை மாநகர சபையால் இப்போது செப்பனிடப்பட்டு வருகிறது.

❋ யாழ். மாவட்ட சன சமூக நிலைய சமாசத்தின் வருடாந்த மாநாடு டிசம்பரில் கொண்டாடப்படவிருக்கிறது.

❋ கிளிநொச்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கு மிடையே புகையிரதப் போக்கு வரத்து ஒன்று ஆரம்பிக்கப் படவேண்டுமென கிளிநொச்சிஎம்.பியும், உடுவில் எம். பியும் புகையிரதப் பகுதியை கோரியுள்ளனர்.

❋ 6 லட்சம் ரூபா செலவில் கிளிநொச்சியில் மத்திய பஸ் சாலையொன்றை அமைப்பதற்கு கேள்விப்பத்திரம்கோரப்பட்டிருக்கிறது.

❋ வடபகுதியில் கலைபிடுங்குவதில் 40 ஆயிரம் மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவர்.

❋ யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரிக்கும் பரியோவான் கல்லூரிக்குமிடையே நடைபெற்றகைப்பந்தாட்டப் போட்டியில் பரியோவான் கோஷ்டி வெற்றி பெற்றது.

❋ மர வரிதிட்டத்தை கைவிடும்படி எருக்கலம்பிட்டி கிராமசபை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

❋ சாரைநகர் இந்துக் கல்லூரிக்கு விஞ்ஞான ஆய்வுக் கூடம் அமைப்பதற்கு அப்பகுதி மக்கள் முயற்சியெடுத்து வருகின்றனர்.

❋ வட பகுதியிலுள்ள பிலைகயிலை விவசாயிகளுக்கு கடன் வசதி செய்து கொடுக்க யாழ்ப்பாணம் — மலையாளம் புகையிலைக் கூட்டுறவு சங்கம் ஏற்பாடு செய்து வருகிறது.

❋ மூதூர் பசளை நிலையத்தில் போதிய பசளையின்மையால் விவசாயிகள் தொல்லையடைந்து வருகின்றனர்.

❋ கல்முனை கல்விக் கந்தோர் பிரதம கல்வியதிகாரியின் காரியாலயமாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

❋ புங்குடுதீவு கிராமசபையின் நூல் நிலையம் இம்மாதம் திறந்து வைக்கப்படும்.

❋ பண்ணாகம் உப தபாற் கந்தோரின் குறைபாடுகள் விரைவில் தீர்த்து வைக்கப்படுமென்று தபால் மா அதிபர் அறிவித்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விவசாயிகள் கள்ளத் தோணிகளா?

# வவுனியாவில் மறுபடியும் மனித வேட்டை

## நூற்றுக்கணக்கில் கைது வீடுகள் கொள்ளை

கள்ளத் தோணிகள் என்ற குற்றச்சாட்டின் கீழ் தமிழ் பகுதிகளில் பல்லாண்டுகளுக்கு முன்னர் குடியேறி விவசாயம் செய்துவரும் இந்திய வம்சா வழியினராகிய தமிழ் மக்களை பொலீசாரும் இராணுவத்தினரும் நூற்றுக் கணக்கில் திடீர் திடீரெனக் கைது செய்வதையும், அப்படி கைது செய்யப்படுபவர்களிடமிருந்து பெறப்படும் தமிழ் வாக்குமூலங்கள் சிங்களத்தில் எழுதப்பட்டு, அவர்களிடமிருந்து பலாத்காரமாக கையெழுத்து வாங்கப்படுவதையும் தமிழரசு எம். பி.க்கள் பலமாக கண்டித்துள்ளனர். வவுனியாவில் கைது செய்யப்பட்டவர்களின் வீடுகள் பொலீசாராலும், இராணுவத்தினராலும் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. இது சம்பந்தமாக விரைவில் தமிழரசார் பிரதமரைச் சந்தித்து தங்கள் கடும் ஆட்சேபத்தைத் தெரிவிக்கக் கூடும் என்றும் தெரிகிறது. அரசாங்கத்தின் திட்டப்படி, அதிக உணவு பயிரிடும் இவ்விவசாயிகளுக்கு காரணமின்றி தொல்லை கொடுப்பதை உடனடியாக நிறுத்தும்படி பொலீஸ் இராணுவத்தினருக்கு கட்டளை பிறப்பிக்குமாறு பிரதமரை தமிழரசார் வற்புறுத்துவர் என்றும் அறியப்படுகிறது.

கடந்த வாரம் கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த அக்கராயன்குளக் குடியேற்றத் திட்டத்தில் விவசாயத்திலீடுபட்டிருந்த சுமார் 12 தமிழ் விவசாயிகள் கள்ளத்தோணிகள் என்ற குற்றச்சாட்டின் கீழ் எதுவித ஆதாரமுமின்றி கைது செய்யப்பட்டது தெரிந்ததே.

பொலீஸ், இராணுவத்தினரின் கெடுபிடி அத்துடன் நிற்கவில்லை. இவ்வாரமும் வவுனியாத் தொகுதியைச் சேர்ந்த தச்சம்பலம் என்னும் கிராமத்தில் விவசாயத்திலீடுபட்டிருந்த 250 விவசாயிகள் கள்ளத் தோணிகள் என்று கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்றும், தச்சம்பலம் கிராமம் பொலீசாரால் சூழப்பட்டு இருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

மிருகங்களை வேட்டையாடுவதுபோல தமிழ் விவசாயிகளை வேட்டையாடும் பொலீசாரின் நெறிகெட்ட செயலை தமிழரசுக் கட்சி கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

கைது செய்யப்பட்ட தமிழ் விவசாயிகள் பொலீசாரால் கொடூரமாக துன்புறுத்தப்படுகிறார்கள் என்றும் பொலீசார் சிங்களத்தில் தயாரிக்கும் வாக்குமூலத்தில் கையொப்பமிடும்படி கைது செய்யப்பட்டவர்கள் வற்புறுத்தப்படுகிறார்களென்றும் அறியப்படுகிறது.

வாக்குமூலத்தில் கையொப்பமிட மறுப்பவர்கள் பொலீசாரால் கொடுமையாக துன்புறுத்தப்படுகிறார்களாம்.

பொலீசாரின் இக்கொடுமையைக் கண்டித்தும் தமிழிலேயே வாக்குமூலங்கள் எழுதப்பட்டு, தமிழிலேயே கையெழுத்தும் பெறப்பட வேண்டுமென்றும் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலுக்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்கள் மீதான விசாரணை தமக்கு முன்னால் நடத்தப்பட வேண்டும் என்றும் திரு. இரத்தினம் எம். பி. கோரியுள்ளார்.

இதற்கிடையில், பொலீசாரின் இத்திடீர் நடவடிக்கையைக் கண்ட தொழிற் சங்க வட்டாரங்கள், இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தோட்டத் தமிழர்கள் பெருமளவில் இந்தியா செல்ல முன் வராததாலும், முன் வந்தவர்களுக்கு இந்தியா செல்வதற்கு அவர்களுக்குக் கொடுபட வேண்டிய சேம லாப நிதியைக் கொடுப்பதில் சிக்கல்கள் இருப்பதாலும் தோட்டங்களைத் தவிர்ந்த ஏனைய இடங்களில் வாழும் தமிழர்களுக்கு தொல்லை கொடுத்து அவர்களைக் கைது செய்து வெளியேற்ற அரசாங்கம்தான் பொலீசாரைத் தூண்டிவிட்டுள்ளதோ என்று சந்தேகம் தெரிவித்துள்ளன.

### கொழும்பு-7 பெண்களிடையே பீதி!

திருமதி பூன்வாட் இறந்ததும் அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற வதந்தியும் கொழும்பு 7ல் வசிக்கும் சில பெண்களைக் கலக்கிவிட்டது. தங்களுடைய கணவர்கள் மனைவியின் நடத்தையில் குறை கண்டு தம்மைச் சுட்டுக் கொல்ல முற்பட்டுவிடுவார்களோ என்ற பீதி அவர்களிடத்தில ஏற்பட்டுள்ளது.

சென்ற 18-ம் திகதி கொழும்பு 7ல் உள்ள ஒரு பிரபல 'களப்' ஒன்றில் சில பெண்கள் மத்தியில் இந்தக் கதை எழும்பியபோது ஒரு பிரபல பிரமுகரின் மனைவி தனது கணவரிடம் ஒரு கைத்துப்பாக்கி இருப்பதாகவும் அந்தக் கைத்துப்பாக்கியை எப்படியாவது மறைத்துவைக்க வேண்டுமென்றும் கூறினார். இதைத் தொடர்ந்து வேறு இரு பெண்களும் தங்கள் கணவர்களிடம் கைத்துப்பாக்கி இருப்பதாகக் கூறித் தங்களின் பீதியை வெளியிட்டனர்.

தீண்டாமை பாராட்டினால்

## அபராதமும் சிறையும் புதிய சட்டம் வரும்

தீண்டாமை பாராட்டுவோரே! உங்களுக்கு ஒரு அதிர்ச்சி தரும் செய்தி! தீண்டாமை பாராட்டியதாக உங்கள் மேல் குற்றம் சுமத்தப்படுமானால் நீங்கள், பெரிய அளவில் அபராதத்தொகை செலுத்த வேண்டி நேரிடுவதுடன் கம்பியெண்ணவும் நேரிடலாம். இதற்கான முறையில் தற்போதைய சமூககுறைபாடுஒழிப்புச் சட்டத்தைத் திருத்த தேசிய அரசாங்கம் நடவடிக்கையெடுத்து வருகிறது.

சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தின் கீழ் அண்மையில் தொடரப்பட்ட இரு வழக்குகளில் மிகக் குறைந்த தொகையே அபராதமாக விதிக்கப்பட்டதும், அத்தொகை கட்டத் தவறினால் ஆறு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதும் தெரிந்ததே.

தீண்டாமை பாராட்டும் குற்றத்துக்கு இன்னும் தண்டனை அதிகரிக்கப்பட வேண்டுமென்றும், அப்பொழுதுதான் சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டத்தால் நன்மையேற்படுமென்றும் பலர் கருத்து வெளியிட்டனர்.

ரூபா நூறு அபராதம் மட்டும் என்றால், 100 முறை வழக்கு வைத்தாலும் அபராதத் தொகை செலுத்தக் கூடியவர்களும் இருப்பதால், அபராதத்தொகை அதிகரிக்கப்பட வேண்டுமென்றும் பலர் அபிப்பிராயம் வெளியிட்டனர்.

அபராதத்தொகை, சிறைத் தண்டனை இரண்டும் ஒரு சேர அளிக்கக் கூடிய முறையில் சமூக குறைபாடு ஒழிப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்றும் கோரப்பட்டது.

தமிழரசுக்கட்சித் தலைவர் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் தலைமையில் இது பற்றி இவ்வாரம் பிரதமரை சிறுபான்மைத் தமிழர்களின் தூது கோஷ்டியொன்று சந்தித்து பேசியது. தீண்டாமை பாராட்டுவோருக்கு அபராதத் தொகையை அதிகரிக்கவும் அபராதமும், சிறைத்தண்டனையும் வழங்கக் கூடிய முறையில் சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தைதிருத்த நடவடிக்கையெடுப்பதாக பிரதமர் அவர்களிடம் உறுதிகூறினாரென்று தெரிகிறது.

## உயிருள்ள பாடல்கள்

கல்முனை பூபால்

கிராமங்கள் இயற்கைத் தேவி எழுந்தருளியிருக்கும் கோயில்களென்றால், அங்கு வாழும் பாமர மக்கள் அத்தேவியை வழிபடும் பக்தர்களாவர்.

இயற்கையறிவும், கலையுணர்வும் கொண்ட அவர்கள் உளத்திலே பல காரணங்களினால் உணர்ச்சிகள் தோன்றி கரை புரண்டெழும்போது அவை பாடல்களாக வெளிவருகின்றன. அவை ஏடும் எழுத்தாணியும் கொண்டு எழுதப்படுவன வல்ல. பரம்பரை பரம்பரையாகச் செவி வழியாகக் கேட்கப்பட்டு வாழ்பவை. இவக்கண வரம்பிற்குட்பட்டு சொற்சாலங் காட்டி மயக்குவன வல்ல.

பாமர மக்களின் உள்ளத்துணர்ச்சியை உயிராகக் கொண்டு, கருத்தைத் தெற்றென விளக்கும் எளிமையோடு கூடி நடப்பவை. நாட்டு மக்களின் உள்ளத்திலிருந்து அது வெளிப்படும் காரணத்தால் நாட்டுப்பாடல் எனப்படுகிறது.

நாடோடிப் பாடல்கள் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பாடப்படுகின்றன.

உதாரணமாக, மருதநிலத்தைச் சேர்ந்த கிராமங்களிலே வேலை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது [illegible]

[illegible]தியர் வாயினின்றும் வெளி வரும் பாடல்களிலே காதல் கொஞ்சும், நகைச்சுவை விஞ்சும்.

அது கார்த்திகைக் கடைசிப் பகுதி — வயல் வரம்பை மேவி நின்ற கதிர்கள் அறுக்கப்பட்டு வயலினூடே ஓய்ந்து கிடக்கிறது. அங்கு ஆண்கள் பலர் அவற்றை ஒன்றாகக் கட்டிச் சூடு வைக்க ஏற்பாடு செய்கிறார்கள்.

பெண்கள் சிலர் விடுபட்ட நெற்கதிர்களைக் குனிந்தவாறு பொறுக்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் கதிர் பொறுக்கும் கூட்டத்தினரோடு சேர்ந்துழைக்காது வரம்பிலே நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வள்ளியை வம்புக்கிழுக்கிறான் அங்கு வேலை செய்து கொண்டிருந்த காளை கந்தன்.

"இடுப்புக் குனிந்து கொண்டு
எல்லாரும் கதிர் பொறுக்க
விடுப்புக்கள் பாத்து நிற்றல்
[illegible]
[illegible] வள்ளிப் பள்ளே!"

என்றான் அவன்:
உடனே அவள்,
"என்னை விடுப்புப் பாத்து
என்னழகை நின்னும் உன்னை
சின்னண்ணன் ஏசமுதல்
சோத்துக் கட்டு வெள்ளாமய!"
எனப் பதில் கூறுகிறாள்.

அந்தப் பதிலிலே கேலியும், கிண்டலும் இழையோடுகிறது. இதனோடு சூடு மிதித்து நெல்லும் வீட்டிற்குச் சென்றுவிட்டது.

அயராத உழைப்பினால் சோர்ந்த நிலையில் ஓர் ஆண்மகன் சாக்குக் கட்டிலில் படுத்துக்கொண்டே பாடுகிறான்.

"பத்து ஏக்கர் வெள்ளாமச்
செய்து
பாதி உடம்பு பாழாய்ப் போச்சு
இப்பிடி எண்டிருந்தால்-இவளைக்
கலியாணமே பண்ணியிரேன்!"

அதற்கு சுடுதண்ணி வைத்துக் கொண்டிருந்த அவள்,
"ஆணாய்ப் பொறந்திட்டாலே
அல்லும் பகல் வேலைதானே
— மச்சான்
வீணாய் மனதினிலே
விசனமேன்தான்
கொள்ளுகிறாய்!"

என்று வேதனையுறும் கணவனுக்கு ஆறுதல் கூறுகிறாள் மனைவி.

இவ்வித பாடல்கள் இலக்கியத்திலே பெருமளவு ஆதிக்கம் பெறுகிறது. பல இசைஞர்கள் நாட்டுப்பாடல் இசையைத் தழுவியே பாடல் இசைக்கிறார்கள். இதற்கு சிலப்பதிகாரமே சான்றாகும்.

வாய்மொழி இலக்கியமாகிய நாட்டுப் பாடல்கள் இசையமைப்போடும், தாளவுறுதியோடுங் கூடி உலவுகின்றது. எனவே இத்தகைய சிறப்புடைய 'நாட்டுப் பாடல்களை'க் கட்டிக் காப்பது நம் அனைவரதும் தலையாய கடமையாகும்.

### புதுவித விளம்பரம்

பர்மியத் தூதுவருடைய மனைவி இறந்ததைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணைகளில் திரு. ரெக்ஸ் டி. சில்வா என்ற பாண்ட் மாஸ்டரின் பெயர் முன்னணியிலிருந்ததை சகலரும் அறிவார்கள்.

மேற்படி சம்பவத்தின் மூலமாக திரு. ரெக்ஸ் டி. சில்வாவுக்குக் கிடைத்த பிரபல்யத்தை வியாபாரத்திற்காகப் பயன்படுத்தும் முயற்சிகளும் தற்போது ஆரம்பமாகிவிட்டன. 22-10-67 ஒப்சேவர் பத்திரிகையில் திரு. ரெக்ஸ் டி. சில்வா பாண்ட் மாஸ்டராகப் பங்குபற்றும் 'கிளப்' ஒன்று அவருடைய பெயரைக் கொட்டை எழுத்துக்களில் போட்டு தங்கள் 'கிளப்'பையும் விளம்பரப்படுத்தியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதிச்சேவை கமிஷனின் வரலாறு

## அதன் எதிர்காலம் என்ன?

நீதி பரிபாலன சேவைக் கமிஷன் தனது அலுவல்களைக் கவனிக்கும் விஷயத்தில், பாராளுமன்றத்துக்கு எவ்வித பொறுப்பையும் கொடுக்காத ஒரு உறுப்பாகும். சீர்திருத்தம் செய்யப்படவேண்டிய இப்போதைய அரசியற் திட்டத்தின் அம்சங்களில் ஒன்ருக நீதி பரிபாலன ஆணைக்குழுவும் சேர்த்துக் கொள்ளபபட்டிருப்பதற்கு இதுவே காரணமாக இருக்கலாம்.

நீதி நிர்வாகத்துறையிற் காலதாமத மேற்படுகிறதென்றும், நீதி நிர்வாக இயந்திரத்தில் தவறுகள் உண்டென்றும் டொனமூர் கமிஷனிடம்புகார் செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றை நீக்குவதற்கோ, அன்றி சீர்திருத்துவதற்கோ எவ்வித சிபார்சுகளையும், டொனமூர் கமிஷன் வெளியிடாமலிருந்தது ஒரு குறிப்பிடத்தக்க உண்மையாகும். அது அட்டோர்னி ஜெனரலின் நிலையைத் தெளிவுபடுத்துவதுடன் திருப்தியடைந்தது. நாடு முழுவதும் நீதி நிர்வாகத்தை அமுல் நடத்தும் பொறுப்பு அட்டோர்னி ஜெனரலிடமே அளிக்கப்படவேண்டுமென டொனமூர் கமிஷன் கருத்து வெளியிட்டது.

### எதிர்பார்த்தது நடக்கவில்லை

இப்படிச் செய்வதன் மூலம் நீதிநிர்வாக நியமனங்கள் பொதுமக்களுக்கு நன்மை புரியும் விதத்தில், முற்றும் அரசியற் சார்பற்ற அடிப்படையில் நடைபெறும் என டொனமூர் கமிஷன் எதிர்பார்த்தது.

எப்படியிருந்த போதும், டொனமூர்கமிஷன் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை. அட்டோர்னி ஜெனரலுக்கு நீதிநிர்வாக நியமனங்களில் தலையிட அதிக உரிமையிருந்தது. அவர் மாவட்ட நீதிபதிகளாக திறமையுள்ளவர்களை நியமனம் செய்த அதேசமயம், தொல்லை கொடுக்கும் சில சட்டமன்ற உறுப்பினர்களால் தவருன வழியில் திருப்பப்பட்டு சில நியமனங்களை செய்யவும் பின்வாங்கவில்லை.

### நீதி நிர்வாக சபை

இதன் பின்னர், நீதிநிர்வாக நியமனச் சபையொன்று அமைக்கப்பட்டது. இச்சபையின் தலைவராக சட்டச் செயலாளரும், உறுப்பினர்களாக சுப்ரீம் கோர்ட் நீதியரசர் இருவரும், அட்டோர்னி ஜெனரலும் நியமிக்கப்பட்டனர். அமைச்சரின் சொல்லுக்கு அதிக பெருமதி இருந்தபோதிலும், அட்டோர்னி ஜெனரலின் சிபார்சுகள் அதிக தாக்கமுள்ளதாக விளங்கின.

சட்டச் செயலாளரின் தலைமை உதவியாளரால் விண்ணப்பங்கள் தரம்பிரிக்கப்பட்டதும், அவரது அறிக்கை சபைக்கு முன்பு சமர்ப்பிக்கப்பட்டதும் உண்மையே. ஆனால் அவரது கருத்துக்கள், சபை உறுப்பினர்களால் மதிக்கப்பட்ட போதிலும், எதிர்பார்த்தளவு நன்மையை ஏற்படுத்தவில்லை.

### சோல்பரி கமிஷன் செய்தது

டொனமூர் கமிஷன் பொறுப்பேற்க பின்வாங்கிய வேலையை சோல்பரி கமிஷன் ஏற்றுக்கொண்டது. நீதிபரிபாலன சேவைக்கமிஷன் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்திய தன்மூலம், நீதிநிர்வாக இயந்திரத்தையே சோல்பரிகமிஷன் மாற்றியமைத்தது.

நீதிபரிபாலன சேவைக் கமிஷனில் பிரதம நீதியரசரும், சுப்ரீம் கோர்ட்டின் இரு சிரேட்ட நீதியரசர்களும், அங்கம் வகித்து, நியமனங்கள், பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், சில்லறை நீதிமன்ற அதிகாரிகளை நீக்குதல்போன்றவற்றை கவனிக்கலாமென்றும் சோல்பரி கமிஷன் தெரிவித்தது.

சட்டச் செயலாளரின் நிர்வாக அலுவல்களை நீதியமைச்சரிடம் கையளிக்கவும் அது சிபார்சு செய்தது.

## "அரசியல் ஞானி"

அட்டோர்னி ஜெனரல் அரசாங்கத்தின் பிரதம பிராசிக்கியூடிங் அதிகாரி என்ற நிலைமைக்கு இறக்கப்பட்டார். கிரிமினல் துறையிலும், சிவில் துறையிலும் அரசாங்கத்துக்கும் மற்றவர்களுக்கும் ஏற்படும் வழக்குகளில் அரசாங்கத் தரப்பு பிரதிநிதியாக அவர் நியமிக்கப்பட்டார்.

### சட்ட ஆலோசகர்

மாதேசாதிபதியின் சட்ட ஆலோசகரும் அவரே. ஆனால் ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் கட்டாய சட்ட ஆலோசகர் அல்ல அவர். நடைமுறையில் இருக்கும் சட்டம் எடுத்து விளக்கப்பட வேண்டியோ அல்லது சட்டப் பிரச்சினைகளுடன் கூடிய திணைக்கள அலுவல்கள் சம்பந்தப்பட்ட மட்டிலோ, சட்ட நடவடிக்கைகளை ஆராய வேண்டியேற்பட்டாலோ அமைச்சர்கள் அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையை நாடலாம், அமைச்சரவையும் அரசியற் சட்டம் பற்றி அதி முக்கிய சட்டப் பிரச்சினைகள் தோன்றும்போது அட்டோர்னி ஜெனரலின் ஆலோசனையை நாடலாம். நீதி நிர்வாக நியமனங்களில் தலையிட அட்டோர்னி ஜெனரலுக்கு எவ்வித அதிகாரமும் அளிக்கப்படவில்லை,

### திருப்தியான சேவை

நீதிபரிபாலன சேவைக் கமிஷன் அது தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து தனது கடமைகளை திருப்திகரமாக நிறைவேற்றிவருகிறது. ஆனால் சட்டமன்றத்தில் அதற்கு எதிராக சுமத்தப்படும் நீதியற்ற பிழையான கண்டனங்களிலிருந்து அது காப்பாற்றப்பட வேண்டும். நீதிபரிபாலன சேவைக் கமிஷனின் நடவடிக்கைகள் குறித்து பாராளுமன்றத்தில் கண்ணியக்குறைவுடன் பேசுவது நீதி நிர்வாகத்தில் பொது மக்களுக்குள்ள நம்பிக்கை குறையவும், தன்மானமுள்ள நீதிபதிகளின் சேவையை இழக்கச் செய்யவும் கூடிய ஆபத்தை ஏற்படுத்தும் என்ற உண்மையை மறக்கலாகாது.

எப்படியிருந்த போதிலும், நீதிபரிபாலன சேவைக் கமிஷன் தனியே நீதிபரிபாலனம் மட்டுமின்றி, நிர்வாக அலுவல்களையும் கவனித்து வருவதால், பாராளுமன்றத்தில் அது சம்பந்தப்பட்ட கேள்விகளுக்கு ... ளிக்க ஒரு அமைச்சர் இருப்பது அவசியமே. ஒரு பாராளுமன்ற உறுப்பினர் நீதிபரிபாலன சேவைக்கமிஷனின் நடவடிக்கைகளை பாராளுமன்றத்தில் கண்டித்துப் பேசினல் அதற்கு எப்படிப் பதில் அளிப்பது என்பதை அமைச்சரும் அரசாங்கமும் தெரிந்து வைத்துக் கொள்ள வேண்டும்.

### விடுபட வழி

உலகில் உள்ள மிகச் சிறந்த எந்தவொரு நீதிபரிபாலன சேவை கமிஷனும் அது மனிதர்களின் அமைப்பாக இருப்பதனல், நியமனங்கள் செய்வதிலும் பதவி உயர்வுகள் அளிப்பதிலும் தவறுகள் விடலாம். இலங்கையிலுள்ள நீதிபரிபாலன சேவை கமிஷன் தன்னல் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டவர்களும், பதவி அந்தஸ்து உயர்த்தப்பட்டவர்களும், சுய ஆராய்ச்சி, தம்மைத் தாமே தணிக்கை செய்யக்கூடிய வல்லமை ஆகிய உயர்ந்த பண்புகளை ஏற்படுத்தியுள்ளனர் என்று தனக்குத் தானே உறுதிப்படுத்திக் கொள்ளுமானல், ஒரு பக்க சார்புகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திலிருந்தும், அதிக கண்டனக் கணைகள் தொடுப்பவர்களிடமிருந்தும், அது விடுபட முடியும்.


ஒரு திறமை வாய்ந்த நீதிபதிக்கு நல்ல குணங்களும் சிறந்த மனத்திட்பமும் வேண்டும்.

சட்ட அறிவை வாய் மூலமாக சோதிப்பதன் மூலம் ஒரு சிறந்த திறமை வாய்ந்த நீதிபதியைக் கண்டுபிடித்துவிட முடியாது. பதவியேற்றம் அளிக்கும்போது வழக்குகளில் அவர்கள் அளித்திருக்கும் தீர்ப்புரைகளையும் கவனத்துக் கெடுக்க வேண்டும்.

### விசாரணை வேண்டும்

மாஜிஸ்ரேட்டுகளும், மாவட்ட நீதிபதிகளும், நீதியற்ற முறையில், முடிக்குரிய தரப்பின் மேல் குறிப்பு வெளியிட்ட சம்பவங்களும் உண்டு. அவை பற்றி விசாரணை செய்யப்பட வேண்டும்.

சுப்ரீம் கோர்ட்டில் அளிக்கப்பட்ட தீர்ப்புரைகளின் விபரங்கள் பதவி உயர்வு பெறும் சட்ட அதிகாரிகளின் தகுதியைச் சோதிப்பதற்காக, பதிவு செய்து வைக்கப்பட வேண்டும்.



இலங்கைத் தமிழரசு வாலிப முன்னணியின் சார்பில் வட்டு நகர் முதல்வர் செ. இராசதுரைக்கு யாழ். நகரமண்டபத்தில் அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் வா. முன்னணியின் உப-தலைவர் திரு. க. திருநாவுக்கரசு தலைமையுரை நிகழ்த்துகிறர். வா. முன்னணி பொதுச் செயலாளர் திரு. ந. அருணசலம் முதல்வர் திரு. செ. இராசதுரை ஊர்காவற்றுறை பிரதிநிதி திரு. வ. நவரத்தினம் தமிழரசுக் கட்சி பொதுச் செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. ஆகியோர் மேடையில் வீற்றிருக்கின்றனர்,

## பணக்காரருக்கு ஏமாற்றம்; ஏழைகளுக்கு காணி நிலம்!

### இரத்தினம் முயற்சி வெற்றி

கிளிநொச்சி பா. உ. பண்டிதர் இரத்தினம் எடுத்த முயற்சியால், கிளிநொச்சித் தொகுதியைச் சேர்ந்த வட்டக்கச்சிக்கும் முரசுமோட்டைக்குமிடையிலுள்ள 600 ஏக்கர் காணி நிலம் பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது. இக்காணிகளைப் பெற சில பணம் படைத்தவர்கள் எடுத்த முயற்சி கிளிநொச்சி பா உ.வால் முறியடிக்கப்பட்டதுடன் ஏறத்தாழ 300 குடும்பங்கள் காணி பெறும் வாய்ப்பு இதனல் ஏற்படுகிறது.

வட்டக்கச்சிக்கும் முரசுமோட்டைக்கும் இடையேயுள்ள சுமார் 600 ஏக்கர் காணியையும் சில பணக்காரர் உணவுற்பத்தித் திட்டத்தின் கீழ் அடாத்தாக அபகரிக்க முயற்சி செய்தனரென்றும், இவர்களுக்கு பொ. கட்சியைச் சேர்ந்த பா. உ. ஒருவர் உதவி அளித்ததாகவும் அறியப்படுகிறது. அரசாங்க உயர் அதிகாரிகள் சிலரும் 'சம்திங்' வாங்கிக்கொண்டு இப்பணக்காரர்களுக்கு உதவியளிக்க முன்வந்தார்களாம்.

இதையறிந்த கிளிநொச்சிப் பா. உ. உடன் நடவடிக்கையெடுத்து, இதுபற்றி காணியமைச்சருக்கு புகார் செய்ததைத் தொடர்ந்து அமைச்சர் காணியற்ற அப்பகுதி மக்களுக்கே குறித்த 600 ஏக்கர் காணியும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டுமென உத்தரவிட்டுள்ளாரென்று தெரிகிறது.

திரு. இரத்தினத்தின் முயற்சியால் பணக்காரர் ஏமாற்றமடைந்ததுடன், இராமநாதபுரம், வட்டக்கச்சி, முரசுமோட்டை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 300 காணியற்ற ஏழைகளுக்கு இக்காணி நிலம் பகிர்ந்தளிக்கப்படவிருக்கிறது.

## அத்து மீறி குடியேறிய விவசாயிகட்கு காணி

கிளிநொச்சி வில்சன் வீதியில் அரசாங்கக் காணிகளில் அத்து மீறிக் குடியேறிய விவசாயிகட்கு ஓர் நற்செய்தி. கிளிநொச்சி பா. உ. பண்டிதர் கா. பொ. இரத்தினத்தின் முயற்சியால் காணிப்பகுதி உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆளுக்குஇருஏக்கருக்கு மேற்படாத காணி நிலம் வழங்கவிருக்கிறது.

அண்மையில் கிளிநொச்சியில் அரசாங்கக் காணிகளில் குடியேறியவர்களுக்கு காணி வழங்கும் நோக்குடன் நடைபெற்ற காணிக் கச்சேரி, நல்ல முறையில் சீராக நடைபெறவில்லையென்று காணிக்கச்சேரியை நடத்திய யாழ். உதவி அரசாங்க அதிபர் மேல் குறை கூறி கிளிநொச்சி மக்கள் பலர் கிளிநொச்சி பா. உ. திரு. இரத்தினத்திடம் புகார் செய்தனர் என்று தெரிகிறது.

இதைத் தொடர்ந்து கிளிநொச்சிப் பா. உ. யாழ். அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர், மாவட்ட அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்து மக்களின் புகாரை எடுத்துரைத்தாரென்று அறியப்படுகிறது.

கிளிநொச்சிப் பா. உ.வின் முறைப்பாட்டைத் தொடர்ந்து மீண்டும் கிளிநொச்சியில் காணிக்கச்சேரியொன்று நடத்தி, வில்சன் வீதியில் அத்து மீறிக் குடியேறியவர்களுக்குத் தலைக்கு 2 ஏக்கர் காணி நிலம் வழங்க யாழ். அரசாங்க அதிபர் உத்தரவிட்டுள்ளாரென்று தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரசார் கொள்கைக்கு வெற்றி

தமிழ் மக்கள் மத்தியிலுள்ள தீண்டாமைப் பேயை ஒழிப்பதற்கு பலாத்கார வழி ஒருபோதும் பயன்படாதென்றும், அமைதியான வழியில், சாத்வீக அடிப்படையில் பிரசாரத்தின் மூலம் மனமாற்றம் ஏற்படச் செய்வதாலும், சட்டத்தின் உதவியை பெறுவதாலுமே தீண்டாமையை ஒழிக்க முடியுமென்று தமிழரசுக் கட்சி திட்டவட்டமாக கூறிவருவதுடன், அவ்வழியில் தீண்டாமையொழிப்புக்காக அல்லும் பகலும் பாடுபட்டு வருவது தெரிந்ததே.

தமிழரசார் சாத்வீக வழி பற்றி எடுத்துக் கூறும் போதெல்லாம், இழி மொழிகளும், கிண்டல் வார்த்தைகளும் பேசி பலாத்காரம் மூலமே தீண்டாமையை ஒழிக்க முடியும் என்று பறைசாற்றி வந்தார்கள், கம்யூனிஸ்ட், சமசமாஜ தோழர்கள், சிறுபான்மைத் தமிழர்களும் சில இடங்களில் அவர்களின் தவறான வழி காட்டுதலைப் பின்பற்றினர். இதன் பயனாக விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் பல நடைபெற்றதுடன் தீண்டாமைப் பிரச்சினை இன்னும் சிக்கலாகியது.

தீண்டாமையொழிப்புக்கு வழி பலாத்காரமல்ல என்பதை யாழ்ப்பாணத்திலுள்ள சமசமாஜிகளும், கம்யூனிஸ்டுகளும் இப்போதுதான் உணர்ந்திருப்பதாகத் தெரிகிறது. கடந்தவாரம் சங்கானையில் நடைபெற்ற சமாதான மாநாட்டில், இந்த உண்மையை அந்த இரு கட்சிப்பிரமுகர்களும் ஒப்புக்கொண்டு எடுத்துக் கூறியிருக்கிறார்கள். தீண்டாமையை இரவோடிரவாக விரட்டிவிட முடியாதென்றும் பலாத்கார வழியைக் கைவிட்டு, அன்பு வழியிற்தான் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென்றும் கூறியிருக்கிறார்கள்.

சீன சார்பு கம்யூனிஸ்ட் தலைவர் மேடைகளில் பலாத்காரத்தைத் தூண்டும் முறையில பேசிவந்தாலும், சங்கானை மாநாட்டில் கலந்துகொண்ட அக்கட்சியின் பிரதிநிதி பலாத்காரத்தை அடியோடு கண்டித்ததுடன் 'தீண்டாமைப் பிரச்சினையை தீர்க்க வெளியார் தலையிடு தேவையில்லை' யென்றும் கூறியிருக்கிறார்.

பலாத்காரத்தின் தீமையை இந்த மட்டிலாவது இடதுசாரிகள் உணர்ந்தது மகிழ்ச்சிக்குரியதே. இது தமிழரசாரின் சாத்வீகக் கொள்கைக்கு கிடைத்த வெற்றியென்பதை எவரென்றாலும் மறுக்க முடியுமா?

# கிழக்குமாகாணத்துக்கு நவீன போக்குவரத்து வசதி செய்து தருவீர்!

## இராசமாணிக்கம் கோரிக்கை

"எதிர் காலத்தில் இந்நாடு உணவுற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தியடைய வேண்டுமாயின் கிழக்குமாகாணத்திலுள்ள போக்குவரத்து சாதனங்களை, பாதைகளை, பாலங்களை, துறைகளை நவீன முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். கிழக்குமாகாணம் என்று நான் குறிப்பிடும்போது மட்டக்களப்பு மாவட்டம், திருமலை மாவட்டம், அம்பாறை மாவட்டம், மூன்றையுமே குறிப்பிடுகிறேன். இவ்வசதி செய்துகொடுத்தால், இம் மூன்று மாவட்டங்களும் இலங்கையின் உணவுற்பத்தியில் பெரும் பகுதியை உற்பத்தி செய்து கொடுக்கும்." இவ்வாறு இம்மாதம் 22ந் திகதி பாராளுமன்றத்தில் பேசிய பட்டிருப்பு எம். பி. திரு. சி. மூ. இராசமாணிக்கம் கூறினார்.



கிண்ணியாத் துறைக்கு பாலமமைக்கப்பட வேண்டும் என்ற மூதூர் முதல் எம். பி. ஜனாப் முகம்மதலி கொண்டு வந்த தனிநபர் பிரேரணை மீது திரு. இராசமாணிக்கம் பேசினார். அவர் மேலும் கூறியதாவது:-

'கிழக்கு மாகாணம் பல இடங்களில் ஆறுகளினால் துண்டிக்கப்பட்டிருக்கின்றது. இப்படித் துண்டிக்கப்பட்ட இடங்களில் துறைகளை ஏற்படுத்தி பாதைகளினாலும் வள்ளங்களினாலும் அவற்றைத் தாண்டிச் செல்லவேண்டிய நிலையில் மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

'வடக்கேயாளுயா தொடக்கம் கிழக்கே அண்மையில் பாலம் அமைக்கப்பட்ட அறுகம்பை வரைக்கும் ஏறக்குறைய பதினைந்து துறைகளுக்கு மேல் இருக்கின்றன. கிழக்கு மாகாண நிலப்பிரதேசம் இப்படியாகத் துண்டிக்கப்பட்டிருக்கின்றது.

'இப்படியாகக்கிழக்கு மாகாணம் ஆறுகளினால் துண்டிக்கப்பட்டிருக்கும் நிலையினால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று கூறினால் அது மிகையாகாது. ஒரு நாட்டின் அபிவிருத்திக்குப் போக்குவரத்துச் சாதனங்கள் மிகவும் இன்றியமையாதன. எனவே, பாதைகள் இல்லாத இடங்களில் சிறந்த பாதைகளை அரசாங்கம் அமைக்க வேண்டும்.

### பாலங்கள் வேண்டும்

'ஆறுகளும் வாவிகளும் உள்ள இடங்களிற் சிறந்த பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். பாலங்கள் அமைக்க முடியாத இடங்களில் நவீன இயந்திரப் படகு வசதிகளை ஏற்படுத்த வேண்டும். விவசாயத்திற்கு என்றால் என்ன கைத்தொழிலுக்கு என்றால் என்ன மக்கள் துரிதமாகவும் பாதுகாப்போடும் துறைகளைத் தாண்டிச் செல்ல வசதிகள் இருக்க வேண்டும் இத்தகைய வசதிகள் இல்லாத இடங்கள் அபிவிருத்தி அடைவதென்பது மிகவும் கஷ்டமான காரியமாகும்.

### விவசாயிகள் கஷ்டம்

'கிழக்குமாகாணம் இந்த நாட்டின் நெற்களஞ்சியமாக இருந்த போதிலும் அந்தப் பகுதியிலிருக்கும் மக்கள் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாத காரணத்தினால சிறந்த பாதைகள், சிறந்த பாலங்கள், சிறந்த துறைகள் இல்லாத காரணத்தினால் இன்று மிகவும் பிற்போக்கான நிலையில் இருப்பது மாத்திரமன்றி, தங்கள் விவசாயத்தைச் செய்வதற்கும் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

'இந்த அரசாங்கம் மாத்திரமல்ல. இதற்கு முன்பிருந்த அரசாங்கங்களும் இந்நாட்டின் போக்குவரத்து வசதிகளைத் திறம்பட ஏற்படுத்துவதற்குத் தவறிவிட்டன என்ற குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன்.

### உணவுற்பத்தி பெருகும்

'எதிர் காலத்தில் இந்த நாடு உணவு உற்பத்தியில் சுயதேவைப் பூர்த்தியை அடைய வேண்டுமாயிருந்தால், உணவுத் தேவைகளுக்காக வெளிநாடுகளை எதிர்பார்க்காத நிலையை ஏற்படுத்தவேண்டுமாயிருந்தால் கிழக்கு மாகாணத்திலுள்ள போக்குவரத்துச் சாதனங்களை, பாதைகளை பாலங்களை துறைகளை நவீன முறையில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். கிழக்கு மாகாணம் என்று கூறும் பொழுது மட்டக்களப்பு மாவட்டம், திருகோணமலை மாவட்டம், அம்பாறை மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களையும் நான் குறிப்பிடுகிறேன். இவ்வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தால், இம் மூன்று மாவட்டங்களும் இலங்கையின் உணவு உற்பத்தியில் பெரும்பகுதியை உற்பத்தி செய்து கொடுக்கும் என்று கூறவிரும்புகிறேன்.

'சிறு சிறு அரசியல் சர்ச்சைகள் இங்கு நடந்தன. அவைகளில் நான் நேரம் வீணாக்க விரும்பவில்லை. மூதூர் முதல் அங்கத்தவரின் இந்தப் பிரேரணை மிக முக்கியமானது. இந்தப் பிரேரணை கிண்ணியாத் துறைக்குப் பாலம் அமைக்க வேண்டுமென்ற ஒரு பிரேரணையாகவே இருக்கிறது. ஆனால், உப்பாறு, கங்கைத் துறை, மூதூர்த் துறை, கிளிவெட்டித் துறை, வெருகல் துறை ஆகிய ஐந்து துறைகளும் இந்த ஒரு தொகுதியைப் பிளந்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன. இந்தத் துறைகளில் ஒரு சில துறைகளுக்காவது பாலம் அமைக்க வேண்டியது அவசியம்.

## வீரகேசரியின் பொய்ச் செய்தி

திருமலைத் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதைக் கண்டித்தும், தமிழரசாரை தேசிய அரசாங்கத்திலிருந்து வெளியேறுமாறு கோரியும் திருமலையிலிருந்து வந்த நூற்றுக்கணக்கான பேர் கொழும்பிலுள்ள தமிழரசுத் தந்தையின் வீட்டில் சத்தியாக்கிரகம் செய்ததாக ஒரு முன் பக்கத் தலைப்புச் செய்தியை இம்மாதம் 27ந்திகதி வீரகேசரி வெளியிட்டிருந்தது. இது ஒரு அப்பட்டமான - முழுவதுமே கற்பனையில் உருவாக்கப்பட்ட ஒரு பொய்ச் செய்தியாகும்.

திருமலைத் துறைமுகத்தில் வேலை செய்யும் சில தொழிலாளர்கள் துறைமுகம் தேசியமயமாக்கப்பட்டதைக் கண்டித்தும், அது குறித்து நடவடிக்கையெடுக்குமாறு தமிழரசுத் தந்தையைக் கோரியும் அவரைப்பேட்டி கண்டது மட்டுமே உண்மையில் நடைபெற்றது.

சத்தியாக்கிரகம் என்ற பிரச்சினையே அங்கு எழவில்லை. இந்த நிலையில் வீரகேசரி தமிழரசுத் தந்தை வீட்டில் சத்தியாக்கிரகம் நடைபெற்றதாக அப்பட்டமான பொய்ச் செய்தியொன்றை வெளியிட்டதன் மூலம் தனது "தரத்தை" உணர்த்திவிட்டது என்று திரு. செல்வநாயகத்தைச் சந்தித்த திருமலைத் துறைமுகக் குழுவைச் சேர்ந்தவருவர் சுதந்திரன் நிருபரிடம் கூறினார்.

## வேலை நிறுத்தம்

அக்கரப்பத்தனையைச் சேர்ந்த சின்னத் தோட்டத்தில் உள்ள தொழிலாளர்கள் சுமார் 200 பேர்கள் இன்று முதல் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர் என்று அறியப்படுகிறது. மேற்படி தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு தீபாவளி முன்பணம் கொடுக்கமறுத்ததை தொடர்ந்தே இவர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்யுள்ளதாக தெரிகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் பசுமலை மாவட்டப்பிரதிநிதி திரு. எம். பி. வர்ணன் தொழில் அதிபருடன் தொடர்பு கொண்டுள்ளார். இப்பிரச்சனைக்கு சரியான முடிவு கிடைக்கும்வரை தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்யப்போவதாக மேற்படி தோட்டத் தொழிலாளர்கள் அறிவிக்கிறார்கள்.

இவ்வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## தொழிலாளர் வயிற்றில்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டது) 6 ஆண்டுகளுக்கு முன்பு 1961ல் வழங்கப்பட்ட ரூ. 6-27 சம்பளம் தேசியமயமானதும் மீண்டும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுளளது. இது தொழிலாளரிடையே ஆத்திரத்தையும், கொந்தளிப்பையும் ஏற்படுத்தியுள்ளது. ரூ. 10-60 கோடி விரைவில் இத்துறைமுகத்தில் ஒரு வேலை நிறுத்தம் வெடிக்கக் கூடுமென்றும் தொழிற்சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமலைத் துறைமுகம் தேசிய மயமானதைத் தொடர்ந்து திருமலைத் துறைமுகத்தில் சேர விரும்பும் சிப்பந்திகளுக்கு சிங்கள நிபந்தனை கோரப்பட்டிருக்கிறது.

புதிதாக வேலைக்குச் சேருபவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் நியமனக் கடிதங்களில் இந்தச் சிங்களத் தேர்ச்சி வற்புறுத்தப்பட்டுள்ளது என்று அறியப்படுகிறது.

அத்துடன் எந்தத் துறைமுகத்திலும் வேலை செய்யத் தயாராக இருக்க வேண்டும் என்றும் தொழிலாளருக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாம், இந நிபந்தனையின்படி திருமலைத் துறைமுகத்தில் வேலை செய்யும் தமிழ்த் தொழிலாளர்களை காலி கொழும்புக்கும் மாற்றிவிட்டு, அங்கு சிங்களத் தொழிலாளர்களை நியமிக்க முடியும் எனபது குறிப்பிடத் தக்கது. துறைமுகத்தை சிங்களமயமாக்கும் முயற்சி ஏற்கனவே ஆரம்பமாகிவிட்டது.

அத்துடன் தேசியமயத்தால் திருமலைத் துறைமுக வேலைகள் கொழும்பு, காலி துறைமுக வேலைகளின் அளவுக்குக் குறைந்துவிடுமென்றும் வேலைத் திறன் கெட்டு, பலத்த நஷ்டம் ஏற்படுமென்றும் அஞ்சப்படுகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவ்வாரச் சிறுகதை

# ராதிகாவின் தலைத் தீபாவளி

அவள் சினன்வாடி விமானத்தில் இருந்து கொழும்புக்குப் புறப்படும் விமானத்தின் முதற்படியில் நின்று தன் கணவன் சுகுமாரிடம் கையசைத்து விடை பெற்றபோது இருவர் அதரங்களிலும் புன்முறுவல் அரும்பியது. 'ராதிகா சாயந்திரம் நான்குமணி விமானத்தைத் தவறவிட்டு விடாதே' என்று அவன் பலதடவைகள் அவளை எச்சரித்தபோது அவளுக்குப் பெருமிதமாகவிருந்தது. அவன் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். விமானம் புறப்படுவதற்கு ஆயத்தம் என்று அறிவிக்கப்பட்டதும் அவள் மீண்டும் கையசைத்து அவனிடம் இருந்து விடைபெற்றுச் சென்று தன் ஆசனத்தில் அமர்ந்தாள்.

அன்று அவளுக்குச் சிறிது ஆறுதலாகவிருந்தது. வழக்கமாக அவள் விமான மூலம் புறப்படும் காலநேரத்தையெல்லாம் அளவிட்டறிந்து அவளைப் பார்ப்பதற்காக வந்து குவியும் விசிறிகளின் தொந்தரவு அதிகம் இருக்கதாதே அதற்குக் காரணம். அவள் ஹாயாக வந்து தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டதும் விமானம் புறப்பட்டது. விமானப் பணிப்பெண் ஒரு தட்டில் சில சாக்லெட்டுகள் வைத்து நீட்டிய போது அவளின் பார்வை ராதிகாவின் மேல் நிலைத்து நின்றது. அந்தப் பார்வை 'நீ அழகா நான் அழகா' என்று கேட்டது போல் இருந்தது. உதடுகள் விரிந்து புன்சிரிப்பாக மிளிர ராதிகா அவற்றில் ஒன்றைப் பொறுக்கிஎடுத்துக் கொண்டாள்.

ஒன்றரை மணிநேர ஆகாயப் பயணத்தின் பின் விமானம் இரத்மலானை விமான நிலயத்தின் பேரிரைச்சலுடன் இறங்கியது. பிரயாணிகள் இறங்கும் வரை காத்திருந்த ராதிகா தன் அழகுப் பையைக் கையில் சுற்றியபடி விமானத்தின் வாயிலில் வந்து நின்றாள். அங்கே அவளுக்காகப் பெரிய 'கேம்பிறிஜ்' கார் காத்து நின்றது. அவள் இறங்கிச் சென்றதும் ட்றைவர் மரியாதையோடு இறங்கிக் கதவைத் திறந்து விட்டான். அவள் தன்னைச் சுற்றி

மிட்ட கூட்டத்தை மெதுவாகச் சமாளித்து மோட்டாருக்குள் ஏறி அமர்ந்து கொண்டதும் மோட்டார் புறப்பட்டது.

'அப்போது நடிகை ராதிகா வாழ்க...... எங்கள் அபிமான நடிகை வாழ்க...!! என்ற கரகோஷம் வானைப் பிளந்தது. தன் மென்கரத்தை மோட்டார் சாளரத்தினூடாக நீட்டியசைத்து அவர்களுக்குத் தன் அன்பைத் தெரிவித்தபடி அமர்ந்திருந்த ராதிகாவின் அதரங்களில் மென்னகை மிளிர்கின்றது. பசுமையான சாலைகளைக் கடந்து சென்ற மோட்டார் திடீர் என பெரிய மதிற் சுவரின் நடுவே உள்ள வாயிலினூடாக உள்ளே சென்று கிறீச்சிட்டு நிற்கிறது.

'பாரதி ஸ்டுடியோ' எனப் பெயரிட்ட கட்டிடத்தின் வாயிலில் எத்தனையோ பேர் அவள் வரவுக்காகக் காத்து நிற்கின்றனர்.

நீங்கள் 'ஷூட்டிங்கிற்கு வரமாட்டீர்களோ என்று சந்தேகத்துடன் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தோம். நல்ல காலம் நேரத்துக்கு வந்து விட்டீர்கள்... இன்னும் ஐந்து நிமிட நேரத்தில் ஆரம்பிக்கலாமா......' டைரெக்டர் வலம்புரி ஆவலோடு அவளைப் பார்த்து வினவுகிறார். அவர் கேள்விக்கு பதிலளிப்பது போல் அலட்சியமாகத் தன் கைக்கடிகாரத்தைப் பார்த்து விட்டு 'ஒயெஸ்' இரண்டு நிமிடத்தில் வந்து விடுகிறேன். ஷூட்டிங்கை சிறிது நேரத்தோடு முடிந்தால் நல்லம் ஸார்... நான் இன்று நாலு மணி விமானத்தில் மீண்டும் ஊருக்குப் போக வேண்டும்....' கூறிக் கொண்டே தன் பிரத்தியேக அறையை நாடி நடக்கிறாள் அவள்.

'கண்டிப்பாக உங்களை மூன்று மணிக்குள் அனுப்பி விடுகிறேன் ராதிகா... நாளைக்குத் தீபாவளி... அதிலும் உங்களுக்குத் தலைத் தீபாவளியல்லவா... என்று டைரக்டர் கூறியது அவள் காதில் அரைகுறையாக விழுகிறது. அறையில் தனக்காக வைக்கப்பட்டிருக்கும் விலையுயர்ந்த கேக்கையும் ஆரெஞ் ஜூஸையும் ஒரு கைபார்த்துவிட்டுத் தன் கைக்குட்டையால் வாயைத் துடைத்தபடியே ஷூட்டிங் றூமுக்குள் விரைகிறாள்.

அங்கே அவளுடன் முக்கிய பாகமேற்று நடிக்கும் பிரதான நடிகன் ராம்மோகன் மேக்கப்போடு அவள் வரவுக்குக் காத்து நிற்கின்றான். அவனது வேஷத்தைக் கண்ட பின்பு தான் தாங்கள் அன்று நடிக்க இருப்பது 'தாஜ்மஹால்' என்ற நினைவு வருகிறது அவளுக்கு. ஹலோ ராதிகா ஏன் இவ்வளவு லேட்...? உனக்காக நான் இந்த மேக்கப்புடன் எவ்வளவு நேரம் காத்திருக்கிறேன் தெரியுமா...?

மோகனின் கேள்வி அவளை உலுப்புகிறது.

"நான் என்ன கறெக்ட்டைமுக்கு வருவதற்கு, சாதாரண நடிகை மட்டுந்தானா...? நான் ஒருவரின் அன்புக்குப் பாத்திரமான மனைவி என்பது ஏன் உங்கள் ஒருவருக்கும் புரிய மாட்டேன் என்கிறது. நடிகை என்றால் குடும்பப் பொறுப்புக் கவலை எதுவுமே இருக்காது என்று நினைக்கிறீர்களாக்கும். என் கணவர் சரியாக ஆறு மணிக்கு சினன்வாடி விமான நிலயத்தில் வந்து எனக்காகக் காத்திருப்பார்... ஆகையால் வாருங்கள் முதலில் ஷூட்டிங்கை முடிப்போம்' என்று அவள் சினந்து கூறிய போது மோகன் இலேசாகத் தனக்குள்ளே சிரித்துக் கொண்டான்.

அப்பப்பா பெரிய குடும்பப் பெண்ணாகிவிட்டாளாம்... அந்தப் பொறுப்பும் கவலையுமிருந்தால் சினிமாத் துறையில் இருந்து ஓய்வு பெறுவது தானே முறை. அதை விட்டு இரண்டு தோணியிலே எதற்காகக் கால் வைக்கவேண்டும். சென்ற வருடம் தீபாவளிப் பண்டிகையின் போது நாங்கள் எங்கள் குடும்பத்தாரைப் பற்றிக் கவலைப்பட்டு நேரத்தோடு ஷூட்டிங்கை முடித்து விட்டுப் போக வேண்டும் என்று கேட்ட போது எங்களையெல்லாம் கேலி செய்தவளுக்கு இன்று பெரிய குடும்பப் பொறுப்பு வந்துவிட்டதாம்...! எல்லாந் தனக்குத் தனக்கென்றால் அப்படித்தான்...பெரிய கற்புடைய பெண்...! தலைத்தீபாவளி கொண்டாடப் போகிறாளாம்...மோகன் தனக்குள்ளாகவே முணு முணுத்துக் கொண்டான்.

'ஷூட்டிங்கை ஆரம்பிக்கலாமா...?' டைரெக்டர் வலம்புரி கேட்டுக்கொண்டே தன் வேலையை ஆரம்பிக்கிறார... ...நடிகை ராதிகா மிகஅழகாக மேக்கப் செய்யப்பட்டு மற்றவர்கள் இவளொரு அப்ஸரசோ என ஐயுறும்படி கண்ணைப் பறிக்கும் வெளிச்சத்தில் வந்து நின்றாள். 'ராதிகா இன்னும் கொஞ்சம் நெருக்கமாக...ம்...மோகனை அணைத்தபடி நில்லுங்கள்' டைரெக்டர் வலம்புரி கட்டளையிடுகிறார்.

'அப்படின்னு எனக்கு நடிக்க முடியாது. ருகுளோஸாக நடிக்கக் கூடாதென்பது என் கணவர் கட்டளை...' டைரெக்டர் மட்டுமல்ல அங்கு கூடியிருந்த அத்தனை பேரும் அதிர்ந்து விடுகின்றனர்.

சென்ற மாதம் பிரபல ஒட்டல் முதலாளி ஒருவரைத் திருமணஞ் செய்துகொண்ட ராதிகா ஃபசும் பேச்சா இது என்ற திகைப்பு அவர்களுக்கு. திருமணத்துக்கு முன்பு வரை கதாநாயகி வேடந்தாங்கும் போதெல்லாம் கதாநாயகனுடன் மிகவும் இணைந்து இவர்கள் கணவன் மனைவியோ என்று ஐயுறும்படி நடித்து முதல்தர கவர்ச்சிநடிகைஎன்ற பெயரைத் தட்டிக்கொண்ட ராதிகா திடீர் என எப்படி மாறினாள் என்ற ஆச்சரியம் அவர்களுக்கு.

'ராதிகா...என்ன இது விளையாடுகிறீர்களா...? எத்தனை ஆயிரத்தைக் கொட்டி இந்தப் படத்தை ஆரம்பித்திருக்கிறோம் என்று தெரிந்து கொண்டும் இப்படி நீங்கள் வேண்டுமென்றே நடிக்கலாமா...? ஏற்கனவே உங்கள் திருமணத்தால் எங்கள் படமே பிந்திவிட்டது. அல்லது இந்தத் தீபாவளிக்கு அது ரிலீஸாகி இருக்க வேண்டும். அதுவே பெருத்த நட்டமாகி விட்டது எங்களுக்கு. மேலும் எங்கள் பொறுமையைப் பரீட்சிப்பதுபோல் ஏன் இந்தச் சோதனை...? பிளீஸ் ராதிகா...எப்படியாவது இந்தப் படம் எங்களுக்கு ஓர் வெற்றிப்படமாக அமைய வேண்டும். அதற்கு உதவி செய்யுங்கள்...இன்னும் பாக்கியுள்ளது இரண்டேயிரண்டு காட்சிகள்தான்...ஆரம்பக் காட்சியில் எல்லாம் மிகவும் நெருக்கமாக நடித்துவிட்டு இதில் இப்படி நடித்தால் படம் சோடைபோய் விடும்...ம்...கமோன்.'

டைரெக்டர் வலம்புரியின் கெஞ்சுதல் இது.

'என்னை மன்னிச்சுடுங்கோ என் கணவருக்கு விருப்பமில்லையே...!' 'ராதிகா உங்கள் கணவன் விருப்பத்தைக் கேட்டா நீங்கள் எங்கள் படத்தில் ஒப்பந்தம் செய்துகொண்டீர்கள். உங்களை நம்பி உங்களுக்கு முற்பணமாக நான் அதற்கு பன்னிரெண்டாயிரம் ரூபா தந்தேன் என்றுவது சிறிது நீங்கள் சிந்தித்துப்பார்க்கக் கூடாதா...? தயவு செய்து எங்களை நட்டாற்றில் விட்டு விடாதீர்கள்...! இம்முறை மட்டுமாவது நெருங்கி நடியுங்கள். நாங்கள் போட்ட முதலாவது வரட்டும் பிளீஸ்...!

வலம்புரி மீண்டும் கெஞ்சுகிறார்.

'ஹலோ ராதிகா...நீ வந்திருக்க மாட்டாய் என்று நினைத்தேன். இருந்தாலும் டைறெக்டர்களுக்குத் தொல்லை தராத ஒரு நடிகை உண்டென்றால் அது நீதான்...ம்...கறியோன்.' அப்போதுதான் ஸ்டுடியோவுக்குள் நுழைந்து கொண்டிருந்த உதவி டைறெக்டர்வாசுதேவனின் குரல்கேட்டு ராதிகா புன்சிரிப்புடன் நன்றிகலந்ய பார்வையை அவர்மீது அலைய விடுகிறாள்.

'யாரை ராதிகாவையா புகழ்கிறீர்கள்...? டைறெக்டர்களுக்குத் தொல்லை தராது நடித்த ராதிகா வேறு... ...இப்போ இங்கே நிற்கும் ராதிகா வேறு...கதாநாயகனுடன் நெருங்கி நடிக்க முடியாதாம். அதைப்பற்றித்தான் இவ்வளவு நேரமாக வாதாடிக்கொண்டிருந்தோம். நல்ல சமயத்தில் நீங்கள் வந்து சேர்ந்தீர்கள்...நீங்களாவது கூறிப் பாருங்களேன்.

வலம்புரி அலுத்துக்கொள்கிறார்.

எல்லோர் கண்களும் உதவி டைறெக்டர் வாசுதேவனின் பக்கம் திரும்புகின்றது. ராதிகாவுக்குத் திருமணமாகும் வரை ராதிகாவையும் வாசுதேவனையும் பற்றிப் பலரும் பல விதமாகக் கதைத்துக் கொள்வார்கள். அவர்கள்கூட மற்றவர்கள் பேசுகிறார்களே என்ற அக்கறையின்றி மிகவும் நெருங்கிப் பழகிக் கொள்வார்கள். சில மாதங்கட்கு முன்பு வாசுதேவனை ராதிகா இரகசியத் திருமணம் செய்து கொண்டு விட்டாள் என்ற அளவுக்கு அவர்களின் உறவு இறுகியிருந்தது. வாசுதேவனின் மோட்டார் இல்லாமல் ராதிகா எங்கும் செல்லமாட்டாள், ஷூட்டிங் நேரத்திற்கூட ராதிகாவின் நடிப்பு இல்லாவிட்டால் இருவரும் தனிமையைநாடி மெதுவாக நழுவி விடுவார்கள்.

ஆனால் யாரோ ஒரு பிரபல ஓட்டல் முதலாளியை நடிகை ராதிகா மணஞ்செய்து கொள்ளப்போகிறாள் என்ற செய்தி எட்டியதுமே எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள். கடைசியில் திருமணமும் நடந்துவிட்டது. திருமணத்திற்குப் பின் காதற்காட்சியில் நடிக்கும் முதல்ஷூட்டிங் இது. அதனால் அவள் பிகு பண்ணினாள்.

வலம்புரியின் வார்த்தைகள் வாசுவைப் பெருமிதமடையச் செய்கின்றது. 'கமோன் ராதிகா...உனக்குள்ள நல்ல பெயரைக் கெடுத்து விடாதே...இது...நடிப்புத் தானே...ம்...ஹறியப்...வாசுதேவனின் வார்த்தைகள் ராதிகாவை அசைய வைக்கின்றன. அவள் மறுவார்த்தையின்றி மோகனின் அருகிற் சென்று மிகவும் நெருங்கி நடிக்கத் தொடங்குகிறாள்... ...வெறிகுட்...ஷூட்...ஷூட் என்று சத்தமிடுகிறார்டைறெக்டர் வலம்புரி.

எல்லோரும் அதிசயத்தோடு வாசுதேவனைப் பார்க்கிறார்கள். அவர் நன்றியுடன் ராதிகாவைப் பார்க்கிறார். ராதிகா வெட்கத்துடன் தலைகுனிந்து கொள்கிறாள். அப்பொழுது அவள் அழகு பன்மடங்கு பெருகிக் காட்சியளிக்கிறது.

ஷூட்டிங் ஒருவாறு முடிவடைகிறது. வாசுதேவனின் வேண்டுகோளைத் தட்ட முடியாத ராதிகா அவர் காரில் ஏறி அமர்ந்துகொள்ளக் கார் புறப்படுகிறது. ஸ்டுடியோவில் நின்றவர்களின் கண்கள் எல்லாம் அவர்கள் மேல் பதிகின்றன. உதடுகள் எதை எதையோ முணுமுணுத்துக்கொள்கின்றன.

அதையெல்லாம் இலட்சியம் செய்யாமல் கார் வேகமாகப் பறக்கிறது. 'ராதிகா நாளை உனக்குத் தலைத் தீபாவளி. அதனால் நீ இன்று என்னுடன் இருந்து டீ அருந்த வேண்டும்'' ...'வாசுதேவனின் குரல் குழைகிறது' ......... ''சரியாக ஆறு மணிக்கு என் கணவர் நிலயத்தில் எனக்காகக் காத்திருப்பார்! என்று கூற அவள் உதடுகள் துடிக்கின்றன, ஆயினும் துணிவில்லை. அவள் இன்று பிரபல நடிகையாக முன்னணியில் நிற்பதற்குக் காரணம் வாசுதேவனாக இருக்கும்போது அவன் வேண்டுகோளை அவள் எப்படித் தட்ட முடியும்? வாசுதேவன் மட்டும்

(14-ம் பக்கம் பார்க்க)

பா. பாலேஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் இரு (சீன) கம்யூனிஸ்டு கட்சிகள்

## இலங்கை கம்யூனிஸ்டு மூலம் பீகிங் உதவி அனுப்புகிறது

தமிழகத்தில் புதிய சீன சார்பு கம்யூனிஸ்ட் கோஷ்டியொன்று இயங்கி வருவதாக நம்பகமான வட்டாரங்களி லிருந்து தெரிய வருகி றது. ஏற்கெனவே யிருந்துவரும் சீன சார் புக் கம்யூனிஸ்ட் கட்சி யினரிலும் பார்க்க மாசே துங்குக்கு அதிக "விசுவாசமுள்ளவர் கள்" தாமே என்பது இக்கோஷ்டியினரின் கருத்து என்று அறியப் படுகிறது. இப்புதிய கோஷ்டிக்கு இலங்கை யிலுள்ள சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதர வளித்துவருவதாகவும்' புதிய கோஷ்டிக்கும் பீகிங் கம்யூனிஸ்ட் கட் சிக்கு மிடையிலான தூதுவர்களாக இலங் கை சீன சார்புக் கம்யூ னிஸ்ட்டுகள் இயங்கிவரு வதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

இந்தியாவின் பல்வேறு மா நிலங்களிலும் ஆங்காங்கே யுள்ள சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி இரு கோஷ்டிகளாகப் பிரிந்து இயங்கி வருகிறதென் பது தெரிந்ததே. மேற்கு வங் காளத்தில், நக்சல்பாரி கோஷ்டி, ஜோதிபாசு கோஷ்டி யென இரு பிரிவுகள் இயங்கு கின்றன நக்சல்பாரி கோஷ்டி யினராலேயே அண்மையில் மேற்கு வங்காளத்தில் வெறிச் செயல்கள் தூண்டிவிடப்பட் டன.

இதேபோல கேரளத்திலும் இரு கோஷ்டிகள் இயங்கிவரு கின்றன. ஒன்று நம்பூதிரிபாத் தலைமையிலும் ஒன்று ஏ. கே. கோபாலன் தலைமையிலும் இயங்கிவருகின்றன. தமிழகத் திலும் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி இப்பொழுது இரு பிரிவு களாக பிளவுபட்டு இயங்கி வருவதாகத் தெரிய வருகிறது.

இப்போதைய சீன சார்புக் கம்யூனிஸ்டுகள் மாசேதுங்கின் கொள்கையை அப்படியே பின் பற்றவில்லையென்றும், சந் தர்ப்பவாதிகளாக மாறுகிறார் கள் என்பதுமே புதிய சீன சார்பு கோஷ்டியின் குற்றச் சாட்டு என்று தெரிகிறது.

புதிய சீன சார்பு கம்யூனிஸ் டுகள் 'மாசேதுங்'கின் "விசு வாசமுள்ள" தொண்டர்க ளாக இருப்பார்களாம். அத்து டன் நாட்டில் விவசாயிகளை யும், தொழிலாளர்களையும் தூண்டிவிட்டு குழப்பத்தையும் கொந்தளிப்பையும் ஏற்படுத்து வதே இவர்களின் நோக்கம் என்று தெரிகிறது.

தமிழக தி. மு. க. அரசாங் கம் அமெரிக்க சார்பாக இயங் குகிறதென்பதும் இவர்களின் குற்றச்சாட்டென்று அறியப் படுகிறது.

அண்மையில் தஞ்சையில் நடைபெற்ற விவசாயிகள் கிளர்ச்சியைத் தூண்டிவிட்ட தும் இவர்கள்தாம் என்றும், இப்போது தமிழகத்தில் ஆங் காங்கே பலாத்கார கிளர்ச்சி களை உருவாக்குவதில் முனைந் துள்ளனர் என்றும் அறியப்படு கிறது.

இப்புதிய சீன சார்பு கம்யூ னிஸ்டுகளுக்கு இலங்கை சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி முழு ஆதரவையும், ஒத்துழைப்பை யும் அளித்து வருவதாயும், பீக் கிங்கிற்கும் புதிய கோஷ்டிக்கு மிடையே பாலமாக இலங்கை கம்யூனிஸ்டுகள் விளங்குவதா யும் கூறப்படுகிறது.

## வைத்தியசாலையில் 'வீரப்போர்' புரிந்த எம்.பி

### வீரகேசரியின் புதிர்

'எம். பிக்கழகு இட மாற்றம் செய் தல்.' என்ன இது புது மொழி யென்கிறீர்களா? சில தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மைக் காலமாக விடாது செய்து வரும் 'பணியை' பார்க் கும்போது இந்தப் புது மொழி தோன்றுவதில் வியப்பென்ன?

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலையில், நோயாளிகளைப் பார்க்க அனுமதிக்காத இடை நேரத்தில், ஒரு நோயாளி யைப் பார்க்க வேண்டு மென்று அந்நோயாளியின் உறவினர்களுடன் ஆஸ் பத்திரிக்கு சென்று, அங் குள்ள ஊழியர்களுடனும், டாக்டருடனும் அண்மை யில் முட்டி மோதினாராம் அப்பகுதி எம். பி.

இடை நேரத்தில் நோயாளியைப் பார்க்க அனுமதிக்க முடியாது என்று டாக்டரும், ஊழி யர்களும் மறுத்துவிட்டன ராம். உடனே 'எம். பிக் கழகு சண்டித்தனம் செய் தல்' என்ற இன்னொரு புதுமொழி ஞாபகம் வரவே குறித்த எம். பி. 'சண்டித்தனத்திலும்' இறங்கிப் பார்த்தாராம். டாக்டரிடம் 'பாச்சா' பலிக்கவில்லையாம். வெறுப்புடன் வெளி யேறிய எம். பீ. தம்மை ஆஸ்பத்திரிக்குள் அனு மதிக்க மறுத்த ஊழியர் களையும் டாக்டரையும் ஒரு கிழமைக்குள் இட மாற்றம் செய்து விட்டா ராம். இதன் பயனாக, டாக்டரும் ஊழியரு மின்றி, முல்லைத்தீவு ஆஸ் பத்திரிக்கு செல்லும் நோயாளிகள் இப்போது தொல்லையடைந்து வருகி றார்கள்.

இதில் இன்னொருவேடிக் கையுமுண்டு. இந்தச்செய் தியை 21-10-67 வீர கேசரி 'எம். பியுடன் வாக் குவாதம்; கிடைத்தது இடமாற்றம்' என்றதலைப் புடன் பிரசுரித்திருந்தது. ஆனால், வீரகேசரியில் இந் தச் செய்தி வெளிவந்து சில நாட்களுக்கு பின் னரே முல்லைத்தீவு ஆஸ்பத்திரி டாக்டரும், ஊழியரும் இடமாற்றம் செய்யப்பட்டதாக தெரி கிறது.

எனவே வீரகேசரியின் நோக்கம் என்னவென்று முல்லைத்தீவு மக்கள் இப் போது கேட்கிறார்கள். குறித்த இருவரையும் இட மாற்றம் செய்யும்படி வீர கேசரிஜாடையாக 'புத்தி' சொல்லியதா? வீரகேசரி யின் இந்தப்போக்கு முல் லைத்தீவு மக்களுக்கு புரி யாத புதிராகஇருக்கிறது.

அத்துடன் கொழும்பி லிருந்து முல்லைத்திவுக்கு சென்று விசாரணை நடத் திய உயர்தர அதிகாரி, வைத்திய அதிகாரியும் இன்னும் ஓர் ஊழியரும் குற்றவாளிகள் என்று தீர்ப்பு கூறியதாகவும் செய்தி வெளியிட்டிருந் தது. அதுவும் தவறான செய்தியென்றும், விசார ணையின்போது எம். பியே குற்றவாளியென்று தீர்ப் பளிக்கப்பட்டதாயும் அறி யப்படுகிறது.

எம். பியின் இச் சர்வா திகாரப்போக்கு குறித்து முல்லைத்திவு மக்கள் ஆத் திரமடைந்திருக்கிறார் கள்.

தாம் கடமைபுரியும் நேரத்தில் தம்முடன்வந்து கலாட்டா செய்ததாக குறித்த டாக்டரும் ஆஸ் பத்திரி ஊழியரும் எம். பி மீது பொலீசில் புகார் செய்துள்ளனர் என்றும் விரைவில் பொலீசார் நட வடிக்கையெடுத்து வழக்கு தாக்கல் செய்யலாமென் றும் கூறப்படுகிறது.

## நீதி, நேர்மை தவறாத...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

லாயிரக் கணக்கான ஏழை மக் களையும் வாழ வைத்தார். இல்லை, வாழ வழி காட்டி னார். ஏனைய தொழில் துறையி லுள்ள ஊழியர்கள் சம்பள உயர்வுக்காக போராட்டம் நடத்தினார்கள்.

ஆனால் திரு. நீதிராசா அவர் கள் தம் கீழுள்ள தொழிலா ளர்களுக்கு, அவர்கள் கேட்கா மலே அவர்களது சம்பளத்தை உயர்த்திக்கொண்டேவந்தார். முதலாளிமட்டும் வாழவேண் டுமென்றுகருதவில்லை. தொழி லாளியும் சீரும், சிறப்புடன் வாழவேண்டுமென்று ஆசைப் பட்டார். அதனால் பல்லாயி ரக்கணக்கான பீடித் தொழி லாளர்கள் நலமையடைந்த வர்.

பீடித் தொழிலை மேலும் விருத்தி செய்ய வேண்டு மென்று கருதிய இவர், அகில இலங்கை பீடி உற்பத்தியாளர் சங்கத்தை நிறுவிய முக்கிய கர்த்தா மட்டுமல்ல, அதன் தலைவராகவும், செயலாளரா கவுமிருந்து பணியாற்றினார்.

இலங்கையின் பொருளா தார வளர்ச்சியில்பீடித்தொழி லும் மிக முக்கியமானதென அரசாங்கம் கருதுமாயின் அதன் வளர்ச்சியை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தவர் களுள் திரு. நீதிராசாவும் ஒரு வர். எனவே ஈழத்தில் பீடித் தொழில் தழைத்தோங்க வழி வகுத்தார்.

### சுருட்டுத் தொழிலை உயர்த்தினார்

யாழ்ப்பாணச் சுருட்டுக்கு அகிலஇலங்கையிலும்மதிப்பை உயர்த்தும் வகையில் அதற் காகவும் பாடுபட்டார். இன்று ஈழத்தில் பெயர்பெற்று விளங் கும் சுருட்டுவகைகளில் கணகலிங் கம் சுருட்டும் பிரசித்திபெற்ற தொன்றாகும். இதன் புகழை உயர்த்த வழி வகுத்தவர் இவரே.

மிக இளம் வயதிலேயே வர்த்தகத் துறையில் இறங்கி, தாம் மேற்கொண்டதொழிலை விருத்தி செய்ததோடு, தம் வாழ்விலும் பொருளாதார நிறைவு பெற்றார். ஈட்டிய பொருள்கள் யாவற்றையும், தமக்கும், தமது குடும்பத்திற் கும் இனபந்துக்களுக்கும் மட் டும் செலவுசெய்து திருப்தி யோடு வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் அப்படிக் கருத வில்லை. பிறந்த நாட்டிற்கும், அம் மக்களுக்கும் சேவை செய்ய வேண்டுமென கருதி னார்.

தேடிய பொருள்களில் பெரும் பகுதியை, தானதரு மம் செய்வதிலும், சமய நிறு வனங்களின் வளர்ச்சிக்காக வும் செலவிட்டார். கதிர் காமம் தொடங்கி காரைநகர் சிவன் கோவில் வரையுமுள்ள பல முக்கிய தலங்களுக்கு வேண்டிய நிதியுதவியளித்துள் ளார். 1964ம் ஆண்டில் ஏற் பட்ட வெள்ள நிவாரணத் தின்போது அவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. வெள்ளப் பெருக்கால் திருக் கேதீச்சரமும், மன்னார் பகுதி யும் பெருமளவில் பாதிக்கப் பட்டிருந்தது. தமது மோட் டார் வாகனங்களில் இலட்சக் கணக்கான ரூபாய்கள் பெறு மதியான பொருட்களை அவ் விடங்களுக்கு அனுப்பிவெள்ள அகதிகளுக்குப் பெரும் உதவி புரிந்தார்.

### அகதிகளுக்கு உதவி

1958ம் ஆண்டுக் கலவரத் தின்போது இவர் ஆற்றிய தொண்டு அளப்பரியது. முகாம்களில் அடைபட்டிருந்த அகதிகளுக்கு வேண்டியளவு உதவி புரிந்தார்.

கொழும்பு செட்டித்தெரு சிறீ கதிரேசன் கோவில் புன ருத்தாரண வேலைகள் இவரது முயற்சியினாலேயே இனிது நிறைவேறியது இவர் சைவ சமய நிறுவனங்கள் பலவற் றின் தலைவராகவும், இயக்குந ராகவும் விளங்குகின்றார்.

மிகவும் தயாள குணம் படைத்த இவர் எவருடனும் அன்பாகப் பழகும் சுபாவ முடையவர். அதனால் மக்களி டையே அளவு கடந்த செல் வாக்கைப்பெற்று விளங்குகின் றார். நாட்டுக்கும், மக்களுக் கும் சேவையாற்றி [illegible]

உ [illegible]

கம் 1965ம் ஆண்டில் சமா தான நீதவான் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. அதன்பின் அரசியலில் இறங்கி நாட்டுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆசை ஏற் பட்டது.

### மாநகரசபை உறுப்பினர்

1965ம் ஆண்டு டிசம்பரில் நடைபெற்ற கொழும்பு மாந கரசபை தேர்தலில் ஜிந்து பிட்டி வட்டாரத்தில்போட்டி யிட்டு அதிகப்படியான வாக்கு களால் வெற்றியீட்டினார். ஒரு அரசியல் கூட்டம் தானும நடத்தாமல் வெற்றியீட்டிய பெருமை இவருக்குண்டு. மாந கரசபைப் பிரவேசத்துடன் அரசியல் பற்று அதிகரித்தது.

சாதி சமய வேறுபாடற்ற முறையில் பணியாற்றி வரும் இவரின் சேவை மனப்பான் மையை உணர்ந்த தேசிய அர சாங்கம், தமிழரசுக்கட்சியின் பேராதரவுடன் மூதவை உறுப் பினராகத் தெரிவு செய்திருக் கின்றத. சுயநலமற்ற முறை யில் மக்களுக்கு ஆற்றிவரும் சேவைக்குக் கிடைத்த வெற்றி இது.

மூதவை உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட செய்தி யறிந்து கிடைக்கப்பெற்ற வாழ்த்துக்களும், அவர் இல் லத்தை நாடி பெருக்கெடுத்த மக்கள் கூட்டமும், தேசிய அர சாங்கம் செய்த தெரிவு, மக் கள் செய்த தெரிவு என்பதை உறுதியாக்கிற்று.


இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்கள் இழந்த உரிமை களைப் பெறுவதற்கு அயராது உழைப்பார் என்பதில் தமிழ் பேசும் மக்கள் இவர்மீது அளவு கடந்த நம்பிக்கை கொண்டுள் ளனர். இந்நாட்டில் தேசியஐக் கியத்தை உருவாக்குவதற்கு சாதி சமய வேறுபாடற்ற முறையில் பணியாற்றுவா ரென தேசிய அரசாங்கம் இவர்மீது பெரும்மதிப்புவைத் திருக்கிறது. ஈழத்திலுள்ள சகல இன மக்களும் இவர்மீது வைத்திருக்கும் நல்லெண்ணத் திற்கு பாத்திரமாக நற்பணி யாற்ற எல்லாம் வல்ல இறை [illegible]

[illegible]



தமிழரசுக் கட்சியின் முன்னணி வீரனும், யாழ்ப்பாணம் அரி யாலை-மேற்கு தமிழரசு வா. மூ. தலைவருமான திரு. நா. தேவராசன் செல்வி தங்கம்மாவை அண்மையில் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார். மண விழாவைத் தமிழரசுத் தந்தை செல்வா உட்பட தலைவர்கள் அனைவரும் சென்று சிறப் பித்தனர். வாழ்க மணமக்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நாடக விமர்சனம்

# ஆனந்தக் கண்ணீர்

சென்ற மாதம் யாழ்ப்பாணம் றெக்கிளமேசன் புனித ஆரோக்கிய நாதர் வாசிகசாலை முன்றலில் யாழ் 'தியாகு' நாடக மன்றத்தினரின் 'ஆனந்தக் கண்ணீர்' என்னும் சமூக மறுமலர்ச்சி நாடகம் நான்காவது முறையாக மேடையேற்றப்பட்டது.

'சொத்தி'த் தங்கையின் நல்வாழ்வுக்காக பாடுபடும் அண்ணன் தன் நிலை மறந்து கைப்பிடித்தவள் கருத்தையேற்று தகாத ஒருவனை தங்கைக்கு மணம் முடித்து வைக்க முயலுகிறான். தங்கை, அண்ணனையும், அண்ணியையும் வெறுத்து தற்கொலை செய்ய கடலில் விழுகிறாள். ஆனால்...! ஆசிரியர் ஒருவரினால் காப்பாற்றப்பட்டு 'தன்' உள்ளத்தை ஆசிரியரின் அன்பிற்கு காணிக்கையாக்குகிறாள். ஆசிரியரின் தந்தை மகனை வைத்து லாபம் சம்பாதிக்க எண்ணுகிறார். இதனால் 'மகன் தந்தை' கருத்து வேற்றுமை ஏற்படுகிறது. மகன் மனைவியுடன் மட்டக்களப்பை நோக்கி செல்கிறான்' அண்ணன் குடும்பம் பிரிகிறது...! தங்கையை தேடியலையும் அண்ணன் விபத்தொன்றில் காலொன்றை பரிகொடுத்துவிட்டு தவிக்கிறான். ஈற்றில் எல்லாரும் மட்டக்களப்பை நோக்கி வருகின்றனர். தங்கையின் நல்வாழ்வைக் கண்டு 'ஆனந்தக் கண்ணீர்' வடிக்கும் அண்ணன் நோய் முற்றி தங்கையின் கரங்களில் உயிர் விடுகின்றான்.

இது நாடகத்தின் மையக் கதை—

மனித சமூகத்தின் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைகள் 'ரசனையாக' இந்த நாடகத்தில் கையாளப்பட்டிருக்கின்றது. கருத்தமைந்த வசனங்கள். காட்சிக்கு காட்சி விறுவிறுப்பான அமைப்பு முறைகள் யாவும் 'இலங்கையில் ஓர் தரமான' நாடகமென பாராட்டும்படியாக அமைந்துள்ளது. சிந்தனைச் சிறப்பும் அறிவாற்றலும் நிறைந்த கதாசிரியர் ஐயா ஜோசப் மேற்படி நாடகத்திற்கு கதை வசனம் எழுதியிருக்கிறார். வளர்ந்துவரும் இக்கதாசிரியரின் எதிர்காலம் உண்மையிலேயே ஈழத்திலும் நல்ல பல நாடகங்களை தோற்றுவிக்குமென்றால் மிகையல்ல —

'பாலனாக' நடித்த கிறேகறி தங்கராஜா அனுபவம் நிறைந்த நடிகர். நாடகத்தில் அவரின் நடிப்பு காட்சிக்குக் காட்சி மெருகூட்டியது. மீனாவாக நடித்த கே யோகருஜா மெச்சும்படியாக பெண் பாத்திரத்தை நடித்தார். ஊனக்காலோடு நொண்டி, நொண்டி நடித்த அந்த நடிப்பிருக்கிறதே! ஆ......! அதுவே போதும் நாடகத்தின் சிறப்பை உணவிட.

மற்றும் பிடோமினிக் எஸ். யேசுதாசன், ப. பஞ்சலிங்கம், ஆர். கார்த்திகேசு, ஏ. மரியநாயகம் முதலியோரின் நடிப்பும் நாடகத்தின் சிறப்பிற்கு முத்திரையாக அமைந்துவிட்டது. இந்த நாடகம் பல மேடைகளில் மேடையேற இருக்கிறது இதன்மூலம் இந்த நாடகத்தின் பெருமையை நாடக ரசிகர்கள் அறியக்கூடியதாக இருக்கும்.

— கலைவாணன்.

திரை விமர்சனம்:

# முகராசி

ஒரே தாயின் பிள்ளைகளாகப்பிறந்த இரு வேறு திசைகளில் செல்லும் அண்ணன் தம்பி கதைதான் 'முகராசி'

தாயின் சொற் கேட்டு வளர்ந்தவன் பொலிஸ் இன்ஸ்பெக்டராகிறான். தாயின் சொற் கேளாமல் திரிந்தவன் குற்றவாளிக் கூண்டில் நிற்கிறான். தாய் சொல்லை தட்டுபவர்களுக்கு இது ஒரு பாடம் என்று கூறுகிறது முகராசி.

இந்தப் படத்தில் முதலும் முடிவுமாக உள்ள ஒரு புதுமை ஜெமினி கணேசனும் எம். ஜி. ஆரும் இணைந்து நடித்திருப்பதே.

இன்ஸ்பெக்டர் ராமுவாக நடித்திருக்கும் எம். ஜி. ஆர். இயல்பாக நடித்திருக்கிறார். கடமையே கண்ணாக பாசத்துக்கு மேற்பட்டு நின்று பணி புரியும் பாத்திரம் அவருக்கு பழக்கப்பட்ட ஒன்று'

அவருடைய அண்ணன் ராமுவாக ஜெமினி கணேசன், தாயைக்கொன்றவனைப் பழி தீர்ப்பேன் என்று அவர் வைராக்கியம் பூணும் கட்டம் மறக்க முடியாதது.

ஜெயலலிதா கவர்ச்சிப் பாவையாக வந்து எம். ஜி. ஆருடன் துள்ளிக் குதித்து காதல் புரிகிறார். அவர் எம். ஜி. ஆரிடம் சிலம்பு பயிலும் காட்சியை ரசிக்கலாம்.

வழமை போலவே அடிபிடிக் காட்சிகளுக்கு குறைவில்லை.

பாடல்கள் இனிக்கின்றன.

சினிமாஸ் திரைகளில் காட்சி தரும் முகராசி நல்ல தீபாவளி விருந்து.

# ஜோதிலட்சுமிக்கு ஏற்பட்ட படகு விபத்து

ஜோதிலட்சுமிக்கு ஒரு விபத்து ஏற்பட்டது. படப்பிடிப்பின் போது அல்ல. 'பூவும் பொட்டும்' வெளிப்புறக் காட்சிகளில் நடிக்க கொடைக்கானல் சென்றிருந்தார் அவர். படப்பிடிப்பு இல்லாத சமயம், அவர் தன் தாயாருடன் படகு ஒன்றை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு ஏரியில் சென்று கொண்டிருந்தார். கரைக்கு சற்றுத் தள்ளி படகு சென்றுகொண்டிருந்தது.

ஜோதிலட்சுமி சென்று கொண்டிருந்த படகுக்குப் பின்னால் ஒரு படகும் ஏரியின் நடுப்பக்கத்திலிருந்து ஒரு படகும் வந்து கொண்டிருந்தன.

ஜோதிலட்சுமி சென்ற படகு மெள்ள சென்று கொண்டிருந்தது. எதிரே வரும் படகைக் கண்டு தம் படகின் வேகத்தைக் குறைத்தார் ஜோதிலட்சுமி, எதிரே வேகமாக வந்துகொண்டிருந்த படகு நல்ல காலமாக ஜோதிலட்சுமியின் படகில் மோதாமல் அவருக்குப் பின்னால் வந்த படகின் பக்கவாட்டில் சென்று மோதியது.

அவ்வளவு தான்.

டமாரென்ற சப்தம்.

ஜோதிலட்சுமி திரும்பிப் பார்த்தார். இரண்டு படகுகள் மோதிக் கொண்டதைப் பார்த்தவுடன் திகைத்தவராக செயலற்று ஒரு கையை படகின் விளிம்பில் வைத்துக் கொண்டு இன்னொரு கையால் துடுப்பைப் பிடித்துக் கொண்டிருந்தார்.

சில விநாடிகளில் மோதிக் கொண்ட படகுகளில் ஒன்று அம்புபோல விர்ரென்று பின் பக்கமாக ஜோதிலட்சுமியின் படகுக்கு அருகில்வந்தது. அதன் பக்கவாட்டுப் பகுதி ஜோதிலட்சுமியின் படகில் உரசிக் கொண்டு சென்றது.

விளிம்பில் வைத்துக் கொண்டிருந்த அவருடைய கையில் பலமான காயம்.

சில நிமிடங்களில் மூன்று படகுகளும் சமாளித்துக் கொண்டு ஏரியில் மிதந்தன. பின்னால் வந்த படகிலிருந்த மனிதன் 'இப்படித்தாங்க ரெண்டு வாரத்துக்கு முன்னாடி இரண்டு படகுங்கு மோதிச்சு, உங்க மாதிரி ஒரு பெண்ணோட கை அப்படியே நசுங்கி எலும்பு முறிந்து விட்டது'' என்று கூறினான்.

'ஆமாங்க! அப்படி ஏதும் தப்பித்தேனே'' என்றார் ஜோதிலட்சுமி.

# திரைவாணன் பதில்கள்

பி. தங்கராசா,
ஆரையம்பதி-3.

கே: படகோட்டி இந்தியாவில் எத்தனை நாட்கள் ஓடியது?

ப: 60 நாட்கள்!

ராம்ராம்,
ஆரையம்பதி-3.

கே: சிவாஜி ரசிகர்கள் உயர்ந்தவர்களா? எம். ஜி. ஆர். ரசிகர்கள் உயர்ந்தவர்களா?

ப: இருவரின் இரசிகர்களுமே உயர்ந்தவர்களல்லர். படம் பார்க்கும் போது ஆளைப் பார்க்காமல் கதையையும் நடிப்பையும் எவர்இரசிக்கிறார்களோ அவர்களே உயர்ந்த இரசிகர்கள்—

என். விஜயகுமார்,
தண்டுவான்.

கே: திரைப்பட நடிகர்கள் எதைப்பொறுத்துக் கொள்வார்கள்? எதை வெறுப்பார்கள்? எதை மறுப்பார்கள்?

ப: தங்களைக் கேட்காமலே தங்கள் பெயரில் பத்திரிகைகள் கட்டுரை வெளியிடுவதை பொறுப்பார்கள். தங்கள் படங்களுக்கு சாணியடிப்பதை வெறுப்பார்கள். தங்களுக்கு வயது அதிகமாகி விட்டதென்பதை மறுப்பார்கள்.

மா. குலேந்திரன்,
இரத்மலானை

கே: தங்கை படத்தில் சிவாஜி நிசமாக சண்டை பிடிக்கிறாரா?

ப: நிஜமாக யாரும் எப்படத்திலும் சண்டையிடுவதில்லை.

சா. தேவராஜ் தனிசிங்,
கருக்குப்பனை.

கே: ஜெய்சங்கர் நடித்துள்ள படங்களில் அதிக வசூலும், அதிக நாட்களும் ஓடிய படமெது?

ப: அதிக வசூல் தந்தது பட்டணத்தில் பூதம். அதிக நாள் ஓடியது குழந்தையும் தெய்வமும்.

அ. அ. கிறிஸ்ரி,
யாழ்ப்பாணம்.

கே: சிவாஜிகணேசன்நடித்த தங்கை படம் இந்தியாவில் எத்தனை நாட்கள் ஓடின?

ப: 70 நாட்கள்.

கே. சண்முகநாதன்,
கிளிநொச்சி.

கே: கண்ணகி என்ற படத்தின் மூலம் பிரபலமான வசன கர்த்தா யார்?

ப: இளங்கோவன்!

சிவாஜி ராஜன்
கொட்டடி

கே: நடிப்புலகின் மேதை சிவாஜி கணேசனின் 'ஊட்டி வரை உறவு' படம் தீபாவளி வெளியீடா?

ப: ஆம்.

கே: நாற்பது வயதுக் கணேசன் 'திருவருட் செல்வரில்' எண்பது வயதினராக நடித்தார் என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லவா?

ப: 52 வயது எம். ஜி. ஆர். 25 வயது வாலிபனாக நடிக்கும் போது 40 வயதுடைய சிவாஜி 80 வயது முதியவராக நடித்ததில் ஆச்சரியம் என்ன?

பி. சண்முகசுந்தரம்
ஆரையம்பதி

கே: எம். ஜி. ஆருக்கு புத்திரப்பேறு இல்லாததைப் பற்றி நான் மிகவும் கவலைப்படுகிறேன். உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: கவலைப்பட வேண்டியவர் எம். ஜி. ஆர். அவருக்கே அந்தக் கவலை இல்லாதபோது நீங்கள் கவலைப்பட்டு என்னவது?

எஸ். வி. தேவா
அக்கரைப்பற்று-7

கே: 14 நாட்கள் வசூலில் எங்கவீட்டுப் பிள்ளையா அல்லது காவல் காரனா முன்னணியில் நிற்கின்றது?

ப: முன்னணியில் நிற்பது எங்க வீட்டுப் பிள்ளையே!

பி. எஸ். மார்க்கண்டு
புல்மோட்டை

கே: சிவாஜி கணேசன் எம். ஜி. ஆர். ராஜேந்திரன், ஜெய்சங்கர், ரவிச்சந்திரன், ஆனந்தன் ஜெமினிகணேசன் சுந்தரராஜன் இவர்கள் எட்டு பேர்களிலும் சிறந்த நடிகர் யார்?

ப: சிவாஜி கணேசன் தான் என்பதை நான் சொல்லித் தான் தெரிய வேண்டுமா?

கே. எஸ். ராஜா
கொம்மாதுறை

கே: சண்டைக் காட்சிகளில் நடிப்பது ஒரு நடிப்பா என்று ஒரு பத்திரிகையில் சிவாஜி எழுதியிருந்தார். 'தங்கை' படத்தில சண்டைக் காட்சியில் நடித்திருக்கின்றாரே?

ப: மக்கள் ரசனையுடன் எதிர் நீச்சல் போட்டு களைத்து விட்டார். அதனால் தான்!

வெ. பிரான்சிஸ் சேவியர்
கருக்குப்பனை

கே: பேபி சகிலா நடித்த முதல் படம் யாது?

ப: கற்பகம்!

கே: 'குழந்தையும் தெய்வமும்' படத்தில் நாகேஸ் ஏன் அபாரமாக நடித்திருக்கிறார்?

ப: அவரது திறமையை வெளிக்காட்ட சந்தர்ப்பம் தரப்பட்டால்!

திரைவாணன்,
சுதந்திரன் கேள்விபதில் பகுதி
த. பெ. இல. 1183,
கொழும்பு.

# வானொலி நடிகர்களுக்கு ஒரு வேண்டுகோள்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ் நடிகர் சங்கம் எடுத்த நடவடிக்கைகளைத் தொடர்ந்து பல மாதங்களாகச் சந்தர்ப்பங்கள் கிடைக்காதிருந்த பல நடிகர்களுக்கு இப்போது சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டு வருகின்றன. எனவே, கூட்டுத்தாபனம ஆரம்பித்து இதுவரை நடிக்கச் சந்தர்ப்பங்கள் ஒன்றேனும் கிடைக்காதிருக்கும் நடிகர்கள் யாராவதிருப்பின் உடனடியாக நடிகர் சங்கச் செயலாளருடன் (21 சில்வர் சிமித் லேன், கொழும்பு. 12 என்ற விலாசத்தில்) தொடர்பு கொள்ளும் படு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். இந்தத் தகவல் நடிகர் சங்கச் செயலாளர் எஸ். எஸ். கணேசபிள்ளை அவர்களால் அறிவிக்கப் பட்டிருக்கிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தேவிகா அளித்த தீபாவளிப் பேட்டி

தீபாவளியன்று மறக்க முடியாத சம்பவம் நடந்திருந்தால் சொல்ல முடியுமா? 1965ம் ஆண்டுத தீபாவளியை மறக்க முடியுமா? இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் போரினல் ஏற்பட்ட சூழ்நிலையில், பாதுகாப்பு நிதிக்கு நிதி திரட்ட அன்று கார்ப்பரேஷன் ஸ்டேடியத்தில் கிரிக்கெட்போட்டி நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு விளையாடும் வாய்ப்பும் எனகருக் கிட்டியது.

நாட்டிற்காக நல்லதொரு பணியில் ஈடுபடும் வாய்ப்பு அந்தப் பண்டிகை நாளன்று எனக்குக் கிட்டியது.



தீபாவளியன்று தாங்கள் எவ்வித ஆடை, அணிகலன்கள் உபயோகப்படுத்துவீர்களென்பதை ரசிகர்களுக்குக் கூறுவீர்களா?

திரைப்படங்களில் பலவித ஆடைகளை அணிந்தாலும், அன்ருட வாழ்க்கையில் அதிக ஆடம்பரத்தை விரும்பாதவள் நான். மேலும் பண்டிகை தினங்களில் புதிய ஆடைகளை யணிந்துகொள்ள வேண்டும் என்னும் சம்பிரதாயத்தில் அதிக நம்பிக்கையும் எனக்குக் கிடையாது. ஆனல் நான் விரும்பும் பண்டிகைகளில் எனக்கு மிகவும் பிடித்தது தீபாவளியாகையால், அன்று எளிமையான புதிய ஆடையை அணிந்துகொள்வேன்.

தங்களுக்கு எப்பொழுது தலைத்தீபாவளி?

தீபாவளியென்றலே தலையில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதுதானே முக்கிய அம்சம்? ஆக எல்லா தீபாவளியும், எல்லோருக்கும் தலை தீபாவளிதானே?

தீபாவளியன்று தாங்கள் நடித்து வெளிவந்த 'முதலாளி' படத்தின் வெற்றியை எப்படிக் கொண்டாடினீர்கள்?

உண்மையில் அந்தத் தீபாவளியை உற்சாகமாக, மகிழ்ச்சியுடன் கொண்டாட முடியவில்லை! காரணம், 'படம் எப்படி ஓடுமோ? ரசிகர்களிடம் அதற்கு வரவேற்பிருக்குமா' என்கிற கேள்விகளே என் மனதில் நிரம்பியிருந்தன. மேலும் தேவிகா என்ற பெயர் அப் படத்தில்தான் எனக்கு வைக்கப்பட்டது. 'தேவிகா' என்ற பெயர் திரையுலகில் நிலைத்து நிற்குமா, அப் பெயருக்கு ராசியுண்டா? அப்பெயர் எனக்குப் பெயரையும், புகழையும் தேடிக் கொடுக்குமா என்கிற சிந்தனைகளிலேயே ஈடுபட்டு, பண்டிகை நாள் என்ற நினைப்பே இல்லாமலிருந்தேன்.

தீபாவளியன்று தாங்கள் செய்யும் பலகாரங்கள் என்ன? அதை எப்படிச் செய்கிறீர்கள் என்பதை ரசிகர்களுக்கு விளக்கமாகக் கூறுகிறீர்களா?

எனக்கு நிச்சயமாக தெரியாதது என்று ஒன்று இருந்தால் அது சமையல்தான். உண்மையில் சமையல் செய்யக் கற்றுக்கொண்டு, நான் செய்யும் சாப்பாட்டை, நானே ருசித்துச் சாப்பிட வேண்டுமென்ற ஆவல் உண்டு. ஆனல் இன்று வரை அந்த விபரீத பரீட்சையில் ஈடுபட நேரம் கிடைக்கவில்லை.

தீபாவளியன்று வீட்டில் செய்யும் பலகாரங்களைத்தான் சாப்பிடுவேன். அதை எப்படிச் செய்கிருர்கள் என்பதைப்பற்றி எனக்கென்ன கவலை? உள்ளே தள்ள வேண்டியதுதான் என்னுடைய முக்கிய வேலை.

ஆனல் ஒன்று, சாதாரண நாட்களில் உணவு கட்டுப்பாடு முறையை கடைப்பிடிக்கும் நான் அன்று, அதற்கு 'லீவு' கொடுத்து விடுவேன்.

தீபாவளியன்று தங்கள் வளர்ப்புப் பிராணிகளுக்கு என்ன பரிசளிப்பீர்கள்?

நான் எந்தப்பிராணிகளையும் வளர்ப்பதில்லை. அதனல் இந்தப் பிரச்சினை எனக்குக் கிடையாது.

இந்த வருடம் தீபாவளியன்று தங்கள் படம் வெளியாகாதது வருத்தம்தானே?

இடையவே கிடையாது பண்டிகை தினங்களில்தான், நான் நடித்த படங்கள் வெளிவர வேண்டுமென்ற விருப்பம் எனக்குக் கிடையாது. என்று வெளிவந்தால் என்ன, படம் நன்ருக ஓட வேண்டும், புகழையும் பெயரையும் சம்பாதிக்க வேண்டும். அவைகள் தாம் முக்கியம்.

தங்களின் வாழ்க்கையில் முக்கிய பண்டிகை தீபாவளியா? பொங்கலா?

தீபாவளியும், அதற்கடுத்த நாள் வரும் நோன்பும்தான் நான் முக்கியமாகக் கொண்டாடும் பண்டிகைகள்.

தீபாவளித் திருநாளன்று தாங்கள் எடுக்கும் நல்ல முடிவு என்ன?

என் வாழ்க்கைப் பாதையில் புதிய, செழுமையான திருப்பமொன்றை ஏற்படுத்தக்கூடிய முடிவொன்றை எடுக்க வேண்டுமென்பதுதான் என் விருப்பம்.

தீபாவளியன்று ஆண்டவனிடம் தாங்கள் வேண்டிக்கொள்வது என்ன?

அனைவரும் எல்லா நலங்களையும் பெற்று, சுகமாக வாழவேண்டும் என்பதுதான் என் பிரார்த்தனையாக இருக்கும்.

எந்த தீபாவளியாவது உங்களுக்கு சோகத்தை உண்டாக்கியது உண்டா?

உண்டு. நான் பிறந்தது முதல் இரண்டு தீபாவளி பண்டிகை நாட்களைக் கொண்டாட முடியவில்லை. நான் 10 வயது சிறுமியாக இருந்த பொழுது எனது தாயார் உடல்நலமில்லாமல் படுத்திருந்தார். அவர் உடம்பு தேறி எழுந்திருக்க வேண்டுமென்ற கவலையில் அந்தத் தீபாவளியைக் கொண்டாட முடியவில்லை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னல் வந்த தீபாவளிப் பண்டிகையையும் நான் கொண்டாட முடியவில்லை. பண்டிகைக்கு சில நாட்களுக்கு முன்னல், நான் இன்று இருக்கும் நிலைக்கு மிகவும் முக்கியக் காரணமாயிருந்த எனது பாட்டி இறந்துவிட்டார். அதை இன்று நினைத்தாலும், கண்களில் நீர் வருகிறது.



'தாயே உனக்காக' படத்தில் சிவாஜி, பத்மினி



தாயைக் கொன்றவனைப் பழிக்குப் பழி வாங்கத் துடிக்கும் ஒரு பாத்திரத்தில் 'முகராசி யில்' தோன்றி சிறந்த முறையில் நடித்துள்ள ஜெமினிகணேசனை இங்கு காணலாம்.

# ஜெயலலிதாவின் தீபாவளி

சிறு வயதில் நான் தீபாவளி கொண்டாடிய விஷயத்தைக் கூற விரும்புகிறேன். தீபாவளி தினம் என்றல் எனக்கு ஐந்து வயதிலிருந்தே, அதாவது விபரம் தெரிந்த நாளிலிருந்து ஒரே மகிழ்ச்சிதான். என் மகிழ்ச்சி என் வீட்டாருக்கு மிகுந்த தொல்லை கொடுப்பதாகும். தீபாவளி என்றல் விடியற்காலை 2 அல்லது 3 மணிக்கே எழுந்து விடுவேன். உடனே வீட்டில் இருப்பவர்களையெல்லாம் எழுப்பித் தொந்தரவு கொடுப்பேன். அதிகாலையிலேயே குளியல் முடித்து, புத்தாடை அணிவேன்: பிறகு பட்டாசும் கையும் தான். பட்டாசு என்றல் என் செல்லப் பிராணியான நாய்க்குத் தலைவலிதான்.

சாதாரணமாக நாய்க்கு வெடியைக் கண்டால் பிடிக்காது. ஆனல் நான் வேண்டுமென்றே அதன் முன்னல் பட்டாசைக் கொளுத்துவேன். பாவம், அதற்கு ஒரே நடுக்க மெடுத்துக் கொள்ளும். ஓடிப்போய் மேஜையின் கீழும், அறையிலும் புகுந்து கொள்ளும்.



பட்டாசுகொளுத்தும் ஒவ்வொரு முறையும் 'கொளுத்த வேண்டா' மென்று கால்களைத் தூக்கி சைகை மூலம் தெரியப்படுத்தும். எனக்கு அதைப்பார்க்க வேடிக்கையாய் இருக்கும். தீபாவளி அன்று என் அன்புப் பிராணி, தனக்கு வேண்டிய தீபாவளிப் பரிசை நாம் கொடுக்கும் வரை காத்திருக்காது. அதுவாகவே எடுத்துக் கொள்ளும்.

அன்று தீபாவளி இரவு. என் நாய் என்னை அடிக்கடி தண்ணீர் வேண்டுமென்று சைகை செய்து கேட்டது. வழக்கத்துக்கு மீறி அதிகத் தண்ணீர் குடித்தது. பிறகு படுத்துத் தூங்கி விட்டது. காலையில் எழுந்து மேஜை மீது, வைத்திருந்த இனிப்புப் பெட்டியைத் திறந்து பார்த்த போதுதான் விளங்கியது. என் அன்புப் பிராணி யாருக்கும் தெரியாமல் பெட்டியைத் திறந்து அத்தனை இனிப்பையும் தின்று விட்டு, பிறகு அலுங்காமல் அப்படியே பெட்டியை மூடி வைத்துவிட்ட அதன் சாமர்த்தியத்தை என்னவென்று சொல்வது! பிறகுதான் அது அதிகத் தண்ணீர் குடித்ததற்குக் காரணம் விளக்கியது.

# விஜயகுமாரி பற்றி கிருஷ்ணன்-பஞ்சு

'குலதெய்வம்' படத்தில் நாங்கள் விஜயகுமாரியை நடிக்க வைத்தபோது சற்றேறக் குறையப் பட்டை தீட்டப்படாத வைரமாக இருந்தார். அவருக்கேற்ற சந்தர்ப்பத்தை மீண்டும் அளிக்க நாங்கள் காத்திருந்தோம். அந்தச் சந்தர்ப்பம் குங்குமம் படத்தில் கிடைக்கவே விஜயகுமாரி இதில் நடித்தார். திரையுலக ரசிகர்களின் கனவுக் கன்னியாக கவர்ச்சிப் பாவையாக இல்லாவிட்டாலும் சிறந்த நடிகை என்று சொல்லுமளவுக்கு இவரிடம் நடிப்புத் திறமை இருக்கத்தான் செய்கிறது.

செட்டுக்கு வந்தால் இவர் சும்மா இருக்க மாட்டார். யாரிடமாவது ஒரு சப்ஜெக்டை எடுத்துக் கொண்டு அலசிப் பேசிக் கொண்டிருப்பார் ஆனல் வேலை என்று வரும்போது அதில் கண்ணும் கருத்துமாக இருப்பார். சொல்வதை எடுத்த எடுப்பிலேயேபுரிந்துகொண்டு விடும் தன்மை இவருக்கு இருந்தாலும் இரண்டு மூன்று முறைகளாவது தான் செய்யவேண்டியதை வற்புறுத்திக் கேட்பார்.



சொல்லும்போதே இவர் கொஞ்சம் கொஞ்சமாக மனதில் ஏற்றிக் கொண்டு விடுவார். அவ்வளவுதான்! பின்னர் சிறந்த முறையில் கச்சிதமாக நடித்து விட்டுப் போய்விடுவார். டைரக்டர் எது சொன்னலும் குறுக்கு கேள்வி போடாமல் பணிந்து நடக்கும் மேலான குணம் இவரிடம் உண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச் சாட்சி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று போட்டா போட்டியில் வந்தார்கள் (பெண்களை மட்டும் பெற்று வரதட்சிணைக்குக் கட்டுப்பட்டு வாழும் தந்தைகள்)பலர். பணம் பெருகியவர்கள்:

## (2)

கிட்டு வாத்தியார் மகன் மகாகெட்டிக்காரண்டி என்று பாட்டிமார்கள் தங்கள் பொக்கை வாயைத் திறந்து பேச ஆரம்பித்துவிட்டால் போதும். அந்த இடத்திலே என் சகதர்மிணியாளின் சீ. ஐ. டி. வேலை ஜரூராக நடக்கும்.

பாட்டிமார்களின் வாயெல்லாம் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸின் பெயர் வந்துவிட்டால் போதும். "கல்யாணமே செஞ்சுக்கிறதில்லே" என்று சொல்லிவந்த என் வீட்டுக்கு அடுத்த வீட்டு அபிராமி மகள் அம்புஜம் கூட இரகசியமாக... லைலா—மஜ்னு சினிமாவில் வரும் "வாண்மதி" பாடலை வாய்க்குள்ளேயே பாடத் தொடங்கிவிடுவாள். அம்புஜத்தைப் போல இன்னும் பலர் அன்று காலத்தை வெல்லக் காத்திருந்தார்கள். அப்படியே ஸ்ரீ தர்மதேவ ரசிக ரஞ்சனி நாடகசபா மானேஜர் என்ற உத்தியோக புருஷ லட்சணத்துடனும், கிட்டு வாத்தியாரின் பேரன் என்ற உரிமையுடனும், மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் அடிக்கடி கிட்டு வாத்தியாரின் வீட்டிற்கு வந்து போய்க்கொண்டிருந்தான்.

கிட்டுவாத்தியாருக்கு அவன் மீது உள்ளுக்குள் அவ்வளவு மதிப்பில்லையானாலும் வெளிப்படையாக அண்டை அயலாரிடம் தன் வளர்ப்புப் பிள்ளையின் முன்னேற்றத்தை வானளாவப் புகழ்ந்துவிடுவார்.

கிட்டு வாத்தியாரின் பேச்சில் ஈடுபாடுடையவர்கள் அவன் கல்யாண விஷயமாகப் பேச்சுக் கொடுத்தால் போதும் எல்லாம் எந்தெந்தக் காலத்தில் எப்படி எப்படி எது எது நடக்க வேண்டுமோ அந்தந்தக் காலத்தில் அது அது அப்படியப்படி நடக்கவேண்டும் என்று சொல்லி சாமர்த்தியமாகச் சமாளித்துவிடுவார்.

என்னவானாலும் வாத்தியாரல்லவா... அவர் மனச்சாட்சி சகாதேவனுக்காக இதயக் கோட்டையின் வாசலைத் திறக்க விடாமல் செய்தது.

இந்தக் கிட்டு வாத்தியார் மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸைப் பற்றி அக்கறை காட்டவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் பலர்.

முக்கியமாக என் சகதர்மிணி இந்த கிட்டுவாத்தியாரின் போக்கை அடிக்கடி சொல்லச் சொல்ல என்னால் நிம்மதியாக இருக்க முடியுமோ!

காலைக் காப்பியை ஓரேமூச்சில் தொண்டைக்குள் ஊற்றியபின் நேரே ஆபீசுக்குப் போனேன். எப்படியாவது மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸைப்பற்றி அலசி ஆராய்ந்து விட்டால் கிட்டு வாத்தியாரின் போக்கை அறிவதற்கு வாய்ப்புண்டாகுமே என்றுதான் நான் நினைத்ததாகும். ஆனால் நான் நினைத்ததற்கு மாறாக சம்பவங்கள் நடந்தன.

நான் ஆபீஸ் வாசலை அடைந்தபோது, ஸ்ரீதர்மதேவரசிகரஞ்சனி நாடகசபா சொந்தக்காரரும் 'யமன்' நடிகருமான திரு. தர்மதேவன் ஆபீஸ் வாசலில் எனக்காகக் காத்துக்கொண்டிருந்தார். நாடகத்தில் வேஷம் போடாமலே நடிக்கக்கூடிய அத்தனை அம்சங்களும் அவருக்கு அப்படியே அமைந்திருந்தன.

இருவரும் வணக்கப் பரிமாறுதல் செய்து கொண்டே ஆபீஸுக்குள் நுழைந்தோம். என் மேசைக்கு முன்னிருந்த நாற்காலியில் அவரை அமரும்படிச் செய்துவிட்டு என் ஆசனத்தில் அமர்ந்தேன். வந்த ஆசாமி ஏதும் பேசுவாரோ என்றால் என் முகத்தையே உறுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார்.

எப்படி சார் உங்கள் நாடகங்கள் நடக்கின்றன என்றேன். பரவாயில்லீங்க சார்... ...உங்கள் விமரிசனத்திலே எங்களுக்கு ஒரு குறைவுமில்லே சார். நல்ல வசூல்...நல்ல கூட்டம்...எனது நாடகசபாவின் புகழுக்கு நீங்கதானே சார் காரணமாயிருக்கிறீங்க... ...என்று சொல்லியவர்... ...அடுத்தபடியா சத்தியவான் சாவித்திரி நாடகம் போடுகிறதா உத்தேசம். அதிலே யமனாக நான் நடிப்பதாயிருக்கிறேன். மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் சத்தியவானாக நடிக்கிறார். தாங்கள் நிச்சயமா அதுக்கு சமுகமளித்துப் பரோபகாரியிலே பெருசா போடணும் சார்... ...என்றுகேட்டுக்கொண்டார்.

மிஸ்டர் சகாதேவன் பீ. ஏ. பேச்சு வந்ததும் சந்தர்ப்பத்தை நழுவவிடாமல் நடிகர் சார் நம்ம சகாதேவன் பீ. ஏ. ஹானர்ஸ் எங்கள் ஊர்க்காரர் என்று சொல்றுங்களே! அதுவும் என் பக்கத்து வீட்டு கிட்டு வாத்தியார் மகனுமே! இதைப்பற்றி ஏதாவது உங்களுக்குத் தெரிந்தால் சொல்லுவீர்களா என்றேன்.

திருவாளர் தர்மதேவன் முகத்தில் திடீர் மாற்றம் படர்ந்தது. அவர் தடுமாறுகிறார் என்பது புலப்பட்டது. என்றாலும்...அப்படித்தான் சார்...என்று மென்று விழுங்கி மேலும் கேள்விக்கு இடம் வைக்காமல் சார்...மன்னிக்கணும்...நாடகவேலை சாஸ்தியா இருக்கு எனக்கு விடை தாணும் சார்...என்று மேலும் பேச இடம் வைக்காமல் எழுந்து விட்டார் மிஸ்டர் தர்மதேவன். (யமன்).

புறப்பட்டுட்டீங்களா?... ...என்று கேட்டுவைத்தேன். அசட்டுக் கேள்விதான் என்றாலும் பதிலும் அப்படியே வந்தது....

'ஆமாம் சார்...தாங்கள் மட்டும் கட்டாயமாக வந்தாகணும். எங்கள் நாடகத்தைப் பத்தி நல்லா போடணும் சார்...' என்று சொல்லிக் கொண்டே விடை பெற்றுப் போய்விட்டார். நடிகர் தர்மதேவன்.

கிட்டு வாத்தியாருக்கும், சகாதேவனுக்கும் உள்ள தொடர்பும், உறவும் எனக்கு தெரிந்தாலும், கிட்டுவாத்தியார் தட்டிக்கழிக்கும் சகாதேவனின்கல்யாணப்பேச்சும், தர்மதேவனின் தடுமாற்றமும் புதுப் பிரச்சினைகளைக் கிளறி விட்டன. என் மூளை அபாரமாக வேலைசெய்தது.

கிட்டு வாத்தியார், தர்மதேவன், சகாதேவன் ஆகிய மூவருக்கும் இடையில் ஒரு இரகசியம் இருக்கிறது என்பதைமட்டும் நான் கண்டு பிடித்துவிட்டேன். இந்த இரகசியம் யாதாயிருக்கலாம் என்பதைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசியமாயிற்று. இதற்கு என் வாழ்க்கைத் துணைவிதான் சரியான சீ. ஐ. டி யாக மாறவேண்டும் என்ற முடிவுடன் மனத்தை ஆபீஸ்வேலையில் ஈடுபடுத்தினேன். அன்று மாலை நான் வீட்டிற்குப்போனதும், என் மனைவி ஒருகப் காப்பியை கேட்காமலே கொண்டு வந்து விட்டாள். அவளின் இந்தப் பண்பைக் கண்டதும் ஏதோ...தடயம் கிடைத்திருக்கிறது என்று தீர்மானித்தேன். என் எண்ணம் வீணாகவில்லை.

தெருக்கோடி வீட்டிலே வசித்துவந்த கிட்டு வாத்தியாருக்குப் பிள்ளையே கிடையாதென்றும், அவர் காசி யாத்திரைக்குப் போயிருந்தபோது ஒரு அனாதைக் குழந்தை கிடைத்ததாகவும் கிட்டு வாத்தியாரின் தத்துப்பிள்ளையே சகாதேவன் பீ. ஏ ஹானர்ஸ் என்றும், என் மனைவி தகவல் சேகரித்திருந்தாள். ஆனால் இது ஊரிலே பிரசித்தமில்லை. இந்தத் தகவல்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு மேலும் என் ஆராய்ச்சியைத் [illegible]

(அடுத்த வாரம் முடியும்)

# ராதிகாவின் தலைத்தீபாவளி

(10-பக்கத் தொடர்ச்சி)

திருமணம் செய்யாமல் இருந்திருந்தால் ஒருவேளை அவள் அவனைத் திருமணஞ் செய்து கொண்டிருக்கலாம். வாசுதேவனின் மனைவி கமலத்துக்குத் தான் அவளைக் கட்டோடு பிடிக்காதே.

"என்ன ராதிகா, மௌனம் சாதிக்கிறாய் என்னுடன் வரப் பிரியமில்லையா...?" வாசுதேவனின் குரல் அவளைத் திடுக்கிட வைக்கிறது.

பிரியமில்லாமல் என்ன...! நான்கு மணி விமானத்திற்குப் புறப்பட வேண்டும். அதுதான் ... அவள் முடிக்கவில்லை... ஓ உன் கணவர் சுகுமாரன் காத்து நிற்பான் என்று பயப்படுகிறாயா...?அதெல்லாம் டிறெக்டைமுக்குப் போய்க்கொள்ளலாம். அல்லது இன்று போகாவிட்டால்தான் என்ன? நாளை தானே தீபாவளி! காலைப் பிளேனில் புறப்பட்டால் முடிந்தது ..." என்று கண்டிப்புக் கலந்த கேலியுடன் கூறுகிறான் அவன்.

ராதிகாவுக்கு அதைக் கேட்கவே உடல் நடுங்குகின்றது... என்ன நாளைக்குப் போவதா...? முடியாது நான் இன்றைக்கே போக வேண்டும்... அவள் குரலில் பணிவு தொனிக்கிறது.

"பயப்படாதே ராதிகா... சரியாக நான்கு மணிக்கு உன்னை விமானத்தில் ஏற்றி விடுகிறேன... மகிழ்ச்சியா?"

ராதிகா நிம்மதியோடு சிரித்துக்கொள்கிறாள். மோட்டார் கால்பேஸ் ஓட்டலுக்குள் சென்று நின்றதும் இருவரும் இறங்கித் தங்களுக்கு வழக்கமாக ஒதுக்கப்படும் அறையை நோக்கிச் செல்கின்றனர். நேரம் போவது தெரியாமல் பேசிக்கொள்கின்றனர். ஆயினும் ராதிகா இடையிடையே கைக் கடிகாரத்தைப் பார்த்துக்கொள்கிறாள்.

"ஸார் நேரமாகிறது போகலாமா..." என்ற ராதிகாவின் குரல் கேட்டு வாசுதேவனிடம் இருந்து ஒரு ஏக்கப் பெருமூச்சு எழும்புகிறது. "கண்டிப்பாக நீ போகத்தான் வேண்டுமா ராதி...?" அவர் செல்லமாக அவளை அப்படித்தான் அழைப்பார்.

"நிட்சயமாகப்போகத்தான் வேண்டும்..." அவள் குரலில் உறுதி தொனிக்கிறது.

இருவரும் எழும்புகின்றனர். மோட்டார் இரத்மலானை விமான நிலையத்தை நோக்கிப் புறப்படுகிறது. இருவரும் மௌனமாகவே இறங்குகின்றனர். விமானம் புறப்படுவதற்கு இன்னும் ஐந்து நிமிடம் இருக்கிறது. திடீர் என ஒலிபெருக்கியில் ஒரு அறிவிப்பு. "இயந்திரக்கோளாறு காரணமாக இன்று புறப்படவிருந்த விமானம் புறப்பட முடியாமைக்காக வருந்துகிறோம். டிக்கட் எடுத்தவர்கள் அத்தனை பேரும் காலையில் புறப்படும் முதல் விமானத்தில் அநுமதிக்கப்படுவார்கள்." ராதிகா ஏக்கத்தோடு வாசுதேவனைப் பார்க்கிறாள்.

"பரவாயில்லை ராதிகா...... அதுவும் கடவுள் சித்தமென ஏற்றுக்கொள்ள வேண்டியது தான். வேண்டுமானால் உன் கணவருக்கு விமானம் 'கான்ஸல்' செய்யப்பட்டதை அறிவித்து விடு. நாளைக் காலையில் புறப்பட்டால் ஒரு மணி நேரத்தில் உன் கணவரிடம் சென்றுவிடலாம்... உம்... கமோன் சியர்அப்... நடந்து முடிந்ததைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன செய்வது."

ராதிகா மிகுந்த சோகத்துடன் டைறெக்டர் வாசுவைப் பின் தொடர்கிறாள். அவள் உள்ளத்தில் எழுப்பப்பட்டிருந்த பல்லாயிரம் கற்பனைக் கோட்டைகளும் சுக்கு நூறுகத் தரைமட்டமாகின்றன. அவள் கண்ணிலே தென்பில்லை. உள்ளத்தில் மகிழ்ச்சியில்லை. கவலையே உருவாக அவள் நடந்து மோட்டாரில் ஏறியதும் மோட்டார் புறப்படுகிறது.

திரும்பவும் அவர்கள் அதே ஓட்டலில் அதே அறைக்குச் செல்கின்றனர். ஓட்டல் சிப்பந்திகள் அவர்களைப் பார்த்துத் தங்களுக்குள்ளேயே ஏதேதோ பேசிக்கொள்கின்றனர். அன்றிரவு ராதிகா வாசுதேவனின் மனைவி குழந்தைகளுடனேயே காலத்தைக் கழிக்கிறாள் ராதிகாவுக்குத் திருமணமாகிவிட்டதால் வாசுதேவனின் மனைவியும் மிகவும் அன்புடன் அவளை உபசரிக்கின்றாள். நிம்மதியின்றியே ராதிகாவுக்கு அன்றைய இரவு கழிகின்றது.

அடுத்த நாட் பொழுது பட்டாஸ் சத்தங்களின் வரவேற்புடன் விடிகிறது. ராதிகா யாவருக்கும் முன்பாகவே எழுந்து விடுகிறாள். அன்றிரவு முழுவதும் அவள் தூங்கவேயில்லை. தன் காலைக் கடனை முடித்துக்கொண்டு விமானத்திற்குப்போகப்புறப்படுகிறாள். அதற்குள் வாசுதேவன் குடும்பத்தாரும் அவளுடன் எழுந்து அவளை விமான நிலையத்திற்கு அழைத்துச் செல்கின்றனர்.

விமானம் புறப்பட ஆயத்தமாகும் போது ராதிகா தன் ஆசனத்தில் அமர்ந்தபடியே வாசுதேவன் குடும்பத்தாரிடம் கையை அசைத்து விடைபெறுகிறாள். விமானம் பேரிரைச்சலுடன் புறப்படுகிறது. ஒன்றரைமணி நேரம் தன்னை மறந்த நிலையில் இருந்தவள் திடீர் என விமானம் குலுங்கியதால் திடுக்கிட்டுத் தன்னினைவு பெறுகிறாள். அப்போது தான் விமானம் திருக்கோணமலையை வந்தடைந்து விட்டதை உணர்ந்து பரபரப்புடன் விமானத்தை விட்டு இறங்குகிறாள்.

அவள் கண்களில் ஆவல் ததும்பவிமானப்படியில் நின்று கண்போன தூரம் வரை நோக்குகிறாள். அங்கே அவளுக்காக அவள் கார் காத்து நிற்கின்றது. ஆனால் சுகுமாரனைக் காணவில்லை. அவனுக்குப்பதிலாக ட்றைவர் பண்டா தான் நிற்கிறான். ஏமாற்றத்தோடு ட்றைவர் கார் பின் கதவைத் திறந்து விட ஏறி உட்கார்ந்து கொண்ட அவளுக்கு பெருமூச்செறிகிறது.

'ஏன் பண்டா, ஐயா எங்கே' அவளையும் அறியாமல் கேள்வி பிறந்து விடுகிறது.

ஐயா இரவு போனவர் இன்னும் திரும்பவில்லையம்மா... ட்றைவரின் பணிவான குரல்.

அவளுக்குப் பகீரென்றது. ஆயினும் தன் ஏக்கத்தை ட்றைவர் முன் காட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காக மௌனம் சாதிக்கிறாள்.

ஏதேதோ எல்லாம் எதிர்பார்த்து வந்தவளுக்கு எல்லாமே சூனியமாக இருக்கிறது. அவளுக்குத் தீபாவளி என்ற நினைவேயில்லை. சோகத்துடன் படுக்கையைச் சரணடைகிறாள். நேரம் போய்க் கொண்டேயிருக்கின்றது. திடீர் எனப் பேச்சரவங் கேட்டு ராதிகா வெளியே எழுந்து சென்று பார்க்கிறாள். அங்கே அரைகுடிமயக்கத்தில் சுகுமாரன் டாக்ஸியிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தான். அவன் கற்சிலையாகநிற்கவேலையாட்கள் இருவர் அவனைத் தாங்கிக் கொணர்ந்து அறையில் இருந்த படுக்கையில் விடுகின்றனர்.

ராதிகா அவன் பக்கத்தில் இருந்து அவன் தலையைக் கோதிவிடுகிறாள். 'இரவு நன்றாகக் களித்தாயா உனக்கென்ன... தலைத் ... தீபா ... வளியல்லவா ......' சுகுமாரன் அவளைப் பார்த்து பிதற்றுகிறான்.

ஐயோ...இதென்ன ... பேசுகின்றீர்கள்...நான் வருவதற்கு எவ்வளவோ முயற்சித்தேன் தெரியுமா...? விமானம் கான்ஸலாகி விட்டது...என்னை மன்னித்து விடுங்கள்..." ராதிகா கெஞ்சுகிறாள்.

அவன் சிரித்தபடியே கண்ணயர்ந்து விடுகிறான்.

'அப்பப்பா...இந்த சினிமாத் தொழிலுக்கு முழுக்குப் போட்டு விட்டால் தேவலை போல் இருக்கிறது. இனி நல்ல நாள் பெருநாளில் என்ன ஷூட்டிங் இருந்தாலும் போவதில்லை எனத் தீர்மானித்துக் கொள்கிறாள் அவள்.

அன்றையத் தலைத் தீபாவளிக்கு சுகுமாரன் தெளிவு பெறும் வரை அவள் பொறுமையுடன் காத்திருக்கின்றாள். அவள் விரும்பிய தலைத் தீபா ஒருபடி அரை குறையாக நிறைவேறிற்று.

(யாவும் கற்பனையே)

# மூதூர்த் தொகுதி மக்களுக்கு....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

டிய அவசியத்தை அங்கு செல்லும் எவரும் ஒப்புக்கொள்வர். எனக்கு இன்று போல் நினைவு இருக்கிறது ஒரு விடயம். 1962 ம் ஆண்டு நடைபெற்ற இடைத் தேர்தலின் போது கிண்ணியாவில் ஒரு கூட்டத்துக்குச் செல்வதற்காகக் கரையில் நாங்கள் காத்துக் கொண்டிருந்தோம்.

'அப்பொழுது எதிர்க்கட்சித் தலைவி அவர்கள் நடாத்திய கூட்டமொன்றின் நடுவில் நாங்கள் தாமதித்து நிற்க வேண்டிய விதத்தில் பாதை தாமதித்தது. இந்தக் காரணத்தினால் நாங்கள் அதிக நேரம் நிற்க வேண்டியவர்களாக இருந்தோம். இந்த விதமான அசம்பாவிதங்கள் எதிர்காலத்தில் ஏற்படாது, அதற்கொரு சிறந்த பாலம் அமைக்கப்பட்டால்.

'ஆகையால்கிண்ணியாவுக்கு மாத்திரமல்ல கிழக்கு மாகாணத்தின் கரையோரமாகப் பிரயாணத்திற்குக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு அதாவது திருமலைத் தொகுதியிலும் மூதூர் தொகுதியிலும் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களுக்கு நவீன போக்கு வரத்து வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். இந்தக் கடமையை அந்தத் தொகுதியின் பிரதிநிதிகள் எங்கு இருந்தாலும், அவர்கள் எதிர்க் கட்சியில் இருந்தாலும் சரி, அல்லது காலத்துக்குக் காலம் மாறி மாறி இருந்தாலும் சரி. ஒரே கொள்கையோடு இதே நோக்கத்தை அடைய அவர்கள் பணி புரிய வேண்டுமென்று கேட்டு எனது கட்சியின் சார்பில் மனப்பூர்வமாக இப்பிரேரணையை ஆதரிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் அரங்கு

## கல்வனியும் உவோற்ருவும்

மின்னேற்றங்களைப்பற்றி மக்கள் அறிந்திருந்தாலும் தொடர்ச்சியாகச் செல்லும் மின்னேட்டத்தைப் பற்றி பதினெட்டாம் நூற்ருண்டின் பிற்பகுதி வரையும் எவரும் அறிந்திருக்கவில்லை.

1876ஆம் ஆண்டில் கல்வனி என்னும் இத்தாலிய விஞ்ஞானி ஒருவர் மின்ஞேட்டத்தைப் பற்றி கண்டு பிடித்தார். ஒரு தவளையை இரும்புத் தகடு போட்டமேசையின் மீது வைத்துப் பரிசோதனை செய்து கொண்டிருந்தார் இவர். அப்போது பரிசோதனைக்கு அனுகூலமாகத் தவளையின் கால்களை செப்பு கம்பியினர் தகட்டை தொட நேர்ந்த போதெல்லாம் செத்த தவளையின் கால்களில் மின்னுல் (மின் சாரத்தால்) உண்டாகும் அதிர்ச்சி போன்ற ஒரு நடுக்கம் உண்டாவதைக் கண்டார். மேலும் பரிசோதனைகள் தவளையின் கால்களில் ஏற்பட்ட அதிர்ச்சி மின் அதிர்ச்சியே என்றும், அதற்கு வேண்டிய மின் சாரம் தவளையின் கால்களிலேயே உண்டாயிற்று என்றும் முடிவு செய்தார்.

இதைக் கேள்விப்பட்டு உவோற்ரு (Volta) என்னும் மற்ருெரு இத்தாலிய விஞ்ஞானி மின் சக்தி தவளையின் கால்களில் எப்படி உண்டாயிற்று என்று ஆராயத்தொடங்கினர். செப்புக் கம்பி, இரும்புத் தகடு தவளையின் கால்களில் காணப்படும் திரவம் இம் மூன்றுக்கும் இடையேயுள்ள ஒரு வித சம்பந்தத்தினுல்தான் மின்சாரம் உண்டாகிறது என்று கண்டு கொண்டார். இதனை ஆதாரமாகக் கொண்டு மின்ஞேட்டத்தைக் கொடுக்கும் மின் கலங்களை (Electric Cells) உருவாக்கினுர். இவரது மின் கலங்கள் தான் இப்போது உவோற்ரு கலங்கள் என அழைக்கப்படுகின்றன.

நா. சுப்பிரமணியம்,
திருமலை.

—

## கோவின் பெயரென்ன?

முதலாம் எழுத்து
சுத்தத்திலுண்டு
துக்கத்திலில்லை
இரண்டாவது எழுத்து
அக்காவிலுண்டு
அண்ணுவிலில்லை.
மூன்ருவது எழுத்து
அக்கினியிலுண்டு
நெருப்பிலில்லை.
நான்காவது எழுத்து
அரணிலுண்டு
மதிலில்லை.
ஐந்தாவது எழுத்து
கன்னத்திலுண்டு
முகத்திலில்லை.

### விடை

[illegible]

அனுப்பியவர்:
செல்வி. புவனு

## நம் நினைவில் நிற்பவர்

செல்வி ஆர். கடாட்சம்

அமெரிக்காவின் ஜனுதிபதியாக விளங்கிய ஜான் எஃப் கென்னடி நீக்ரோக்களுக்கு உரிமை வழங்குவதில் தன் உயிரையே பலிகொடுத்தார். அமெரிக்காவிலேயே ஜனுதிபதியாக இதுவரை காலமும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் வரிசையில் வயதில் குறைந்தவராகவும் செயல்வீரராகவும் நுண்ணறிவுபடைத்தவராகவும் விளங்கினுர். அவரது பேச்சுக்கள் மக்களை பெரிதும் கவர்ந்து இருந்ததில் வியப்பில்லை. அவரது ஆழ்ந்த அறிவுக்குச் சான்ருக அவர் கூறிய கருத்துக்கள் சிலவற்றை மாணவர்களாகிய நாங்களும் நினைவில் நிலை நிறுத்துவோம்.

போரும் அமைதியும்:- அமைதியை நிலை நாட்ட ஆயுதங்கள் மட்டும் போதாது? மக்கள் அதைக்காக்க வேண்டும். மக்கள் யுத்தத்தை ஒழிக்க வேண்டும். இல்லையேல் யுத்தம் மக்களை ஒழித்து விடும்.

மாறுதல்:- புயலின் மத்தி நாம் அசையாமல் நிற்க முடியாது. மாறுதல் என்னும் புயல் காற்று உலகில் வீசிவருகிறது. காலமும் உலகமும் அசைவற்று நிற்பதில்லை. மாறுதல், வாழ்க்கையின் விதியாகும். கடந்த காலம், அல்லது நிகழ் காலத்தை மட்டும் பார்த்துக் கொண்டிருப்போர் வருங்காலத்தை கோட்டை விட்டு விடுவார்கள்.

வயது:- அமெரிக்காவின் ஜனுதிபதியாக நான் ஒரு தடவையோ அல்லது இரு தடவையோ பதவிவகிக்கலாம். ஆனுல் நான் அதில் இருந்து விலகும்போது, தடுமாற்றமான வயதை எட்டி இருப்பேன். அப்போது வேறு புதிய தொழில் தொடங்க முடியாதபடி அதிக வயதாகியிருக்கும். எனது நினைவுக் குறிப்பை எழுதலாம் என்ருல் அதற்கான வயதாகி இருக்காது.

ஆட்சி:- அரசாங்க முயற்சிகள் மட்டும் ஒரு போதும் போதமாட்டா. இறுதியில் மக்களே முடிவு செய்து அவர்களே தமக்கு உதவி செய்து கொள்ள வேண்டும்.

விதி:- நாம் உருவாக்காத ஒரு உலகில் நாம் தொடங்காத ஒரு போராட்டத்தோடு வாழ வேண்டியிருப்பது இந்தத் தலைமுறையில் தலைவிதி. ஆனுல் வாழ்க்கையில் துன்பங்கள் எப்போதுமே ஒருவர் விரும்பி வருவதில்லை.

அரசாங்கம்:- அரசாங்கத்தில் எனக்குள்ள அநுபவத்தில் இருந்து சொல்கிறேன். காரியங்கள் தகராறு இல்லாமலும், இணைப்பாகவும், சீராகவும் நடக்கத்தவறில் வேலை அதிகம் நடைபெறவில்லை என்று தான் பொருள்.

வீரம்:- "ஜனுதிபதி தாங்கள் எப்படிப் போரில் ஓர் அரும் பெரும் வீரரானீர்கள்" என்று ஒருசிறுவன் கேட்டான். "அது முற்றிலும் தற்செயலானது" அவர்கள் எனது படகை மூழ்கடித்து விட்டார்கள் என்று நான் பதில் அளித்தார்.

மனித உரிமைகள்:- நமது முன்னேர்கள் எதற்காகப் போராடினுர்களோ அதே புரட்சிகரமான கொள்கைக்காகவே இன்னும் உலகம் போராட வேண்டி உள்ளது' அரசாங்கம் தாராளமனதுடன் வழங்குவதல்ல மனித உரிமைகள். அவை கடவுளின் அருட் கொள்கை என்பதே அக் கொள்கை.

கருத்துக்கள்:- மனிதன் மாண்டு போகலாம். நாடுகள் தோன்றலாம் மறையலாம் ஆனுல், கருத்துக்கள் நிலை பெற்று வாழ்கின்றன. அவை சிரஞ்சீவித் தன்மை பெற்றவை.

உரிமை:- எல்லா நாடுகளிலும் அது வளர்ந்தோங்கினுல் ஒழிய, அது ஒரு நாட்டில் மட்டும் வளர முடியாது.

பெண்கள்:- அரசியலில் நேரடியாக ஈடுபட்டுள்ள பெண்களைப் பற்றி எப்படி பேசுவதென்று எனக்கு எப்போதுமே அச்சம். அவர்களை பெண்என்று நினைத்துப் பேசுவதா? அல்லது அரசியல்வாதிகள் என்று பேசுவதா? எதை அவர்கள் விரும்புவார்கள் என்று தெரியவில்லை.

—

## கடல் மட்டத்திற்கு மேலுள்ள உயரம்:

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் ... | 11 அடி |
| மன்னுர் ... | 12 அடி |
| நீர்கொழும்பு ... | 6 அடி |
| காலி ... | 13 அடி |
| திரிகோணமலை ... | 99 அடி |
| நுவரேலியா ... | 6188 அடி |
| பதுளை ... | 2225 அடி |
| கண்டி ... | 1654 அடி |
| தியத்தலாவை... | 4140 அடி |

## ஒரு வருடத்தில் பெய்யும் மழை:

| | நாள் | மழை |
|---|---|---|
| யாழ்ப்பாணம் | 74 ,, | ,, |
| மன்னுர் | 66 ,, | ,, |
| நீர்கொழும்பு | 104 ,, | ,, |
| காலி | 197 ,, | ,, |
| திரிகோணமலை | 107 | ,, |
| நுவரேலியா | 202 ,, | ,, |
| பதுளை | 126 ,, | ,, |
| கண்டி | 190 ,, | ,, |
| தியத்தலாவை | 171 ,, | ,, |

தொகுப்பு:
பே. மகேசுவரி
கல்லூரன்

## தமிழ்

—கல்லூரன்—

ஆறு அலை கடல் ஏரியெலாம் மேவி
அசைகின்ற தென்றலில் ஆடி வந்தேன்
கூறும் புலவனின் நாவில் நிதம் நின்று
குறைகளைத் தீர்த்து நான் வாழ்ந்து வந்தேன்!

மாதவியின் மடி மீதினிலே வினை
யாடி வந்தேன்! புவியாள வந்தேன்
நீது செய் பாண்டியனை யழித்தே யேட்டில்
தீஞ்சுவை கூட்டியே ஏறி வந்தேன்

சீதன வைகையிலே எதிரேறியே
செந்தணற் றீயிலே உயிர்த்தும் நின்றேன்!
ஆதியந்த மென ஏது மிலா என்னை
'அன்னை தமிழ்' என்றே கூறுவீரே!

தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க
காவாக்காற்
தன்னையே கொல்லும் சினம்

## உலக நாடுகளின் தேசிய தினங்கள்

— 'முகில்வண்ணன்' —

| | |
|---|---|
| கியுபா | ஜனவரி 1 |
| சூடான் | ஜனவரி 1 |
| பர்மா | ஜனவரி 4 |
| அவுஸ்திரேலியா | ஜனவரி 26 |
| இந்தியா | ஜனவரி 26 |
| நியு சிலன்ட் | பெப்ருவரி 6 |
| நேபாளம் | பெப்ருவரி 18 |
| டென் மார்க் | மார்ச் 11 |
| பாக்கிஸ்தான் | மார்ச் 23 |
| கிறீஸ் | மார்ச் 25 |
| கங்கேரி | ஏப்ரல் 4 |
| சிரியா | ஏப்ரல் 17 |
| ஜப்பான் | ஏப்ரல் 29 |
| நெதெலாண்ட்ஸ் | ஏப்ரல் 30 |
| செக்கொஸ்லெவேக்கியா | மே 9 |
| இஸ்றேல் | மே 9 |
| நோவே | மே 17 |
| ஆஜென்ரைன | மே 25 |
| ஆப்கனிஸ்தான் | மே 27 |
| இத்தாலி | ஜூன் 2 |
| போத்துக்கல் | ஜூன் 10 |
| பிலிப்பைன்ஸ் | ஜூன் 12 |
| கானு | ஜூலை 1 |
| கனடா | ஜூலை 1 |
| ஐக்கிய அமெரிக்கா | ஜூலை 4 |
| மொங்கோலியா | ஜூலை 11 |
| பிரான்ஸ் | ஜூலை 14 |
| ஈராக் | ஜூலை 14 |
| ஸ்பெயின் | ஜூலை 18 |
| பெல்ஜியம் | ஜூலை 21 |
| போலண்ட் | ஜூலை 22 |
| ஐ. அரபுக் குடியரசு | ஜூலை 23 |
| லிவெறியா | ஜூலை 26 |
| சுவிற்சலாந்து | ஆகஸ்ட் 1 |
| இந்தோனேஷியா | ஆகஸ்ட் 17 |
| றுமேனியா | ஆகஸ்ட் 23 |
| மலேசியா | ஆகஸ்ட் 31 |
| பிரேசில் | செப்ரெம்பர் 7 |
| பல்கேரியா | செப்ரெம்பர் 9 |
| மெக்சிக்கோ | செப்ரெம்பர் 16 |
| சைல் | செப்ரெம்பர் 18 |
| மக்கள் சீன | ஒக்டோபர் 1 |
| ஈரான் | ஒப்டோபர் 26 |
| ரேக்கி | ஒக்டோபர் 29 |
| சோவியத் ரஷ்யா | நவம்பர் 7, 8 |
| சுவிடன் | நவம்பர் 11 |
| லிபேனன் | நவம்பர் 22 |
| யுகொஸ்லேவியா | நவம்பர் 29 |
| தாய்லாந்து | டிசம்பர் 5 |
| பின்லாந்து | டிசம்பர் 6 |
| தங்கனிகா | டிசம்பர் 9 |

## இவை தெரியுமா?

உலகிலே மிக நீண்ட ஆறு எது? அதன் நீளம் யாது?

மிசிசிப்பி, 4222மைல்.

உலகிலே மிக உயர்ந்த நீர் வீழ்ச்சி எது? அதன் உயரம் யாது?

தூல்கா. 2810அடி.

உலகிலே பெரிய வனுந்தரம் எது? அதன் பரப்பு யாது?

சகாரா வனுந்தரம்; 3,00,00,00 சதுரமைல்.

உலகிலே மிகப் பெரிய பட்டணம் எது?

இலண்டன்.

உலகிலே முதன் முதல் ஆங்கிலக் கவி கள் எழுதியவர்.

சோசர்.

உலகிலேபே பேர் கணித வல்லவர் யார்?

ஐன்ஸ்ரின்.

உலகிலேயே மிகப்பெரிய ஆறு எது? அதன் வடிநில பரப்பு யாது?

அமேசன். 23,68,000 ச. மைல்.

உலகிலே மிகப் பெரிய எரிமலை எது? அதன் உயரம் யாது?

சிம்பராசோ. 23,700அடி.

அனுப்பியவர்:—
மா. குலேந்திரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எல்லோருக்கும் எமது தீபாவளி வாழ்த்துக்கள்!

— சினிமாஸ் லிமிட்டெட்

தீபாவளியை மகிழ்ச்சியுடன் கொண்டாட

## இப்பொழுது காட்சிதருகிறது!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) மைலன் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) விஜிதா (அட்டன்) மொடேன் (பண்டாரவளை)



மொடேன் (பதுளை) சந்தியா (கம்பளை)

* எம். ஜி. ஆர்.
* ஜெமினி கணேசன்

ஜெயலலிதா, ஐயந்தி, நாகேஷ், நம்பியார் அசோகன் நடிக்கும்

தேவர் பிலிம்ஸ்சாரின்

# முகராசி

## 6வது வாரம்



கிங்ஸ்லி (கொழும்பு) லட்சுமி (காவெட்டி) ஜோதி (கலகா)
லட்சுமி (இரத்தினபுரி) திவொளி (நாரளை)

ஜெய்சங்கா, ஜமுனு
நாகேஷ் நடிக்கும்

# குழந்தையும் தெய்வமும்

## ஜனத்திரள் மிருந்த தியேட்டர்களில் காட்சிதருகிறது

செல்லமகால் (கொட்டாஞ்சேனை) ஈரோஸ் (பாமன்கடை) வின்சர் (யாழ்ப்பாணம்) இம்பீரியல் (மட்டுநகர்) நெல்சன் (திருமலை) கிங்ஸ் (பதுளை)
ரீகல் (கண்டி) ரீகல் (கம்பளை) சூஷிதா (தெனியாய)



இதற்குமுன் இத்தனை முன்னணி நடிகர்களும் ஒரு படத்தில் சேர்ந்து நடித்ததில்லை.

சிவாஜி கணேசன், பத்மினி,
முத்துராமன், தேவிகா,
எஸ். எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி
நாகேஸ், மனோரமா, சிவகுமார்,
புஷ்பலாதா, ஜெயலலிதா, ஸ்ரீராம,
சுந்தரராஜன், மனோகர், ராமதாஸ்
வி. ஆர்.ராஜகோபால், வி.கே.ராமசாமி
நடிக்கும்



# தாயே உனக்காக

'பலாட் ஆப் ஏ சோல்யர்' என்ற ரஷ்யநாவலைத் தழுவியது

## தித்திக்கும் தீபாவளித் திரைவிருந்து!!



காலமெல்லாம் கருத்தில் நிலைத்து நிற்கும் காலத்திற்கேற்ற கருத்தோவியம்!
உள்ளத்தைத் தொடும் உணர்ச்சிமிக்க சம்பவங்கள் பலவற்றைக் கொண்ட உயிரோவியம்!!
திரைப்பட ரசிகர்களுக்கு எல்லாம் நிறைந்த சொல்லொணு விருந்து!!

செண்ட்ரல் (மருதானை) நவா (கும்பனித்தெரு) ராணி (யாழ்ப்பாணம்)

ராஜேஸ்வரா (மட்டுநகர்) ஆனந்தா (கம்பளை) மீபுர (நீர்கொழும்பு) மனோகரா (யாழ்நகர்) (5நாள்மட்டும்)

★ ஜெய்சங்கர் ★ ஆதித்தன் ★ தங்கவேலு ★ (வெண்ணிறஆடை) மூர்த்தி
★ வாணிஸ்ரீ ★ ஜெயந்தி மற்றும் பலர் நடித்த

சிட்டாடலின்

# காதல் படுத்தும் பாடு

டைரக்ஷன்: ஜோஸப் தளியத் இசை: ரி. ஆர். பாப்பா


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1967-ம் வருடம் நவம்பர் மாதம் 1-ம் திகதி புதன்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org